Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 12.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்-14 வெள்ளி-20 11-17 ஜூலை 2003



கரும்புலிகள் நாளில்

## பிந்துனுவெவவின் நீதி தமிழர்களை அழவைக்கவா?





## இடைக்காலத்திற்காய்...

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 11.07.2003

# தனிமரம் தோப்பாகாது

தமிழர் விடுதலைக்கூட்டணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் கூட்டணி தனித்துவ எண்ணத்தை தவிர்த்து புலிகளின் வழிசெல்லும் என கூட்டணியின் பெரும்பான்மையினரின் ஆதரவுடன் தீர்மானிக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களிற்கான புலிகளின் தலைமைத்துவத்திற்கு கிடைத்த அங்கீகாரமாகவே கொள்ள வேண்டும்.

தமிழ் கூட்டமைப்பில் இருந்து கூட்டணியை எப்படியாவது வெளியேற்றிவிட வேண்டும் என்பதிலும் கூட்டணியை புலிகளிற்கு எதிரானதொரு நிலைப்பாட்டை கொள்ளவைக்க வேண்டும் என்பதிலும் இந்தியாவும், சனாதிபதி சந்திரிகாவும் என பலமான முயற்சிகள் மேற்கொண்டபோதும் அது கைகூடாமல் போயிருக்கிறது.

புலிகளிற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருக்கும் சக்திகளுக்கு கூட்டணியின் இந்த நிலைப்பாட்டை நிச்சயம் ஜீரணித்திருக்க முடியாது.

கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியைக் கொண்டு புலிகளிற்கு எதிரான கருத்துகளை விதைத்து வெற்றிகொள்ளலாம் என்பது இப்போது வலுவிழந்து போய்விட்டது.

ஏனென்றால் இப்போது ஆனந்தசங்கரி தனித்துப்போய் விட்டார் என்றே கொள்ள வேண்டும். அவர் வெறும் சம்பிரதாயபூர்வ கட்சித்தலைவர் என்ற வகையில் மட்டுமே விடப்பட்டுள்ளார்.

புலிகளின் ஆயுத போராட்டமும் இராணுவலிமையுமே இன்று தமிழினத்திற்கு உரியதை- உரிமையை வழங்கியே தீரவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு அரசுத்தரப்பைத்தள்ளி விட்டிருக்கிறது என்பதை கூட்டணியினர் பிரதிபலித்திருப்பது யதார்த்தத்தை புரிந்து கொண்டிருப்பதையே காட்டுகிறது.

தமிழினத்தின் நல்லெண்ணத்தைக் கருத்திற்கொண்டு இன ஒற்றுமையைப் பேணி செயற்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியதே.

இந்தநிலையில் இன்றைய வரலாற்றுச் சூழ்நிலையில் கட்சி பேதங்களிற்கு அப்பால் தமிழினத்தின் எதிர்காலநலனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டிய வரலாற்றுக்கடமை எல்லோரிற்குமே உண்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த கால தமிழினத்தின் அரசியல் வரலாற்றில் இழைக்கப்பட்டதவறுகளை இனியும் தொடர்ந்தால் மேலும் தமிழினம் அல்லலுற வேண்டியேற்படுமே தவிர வேறெதனையும் சாதித்துவிட முடியாது.

ஆகவே கூட்டணியும் பெரும்பான்மையினர் புலிகளின் வழி செல்லவேண்டும் என்பதை வலியுறுத்தி இருப்பது நிச்சயம். தமிழினத்தின் விடுதலை நோக்கிய சரியான பாதையை தேர்ந்தெடுத்து விட்டதையே காட்டுகிறது.

இதன் மூலம் கூட்டணியினர் தமக்குக் கிடைத்த பிற அழுத்தங்களைநாகரீகமான முறையில் வெற்றி கொண்டுவிட்டார்கள் என்றே கூறவேண்டும்.

கட்டளை அதிகாரியின் அஞ்சலி



## தூரனின் பார்வை

# அவர்கள் சொன்னது பற்றி... மேலும் சொல்ல வேண்டியவைகள்...

"இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபை வழங்கப்படல் வேண்டும்."

கடந்த வாரத்தில் இக்கருத்து வலியுறுத்தலானது தென்பகுதியைச் சேர்ந்த இரு முக்கியஸ்தர்களிடம் இருந்து வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேற்குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்தியுள்ள இருவரில் ஒருவர் அஸ்கிரிய பௌத்தமத பீடாதிபதி-வண.மகாகடவெல புண்ணிய காரதேரர். மற்றவர் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார.

முன்னவர் தென்பகுதியில் இருந்தும்,பின்னவர் வடபகுதியில் நின்றும் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்கள்.

நல்ல விடயம்தான்-

விடுதலைப்புலிகளும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றின் அவசியம் குறித்து மிகவும் வலியுறுத்திக் கூறிவருவதுடன், மீண்டும் பேச்சு வார்த்தைகளில் ஆக்கபூர்வமான நம்பிக்கையுடன் தொடங்குவதற்கும், வடக்கு- கிழக்கின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு முறையில் நடத்துவதற்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு இன்றைய காலகட்டத்தில் ஒரு தவிர்க்க முடியாத தேவையாகிவிட்டது குறித்தும் அரசுக்கும், சமாதான அனுசரணையாளர்களுக்கும் ஏனைய சர்வதேச சமாதான ஆர்வலர்களுக்கும் விளக்கமாகக் கூறியும் உள்ளனர்.

விடுதலைப்புலிகளின் கோரிக்கையின் நியாயத்தன்மையை எவரும் இதுவரை நிராகரித்ததும் இல்லை.

ஆனாலும் அத்தகைய கட்டமைப்பொன்றினை ஏற்படுத்துவதில் அரசுக்கு வழமையான பேரினவாத அழுத்தங்களும், சனாதிபதியின் அச்சுறுத்தல்களும், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பிரச்சார நடவடிக்கைகளும் பெரும் தடையாக இருப்பதும் வெளிப்படையான விடையமேயாகும்.

ரணில் தலைமையிலான தற்போதைய அரசு இடைக்கால நிர்வாகத்தை முழுமையாகவோ அல்லது அரைகுறையாகவோ தற்போதைய அவர்களின் நிலையில், ஏற்றுக்கொள்ள முன்வந்தாலும் கூட இதனை அவர்களின் ஆத்மார்த்தமான உணர்வின் வெளிப்பாடாக தமிழ் மக்கள் நம்பப்போவதில்லை.

கடந்தகாலங்களில் இனப்பிரச்சினை தொடர்பான சில முடிகளை மேற்கொள்ள முயன்ற வேளைகளில், அப்போது எதிர்க்கட்சியாக விளங்கிய, இதே ஆளும்கட்சி அவற்றையெல்லாம் மூர்க்கத்தனமாக எதிர்த்த வரலாற்றை தமிழ் மக்கள் அவ்வளவு சுலபமாக மறந்து விட மாட்டார்கள்.

சிங்கள தேசமும், தமது அரசியல் அபிலாசைகளும், தற்போதைய சூழலில் போரின் பேரழிவுகளில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டுமானால் சமாதானம் பற்றிப்பேசவேண்டியது அவசியம் என்பதை ஆட்சிப்பீடம் ஏறிய ரணில் தலைமையிலான அரசு விருப்பற்ற முறையில் என்றாலும் உணர்ந்துள்ளமையே இன்றைய சமாதானச் சூழல் ஏற்படக் காரணம் என்பதே யதார்த்த நிலையாகும்.

இது தமிழர்களின் உரிமைகளை வழங்கி, அவர்களின் அரசியல் அபிலாசைகளை நியாயபூர்வமாக- தீர்த்து சுயநிர்ணய உரிமையுடன் கூடிய நிரந்தரமான அரசியல் தீர்வொன்றை மனப்பூர்வமாக வழங்கும் இலக்குடன் ஏற்பட்ட மனமாற்றமேயல்ல....

அத்தகைய தெளிந்த மனப் பக்குவம் இன்னமும் முழுமையாக பேரினவாத மயக்கத்திலிருந்து விடுபடாத சிங்கள அரசியல் தலைமைகளுக்கு ஏற்படவில்லை... என்பதும் தெளிவு.

இல்லையென்றால் இடைக்கால நிர்வாகத்திற்கே இந்த இழுபறிநிலை ஏற்பட்டிருக்காது.

ஒருகாலத்தில் 'ஒரு மொழியென்றால்' இருநாடு.... 'இருமொழி' யென்றால் 'ஒரு நாடு' என்று சோசலிச தத்துவம் பேசிய இடதுசாரிப்பிரமுகரான கொல்வின் ஆர்.டி. சில்வா 'சிறிமா' ஆட்சியில் சட்ட அமைச்சரானதும் எழுதிய அரசியல்யாப்பு பேரினவாதிகளுக்கு உத்வேகம் அளிக்கும் ஒன்றாகவே அமைந்தது.

சோசலிசம் பேசிய பேரினவாதியே தான் என்பதை அவர்தனது செயலின் மூலம் நிரூபித்திருந்தார்.

அவரின் கொள்கைகளை அடியொற்றி லங்காசமசமாஜக் கட்சியூடாக அரசியல் பிரவேசம் செய்தவர்தான் வாசுதேவா.

இடையில் ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட்டார் என்பதற்காக 1971 ஜே.வி.பி கிளர்ச்சியின்போது கைதாகி சிறையிலும் இருந்தார். விடுதலையாகி- மீண்டும் சமசமாஜக்கட்சியில் இணைந்து, அதிருப்தியுற்றுவிலகி, நவசமசமாஜக்கட்சியை ஆரம்பித்து அதிலிருந்தும் பிரிந்து..... இப்படியாக... இப்போது புதிய சனநாயகக் கட்சியின் தலைவராகியுள்ளார்.

கொள்கை அடிப்படையில் சில குழப்பங்கள் அவ்வப்போது அவரிடம் காணப்பட்டாலும் தமிழர் உரிமைகள் தொடர்பான கருத்துக்களில் ஓரளவு உறுதிப்பாட்டைக் கடைப்பிடித்து வந்துள்ளார் என்றே கூற வேண்டும். அதற்கு அவர் எந்த அரசிலும் தொடர்ந்து பதவி வகிக்காததும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இப்போது அவர் யாழ்நகரில் வைத்து இடைக்கால நிர்வாகம் குறித்த தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

இக் கருத்து சிங்கள மக்கள் மத்தியிலும், சர்வதேச சமூகத்திலும் ஓங்கி உரைக்க வேண்டியதே இன்றைய தேவையாகும். வடபகுதி மக்களினைத் திருப்திப்படுத்த யாழ்ப்பாணத்தில் வைத்து இதனைக்கூற வேண்டிய தேவையேயில்லை.

தமிழ் மக்கள்.... அதுவும் உணர்வுள்ள தமிழ்மக்கள் உண்மையின் குரலை அது எங்கிருந்து ஒலித்தாலும் புரிந்து கொள்வர்.

அடுத்தவர் அஸ்கிரிய பீடாதிபதி.

'பேரினவாத' சக்திகளுக்கெல்லாம், அரசுத் தலைமைகளுக்கெல்லாம் ஆசீர்வாதம் வழங்கி வாழ்த்தும் மும்மணிகளில் ஒருவர்.

பௌத்த சிங்கள ஆன்மீக பீடம் ஒன்றின் பலம் பொருந்திய, தலைவர். அவர் 'சொன்னால்' அதை பௌத்த சிங்கள மக்கள் பயபக்தியுடன் நம்பியேற்பார்கள்.

அவரும் இடைக்கால நிர்வாகம் குறித்த தனதுகருத்தை வெளியிட்டுள்ளார்.

ஆனாலும் அவர் இலங்கையில் 'அரசியல் யாப்புக்குட்பட்ட இடைக்கால நிர்வாகம்' என அதனை அழுத்திக் கூறியதன் மூலம் ஒரு 'பொம்மை நிர்வாகத்தை' வழங்கலாம் என்பதையே பூடகமாக வலியுறுத்தியுள்ளார்.

நல்ல விடயங்களை நல்லமனதோடு சொல்வதே நல்லது. குள்ளமனதோடு அல்ல...

தமிழ் மக்கள் விரும்புவது 'தலையாட்டிகளாக வாழும் ஒரு வாழ்வையல்ல' உரிமையுடன் சட்டஅங்கீகாரத்துடன் கூடிய நிர்வாகக்கட்டமைப்பும் கீழான ஒரு வாழ்க்கையையே.... அவற்றை எவரும் வெறும் வார்த்தைகளால் வழங்குவதை அவர்கள் நம்ப மாட்டார்கள்... ஏற்கவும் மாட்டார்கள்.

இடது சாரிகளும், பௌத்தபீடங்களும் இதனை உணர்ந்து செயற்படுவது காலத்தின் அவசியமாகும்.

# இடைக்கால நிர்வாகசபை

# ஒரு கனிந்துவரும் யதார்த்தம்?

நிலாந்தன்

கடந்த ஆண்டு கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவரும் அதிகாரிகளும் கிளிநொச்சிக்கு வந்து போனார்கள். இங்கே அவர்கள் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக்கதைத்தார்கள். இச்சந்திப்புத் தொடர்பாக பிரிட்டிஷ் தூதரக வட்டாரங்களில் இருந்து கசிந்து வந்த தகவல் இது....

இச்சந்திப்பின்போது ஒரு கட்டத்தில் பிரிட்டிஷ் தூதுவர் தமிழ்ச்செல்வனிடம் கேட்டாராம்.... முஸ்லிம்களின் பிரச்சினைக்கு உங்களுடைய தீர்வு என்னஎன்று. அதற்கு தமிழ்ச்செல்வன் சொன்னாராம்.... நீங்கள்தான் இந்தத் தீவை சுமார் ஒன்றரை நூற்றாண்டு ஆண்டவர்களாச்சே உங்களுக்கு யதார்த்தம் தெரியும்தானே என்றதொனிப்பட.

இதுபற்றி பின்னர் தனது அதிகாரிகளுடன் கதைத்த பிரிட்டிஷ்தூதுவர் தான்கேட்டகேள்விக்கான பதிலைதன்மீதே உருட்டிவிடும் அளவுக்கு புலிகள் முன்பைவிட இப்பொழுது மிகவும் முதிர்ச்சி யானவர்களாகக் காணப்படுகிறார்கள். என்றதொனிப்பட வியப்புடன் கூறினாராம்.

இப்படி அவர்களே ஒப்புக் கொள்ளும் ஒரு முதிர்ச்சியை கவனத்தில் எடுத்துத்தான் ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டைக் குறித்த தமது ஆலோசனைகளை அவர்கள் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு கூறுவார்களோ என்னமோ?

கிடைக்கும் செய்திகளின் படி பிரிட்டிஷ் அரசாங்கம், ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டிற்குரிய ஆலோசனைகளை வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த நூற்றாண்டில் இரு இனங்களையும் பிரித்து ஆண்டவர்கள் இந்த நூற்றாண்டில் இரு இனங்களையும் சேர்த்து வைத்து ஆளும் ஒரு மூலோபாய மாற்றத்திற்கு வந்திருப்பது ஒரு சுவையான வரலாற்று முரணே.

மேலும் இதில் பிரிட்டனுக் குள்ள அடிப்படைத்தகுதியாக கருதப்படுவது, அவர்கள் ஐரிஷ் பிரச்சினையில் சாதித்திருக்கும் சுமார் நான்கு ஆண்டுகால யுத்தநிறுத்தமே.

ஆனால் ஐரிஷ் பிரச்சினையின் களயதார்த்தம் வேறு ஈழப்போரின் கள யதார்த்தம் வேறு. (இது கடந்தவாரம் இப்பத்தியில் ஆராயப்பட்டது)

எனவே ஐரிஷ் அனுபவங்களுக்கு ஊடாக ஈழப்போருக்கு ஒரு இடைக்காலத் தீர்வைக் காண்பது சாத்தியப்படப்போவதில்லை.

ஆனால் எது எவ்வாறாயினும் ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டிற்குப்போகுமாறு அரசாங்கத்தின் மீதான மேற்கு நாடுகளின் அழுத்தங்கள் அதிகரித்துவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் இடைக்கால நிர்வாகத்துக்கு ஆதரவாக முதலில் பகிரங்கமாக கருத்துக்கூறியநாடு நோர்வேதான். ரோக்கியோ மாநாட்டுக்கு சிறிது முன்பு ஜப்பானில்வைத்து நோர்வீஜியப் பிரதமர் அதைக் கூறியிருந்தார்.

பின்னர் இதுவிசயத்தில் ஜப்பானும் ஓரளவுக்கு ஆதரவாகக் கதைக்கத் தொடங்கியது.

இப்பொழுது பிரிட்டன் அமெரிக்கா போன்ற ஏனைய மேற்கு நாடுகளும் ஏதாவது ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டை உருவாக்கவேண்டியிருக்கும் களயதார்த்தத்தை ஒப்புக்கொள்வது போல தோன்றுகின்றது.

இதில் ஒன்றை முக்கியமாக கவனிக்க வேண்டும். ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டைப் பற்றி அவர்கள் அதிகம் அலட்டிக் கொள்வதற்குக்காரணம் அவர்கள் தமிழர்கள் மீதுகொண்ட அன்பினால் அல்ல. மாறாக, கடந்த ஒன்றரைவருடகால சமாதான முயற்சிகள் முறியுமாக இருந்தால் இந்தப்பிராந்தியத்தில் தமது வர்த்தக விரிவாக்கத்துக்கு அது தடையாகிவிடும் என்பதனால்தான். அதோடு, மனிதக்குண்டுகள் அற்ற ஒரு உலகத்தைப் படைக்கும் தமது முயற்சிகள் சறுக்கிவிடும் என்பதனாலும்தான்.

அவர்களுக்கு இப்பொழுது இலங்கைத்தீவில் அமைதிவேண்டும். எதன்பேரிலாயினும் யுத்தத்தை இன்னும் சில ஆண்டுகளுக்காவது ஒத்திவைத்துவிட்டால் சரி. ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பின்மூலம் யுத்தத்தை ஒத்திவைக்கலாம் என்றொரு நிலமை இருக்கும் போது அதைத்தவறவிடக்கூடாது என்று அவர்கள் நம்புகிறார்கள்.

**ஈழப்போரின் கள யதார்த்தத்தின்படி சமாதானம் செய்வது என்பது யுத்தத்தை ஒத்திப்போடுவதான். எதுவரை ஒத்திப்போடலாம் என்பது அந்தந்தக் காலகட்டங்களில் நிலவும் அகப்புறநிலைமைகளைப் பொறுத்த விசயம்.**

ஆனால், இதற்குப் பின்னால் ஒரு பயங்கரமான வியாபாரம் இருக்கிறது. சிங்களச் சனங்களும் சிங்கள அரசியல்வாதிகளும் இடைக்கால நிர்வாக ஏற்பாட்டிற்கு இணங்கி வருவது என்பது தமிழர்கள் மீதுள்ள அன்பினால் அல்ல. மாறாக, ரோக்கியோவில் வாக்களிக்கப் பட்டகாசைகைக்கு எடுப்பதென்றால் நிலவும் அமைதியை எதுவிதத்திலாவது நீட்டித்துக் காட்ட வேண்டும். அதற்கு புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கைக்கு ஓரளவுக்கேனும் இணங்கினால் மட்டும்தான் வழியுண்டு. எனவே வாக்களிக்கப்பட்ட காசைகைக்கு எடுப்பதற்கான ஒரு தந்திரோபாயமாகவே அவர்கள் ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டுக்கு இணங்கி வந்திருக்கிறார்கள்.

எனவே இதில் சம்பந்தப்பட்ட எல்லா சக்திகளும் ஒரு புள்ளியில் சந்திப்பது தெரிகிறது. வெவ்வேறு இலக்குகளோடாயினும் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரது அபிலாசைகளும் இப்படி ஒரு புள்ளியில் - இடைக்கால நிர்வாக ஏற்பாட்டில் - வந்து சந்தித்திருப்பது என்பது ஈழப்போரைப் பொறுத்தவரை முன்னெப்பொழுதும் காணப் பட்டிராத ஓரம்சம்.

இது ஒரு இடைக்கால ஏற்பாடுதான். ஆனாலும் இதுவிசயத்தில் ஓரளவுக்கு இந்தியாவையும் எதிர்க்கட்சிகளையும் தவிர மற்றெல்லா சம்பந்தப்பட்ட சக்திகளும் அதாவது - புலிகளும் அரசாங்கமும் மேற்கு நாடுகளும் ஓரளவுக்கு சிங்கள வெகுசனமும் ஒரு புள்ளியில் சந்தித்திருப்பது என்பது மிகவும் அபூர்வமான ஒரு விசயமே.



இடைக்கால நிர்வாக ஏற்பாடு எனப்படுவது ஒரு புலிகள் தரப்புக் கோரிக்கையாக இருப்பதுவும் அவர்களுக்கு மிகவும் வசதியாகிவிட்டது. இதன்மூலம் மேலும் எவ்வளவு காலத்திற்கு யுத்தத்தை ஒத்திப்போட முடியுமோ அவ்வளவு காலத்துக்கு யுத்தத்தை ஒத்திவைத்துவிடலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

ஈழப்போரின் கள யதார்த்தத்தின்படி சமாதானம் செய்வது என்பது யுத்தத்தை ஒத்திப்போடுவதுதான். எதுவரை ஒத்திப் போடலாம் என்பது அந்தந்தக் காலகட்டங்களில் நிலவும் அகப்புறநிலைமைகளைப் பொறுத்த விசயம்.

இதில் இன்னும் ஒன்றை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இடைக்கால நிர்வாக ஏற்பாட்டுக்கு சிங்கள வெகுசனம் காட்டிவரும் எதிர்ப்பு வரவர குறைந்து கொண்டு வருவது போல தோன்றுகிறது. குறிப்பாக ஒரு மகாநாயக்க தேரரே இடைக்கால நிர்வாக ஏற்பாட்டுக்கு ஆதரவாகக் கதைத்திருக்கிறார்.

அண்மைக்காலங்களில் குறிப்பாக, ரோக்கியோ மாநாட்டுக்குப்பின் ரணிலும் அவருடைய சமாதான பிரிகேட்டும் இடைக்கால நிர்வாக ஏற்பாட்டைக்குறித்து அதிகமதிகம் சிங்கள வெகுசனங்கள் மத்தியில் பேசிவருகிறார்கள்.

இதன்படி கூறின், இடைக்கால நிர்வாக ஏற்பாடு எனப்படுவது ஒரு கனிந்துவரும் யதார்த்தம்போல காணப்படுகிறது.

இதில் முதலில்தோன்றக் கூடிய சவால் யாப்புப்பற்றியது. ஒருவிதத்தில் அது ஏற்கனவே தொடங்கிவிட்டது. மற்றது, முஸ்லிம்கள் பற்றியது.

யாப்புக்கு உட்பட்ட ஒரு இடைக்கால ஏற்பாட்டுக்கு புலிகள் ஒத்துவரும் அறிகுறிகள் ஏதும் தென்படவில்லை.

அதேசமயம், யாப்புக்கு வெளியிலான ஒரு இடைக்கால ஏற்பாட்டுக்கு ஏற்கனவே கிழக்கு ஐரோப்பாவில் கொசோவாவில் செய்யப்பட்ட ஒரு ஏற்பாட்டைப் பற்றி முன்பு பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஆனால், இந்தப்பிரச் சினையை வேறுவிதமாக அணுகினால் சிலசமயம் ஏதும் மாற்றுவழிகள் தோன்றக்கூடும்.

உதாரணமாக புரிந்துணர்வு உடன்படிக்கை யாப்புக்கு முழுவதும் கட்டுப்பட்டது அல்ல. கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக அது அமுலில் இருந்து வருகிறது. எனவே அது அதன் எல்லாப்பல வீனங்களோடும் இப்பொழுது ஒரு அரசியல் யதார்த்தமாகிவிட்டது.

எனவே அதிலிருந்து அடுத்த கட்டத்தைத் தொடங்க முடியும். அதாவது புரிந்துணர்வு உடன்படிக்கையின் நீட்சியாகவும் அகட்சியாகவும் ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டிற்கு வரலாம். இதை இன்னும் சரியான வார்த்தைகளில் கூறினால் புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடுத்தகட்ட வளர்ச்சியாகவே இடைக்கால நிர்வாகசபை அமைய முடியும். (இது ஏற்கனவே சில மாதங்களுக்கு முன்பு இப்பத்தியில் சுட்டிக்காட்டப்பட்ட ஒருவிசயம்.)

இப்படி புரிந்துணர்வு உடன படிக்கையின் அடுத்தகட்ட வளர்ச்சியாக அமையத்தவறிய படியால்தான் உப குழுக்கள் இறந்து போயின.

புரிந்துணர்வு உடன் படிக்கையை ஏற்றுக் கொள்ள முடியும் என்றால் அதன் அடுத்தகட்ட வளர்ச்சியையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

குழந்தையைப் பெற்றுவிட்டு அதன் வளர்ச்சியை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்றால் எப்படி?

ஒன்றரைவயதுக் குழந்தைக்கு அது பிறந்தகாலத்தில் போட்ட அதே உடுப்பையே இப்பொழுது போட முடியுமா? அது பிறந்தகாலத்தில் கொடுத்த அதே அளவு உணவையே இப்பொழுதும் கொடுக்கமுடியுமா?

இந்த வளர்ச்சி விதி களைப் புறக்கணிப்பது என்பது குழந்தை பிறக்கும்போதே வலது குறைந்ததாகத்தான் பிறந்ததா? என்று சந்தேகிக்கும் ஒரு நிலைக்கே இட்டுச் செல்லும்.

இந்த இடத்தில் முந்நாள் இந்திய வெளியுறவுச் செயலர் வெங்கடேஸ்வரன் சொன்னவை ஞாபகத்தில் வருகின்றன. வெங்கடேஸ்வரன் ஒரு தமிழர் . இந்திய - இலங்கை உடன்படிக்கைக் காலத்தில் வெளியுறவுச் செயலராக இருந்து பின்நாளில் ரஜீவ்காந்தியுடன் முரண்பட்டுக் கொண்டு சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர். இந்திய - இலங்கை உடன்படிக்கையைப் பற்றி அவர்சொன்னார்- அதுபிறக்கும்போதே செத்துப் பிறந்த ஒரு குழந்தை என்று. (Still-born Baby)

புரிந்துணர்வு உடன்படிக் கையையும் அப்படி யாராவது, செத்துப்பிறந்த குழந்தை அல்லது, நீலக்குழந்தை என்று சொல்லும் ஒரு நிலை வராமல் பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு ரணிலுக்கு மட்டுமல்ல, சமாதானத்தில் இடைத்தரகர்களாகச் செயற்படும் மேற்கு நாடுகளுக்கும் உண்டு.

சில சிங்கள விமர்சகர்கள் பிடிவாதமாகக் கூறிவருகிறார்கள் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு யுத்தநிறுத்த உடன்படிக்கை மட்டுமே என்றும், அதுவே ஒரு சமாதான உடன்படிக்கை ஆகிவிடாது என்றும்.

யுத்தநிறுத்தத்தில் இருந்து சமாதானத்தை பிரித்துக்காணும் இவர்கள் இவ்வாறு வாதிடுவதன் மூலம் முதலாவதாக, புரிந்துணர்வு உடன்படிக்கையின் வீச்செல்லைகளை மட்டுப்படுத்த முயல்வதோடு அதுதான் நிலவும் சமாதான முயற்சிகளுக்கான ஒரே பலமான அடிப்படை என்பதையும் மறுப்பவர்களாய் இருக்கிறார்கள். இரண்டாவதாக, புரிந்துணர்வு உடன்படிக்கையை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்த்துச் செல்ல விரும்பாதவர்களாய் அதாவது - அது ஒரு செத்துப்பிறந்த குழந்தையாக அல்லது நீலக் குழந்தையாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்களாக காணப்படுகிறார்கள்.

இந்நிலையில்,யாப்புக்குவெளியே எடுத்துவைக்கப்பட்ட முதல் அடியாக புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கருதி, கடந்த ஒன்றரை ஆண்டுகால அனுபவங்களின் அடிப்படையில் அதை மேலும் பலப்படுத்தி, அதன் அடுத்தகட்டவளர்ச்சியாக ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டுக்குப்போவதே இப்பொழுது இருப்பவற்றுள் ஆகக்கூடியபட்சம் சாத்தியமான ஒரு தெரிவாய் இருக்கும்.

அப்படியென்றால்தான் பிரிட்டிஷ் தூதுவர் வியந்த புலிகளின் முதிர்ச்சியை சரியானபடி கணக்கிலெடுத்ததாகவும் இருக்கும். இல்லையென்றால் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் செத்துப்பிறந்த குழந்தையாகிவிடும் அல்லது நீலக்குழந்தையாகிவிடும். ●

எல்லாம் வேடிக்கைதான்! நமக்கு நடக்காமல் மற்றவர்களுக்கு நடக்கும் வரை - வில் ரோஜர்ஸ்

# நறுக்கென...

## குற்றமும் தண்டனையும்... 'விற்'களும் அம்புகளும்...



அந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதும் நீதிமன்றத்தில் வைத்தே 'ஓ' வெனக்கதறிஅழுதார்களாம் அந்தஇரு பொலிஸ் அதிகாரிகளும்....
தீர்ப்பு:-மரணதண்டனை.
வழக்கு:- பிந்துனுவெவ தடுப்பு முகாமில் வைத்து 27 அப்பாவித்தமிழ் இளைஞர்களை படுகொலை செய்தமைதொடர்பானது.
இங்கு அழுகை பதிவு செய்யப்படவேண்டிய முக்கியமான தொன்றல்ல... ஆனால் அழும்போது அவர்கள் கூறியவார்த்தைகள்தான் முக்கியமானவை.

"நாங்கள் மேலிடத்து உத்தரவின்பேரில்தான் செயற்பட்டோம். உத்தரவிட்டவர்கள் தப்பிவிட்டார்கள்.... நாங்கள் மாட்டிக்கொண்டு விட்டோம்....."

"எமக்கு இரு உயரதிகாரிகளே இவ்வாறு உத்தரவிட்டார் கள்.... அவர்களில் ஒருவர் ஓய்வு பெற்றுவிட்டார்.... மற்றவர் இன்னமும் பதவியில் இருக்கிறார்.... நாங்கள்தான் குற்றவாளிகளாக்கப்பட்டு.... தண்டனை விதிக்கப்பட்டுள்ளோம். இங்கே இரு கேள்விகள் எழுகின்றன.

யாரிந்த உத்தரவை வழங்கிய மேலதிகாரிகள் இருவர்?

இந்த மேலதிகாரிகளுக்கு இத்தகைய மனிதநேயமற்ற காட்டுமிரா ண்டித்தனத்தை மேற்கொள்ளுமாறு பணிப்புரை அல்லது ஆலோசனையை வழங்கிய அரசியல் அல்லது அதிகாரபீடம் எது?
இந்தக்கேள்விகளுக்கான விடைகள் பகிரங்கப்படுத்தப்படாதவரை இக் குற்றச்செயலுக்கான நிமித்தகாரணம், முதற்காரணம் இரண்டும் மறைக்கப்பட்ட அசிங்கங்களாகிவிடும்...
இப்போது விதிக்கப்பட்டது துணைக்காரணகர்த்தாக்களுக்கு மட்டுமே.... எய்தவனும், எய்யுமாறு
உத்தரவிட்டவனும் இருக்க'அம்பு' குற்றச்சாட்டுக்கு பொறுப்பாக்கப் பட்டுள்ளது....

தண்டனை விதிக்கப்பட்ட அதிகாரிகளே.... ஏனைய குற்றவாளிகளே....!

உங்களின் எஜமானர்கள்..:அரசுகள், எல்லாமே நிஜங்களை பாதுகாப்பாக மறைத்து விட்டு நிழல்களுக்கு தண்டனை வழங்குபவர்களே..... நினைவிற்கொள்ளுங்கள்.....

## அமைதிகாக்க ஒரு அழிப்புப் படையா.....?



'அமைதிப்படை' என்றவுடன் சட்டென்று நினைவுக்கு வருவது 'மயிர்கொட்டிக்' கும்பல் போல் ஒரு காலத்தில் தமிழ் மக்களின் தயாகப்பகுதியெங்கும் அருவருக்கத்தக்க வகையில் ஒட்டிக் கொண்டு இருந்த இந்திய ஆக்கிரமிப்புப்படைதான் நினைவுக்கு வருகிறது.

அது அமைதியை பாதுகாக்க வந்த படையல்ல.... அமைதிக்கு பாடை கட்டவந்த படை என்பார் எனக்குத்தெரிந்த ஒரு கவிஞர்........
அந்தப்படை வந்து சேர்ந்த விதம், நிலைகொண்ட முறை, வெளியேறிய வகை அனைத்தும் அசிங்கமான, அவமானகரமான நிகழ்வுகள் ஆகும்....

தமிழினத்தின் வரலாற்றில் அவலமான ஒரு காலகட்டத்தின் மூலவேர்கள் இந்த அமைதிப்படையினர்தான்....இவர்களே இந்தியாவின் 'இந்திய முகத்தை' வெளிப்படுத்தியவர்கள்...

சரி அது போகட்டும், இப்போது இலங்கைக்கு ஒரு விசித்திரமான ஆசை வந்து விட்டதாம்.... அதாவது ஈராக்கிற்கு அமைதிப்படையொன்றை அனுப்ப இலங்கை விரும்புகிறதாம்!

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டு நாடுகளின் வெறித்தனமான தாக்குதல்களால் நிர்மூலமாகி சிதைந்து போயுள்ள அந்த தொன்மைமிகு கலாசார மண்ணில் இன்னமும் அந்நிய ஆக்கிரமிப்பின் 'தீ' எரிந்து கொண்டே இருக்கிறது.

அந்நாட்டின் எந்த அந்நியர் பிரசன்னமும் அமைதியை ஏற்படுத்தப்போவதில்லை என்பதை அண்மைக்கால சம்பவங்கள் நிரூபித்துவரும் வேளையில்.... சிறிலங்காவின் விருப்பம் ரிரோன் பெர்ணாண்டோவினால்- சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சருக்கு விளங்காதோ உண்மையான அமைதியை ஏற்படுத்த என்ன செய்யவேண்டும் என்று.

முதலில் இஞ்ச அமைதியை ஏற்படுத்துறதுக்கு வழியைத்தேடாமல் அங்க போய் என்ன அமைதியை ஏற்படுத்தப்போறார்.

'எரிகிற வீட்டில் பிடுகியது லாபம்' என நினைப்பவர்களே இலங்கைப்படையினர். வீடெரிக்கும் அமைச்சருக்கும்-அதிகாரிகளுக்கும் நெருப்பெடுத்துக்கொடுப்பதில் வல்லவர்கள் என்பதில் ஐயமேயில்லை.

இவர்கள் அமைதிப்படையாக அனுப்பப்பட்டால்.......
பனையிலிருந்து விழுந்தவனை மாடேறிமிதித்த கதையாக....
பாவம்.... ஈராக் மக்களை அல்லாதான் காப்பாற்றவேண்டும்.

## அமெரிக்க பிரதிநிதியா அமைச்சர் மொறகொட?



இலங்கைக்கான அமெரிக்காவின் விசேட பிரதிநிதி மிலிந்த மொறகொட.... மன்னிக்கவும்..... அமைச்சர் மிலிந்தமொறகொட.... அவரை நினைக்கும்போதும் அவரது பெயரைக்கேட்கும் போதும் 'அமெரிக்கா நினைவுக்கு வருவது தவிர்க்கமுடியாததாகிவிட்டது.

அந்த அளவுக்கு அவர் அமெரிக்காவுடன் ஒன்றிப்போனவராகிவிட்டார். எதற்கெடுத்தாலும் அமெரிக்காவுக்கு பறந்துவிடும் அவர், சிறிலங்காவின் நலன்களைக்கவனிப்பதிலும் பார்க்க அமெரிக்காவின் அபிலாசைகளை பாதுகாப்பில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்பது வெளிப்படை.

இலங்கையின் பொருளாதாரத்தை மறுசீரமைக்க அமெரிக்காவின் பங்களிப்பு அவசியமென்பதை ரணிலுக்கு வலியுறுத்துபவர் அவரே....

சமாதானத்திற்கான நகர்வுகளில் மேற்குலகின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த முனைபவரும் அவரே....

மீண்டும் சண்டைதொடங்கினால் அமெரிக்கா சிறிலங்காவுக்கு உதவும் என தமிழ்மக்களை மிரட்டவும், சிங்கள மக்களை திருப்திப்படுத்தவும் முனைபவரும் இவரே...

இப்போது இவர் சிறிலங்காவின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப.... மேற்குலகின் அபிலாசைகளுக்கேற்ப-அவர்களின் யோசனைகளை அமுல்படுத்தும் நடவடிக்கைகளில் முனைப்பாக முயன்றுவருகிறார் எனப்பரவலாக அறியப்பட்டுள்ளபோதிலும், சிறிலங்காவின் பாதுகாப்புப்படைகளை வலுப்படுத்துவதிலும் அவர் காட்டும் மறைமுகத்தீவிரம் முக்கியமானதாகும்.

ரணில் ஆட்சிக்கு வந்து, போர்நிறுத்தம் செய்யப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னரும், பாதுகாப்பு அமைச்சுக்கு என்றுமில்லாத வகையில் அடுத்த மூன்றாண்டு கால தேவைக்கான நிதியை ஒதுக்க ஆலோசனை செய்த மூவரில் இவர் முதன்மையானவர்.

அமெரிக்காவின் பெயரைப்பயன்படுத்தியே தன்னுடைய அரசியல் இலக்கை அடைய நினைக்கிறாரோ அமைச்சர் மிலிந்தமொறகொட.

எது எப்படியோ அமைச்சர் தேர்த்தலில் நிற்கும் போது விளம்பரங்களில் முகம்காட்டாது கறை படியாத அரசியல் வாதியென வாசகம் பேசி வித்தியாசமாக பிரச்சாரம் செய்தவர். இப்போது வித்தியாசமாகவே தன்னுடைய இலக்கை அடைய நினைக்கிறார் போல.

சமாதான நடவடிக்கைகளின் போது இடைக்கிடை 'அமெரிக்கா'வின் பாணியில் தமிழ் மக்களை இராணுவப்பாணியில் அச்சுறுத்தியும் வரும் மொறகொட தற்போது சில சமயங்களில் 'ரணிலை'யும் ஓரங்கட்டப்பார்ப்பதாக சிங்களப்பத்திரிகை ஒன்று கூறுகிறது....

**செங்குட்டுவன்**

## மதவடி மயிலர்



**செய்தி** : *நாகரீகமாக அரசியலை நடத்துவது எவ்வாறு என்பது குறித்து இளம் எம். பிக்களுக்கு பயிற்சிப்பட்டறை.....*

**மயிலர்**:- நல்ல சேதிதான்..... ஆனால் பயிற்சியை நடத்தப் போவதுயார் என்பது தான் கேள்வி.... மூத்த அரசியல்வாதிகள்... அரசியல்வாதிகள் என்றால்...: பிறகு சொல்லி வேலையில்லைப் பாருங்கோ..... பெரிய பிசாசுகளிடம் குட்டிச்சாத்தான்கள் வேதோபதேசம் கேட்பது மாதிரித்தான் இருக்கும்.....!

**செய்தி** : *ஈ.பி.டி.பியின் பிரசுரங்களைஅவர்கள் முன் எரித்த மக்கள்; வவுனியா நகரில் சம்பவம்.*

**மயிலா**:- எரிச்சலூட்டுற வேலையில இறங்கினா இப்படித்தான் நடக்கும் பாருங்கோ.... தூண்டுப்பிரசுரத்திற்கே இந்தக்கதியென்றால்.... சனம் மனத்தில எப்பிடி கோபத்தீயை வளர்த்திருக்குது எண்டு தெரியுதெல்லே..... சிலரைப்பல காலமும் பலரைச் சில காலமும் ஏமாத்தலாம்..... ஆனால் எல்லாரையும் எல்லாக்காலத்திலும் ஏமாற்ற முடியாது பாருங்கோ...

**செய்தி** : *சந்தனக்கடத்தல் வீரப்பனைத்தேடுவது நேரத்தை வீணாக்கும் செயல்: கர்நாடக மாநில சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு.*

**மயிலர்**:- அலைஞ்சலைஞ்சு களைச்சுப்பெற்ற அரிய ஞானம் பாருங்கோ.... அதிகாரிக்கு வந்த ஞானம் அரசியல்வாதிக்கும் வரவேணுமே.... காட்டுக்குள் ஒரு சந்தனக்கடத்தல் வீரப்பன் தான் ஒளிந்திருக்கிறான்..... ஆனால் நாட்டுக்குள் அவரைவிடமோசமான எத்தனையோ வகையான கடத்தல் பேர்வழிகள் வெளிப்படையாக நடமாடித்திரிகிறார்களே..... அதுக்கு என்ன செய்யப்போகினமாம்...?

# பிந்துனுவெவவின் நீதி தமிழர்களை அழவைக்க?

**கு.கவியழகன்**

பிந்துனுவெவ தமிழ்ச்சிறைக் கைதிகள் மீதான படுகொலை வழக்கில் ஐவரிற்கு மரணதண்டனையை ரணிலின் ஆட்சியின் கீழ் இலங்கை நீதித்துறை வழங்கியிருக்கிறது.

நீதி நிலைநாட்டப்படுவதாக இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு நல்லமனம் கொண்டோரை நிம்மதியும் மகிழ்வும் அடையவைத்திருக்கிறது.

தமிழ் ஊடகங்கள் இந்த வழக்கின் தீர்ப்பை வியந்து செய்திகளைப் பிரசுரிக்கின்றன. பாராட்டுக்களையும் பொழிகின்றன. எனவே இந்தத்தீர்ப்பு சமாதானகாலத்தில் அதிக முக்கியத்துவம் பெற்றதாகிறது.

சமாதான கால த்தில் இனவிரோத மற்ற ரணிலின் அரசியற் பண்பை இது வெளிப்படுத்துவதாகவும், இனவாதிகளை ரணிலின் ஆட்சி பொருட்படுத்தப் போவதில்லை என்பதாகவும் அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. (அது நீதித்துறையே வழங்கிய தீர்ப்பாக இருந் தாலும் கூட...)

தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது இதுதான் முதற்தடவையல்ல. சிறைபுகுந்து தமிழ்க்கைதிகளைக் கொல்வதும் இதுமுதல் முறையல்ல. தமிழர்கள் மீதான ஒவ்வொரு படுகொலைகளுக்கும் கருவியார்? கர்த்தாயார்? என்பதொன்றும் மர்மமாக இருந்ததில்லை. அவையெல்லாம் வெளிப்படையான வெளிப்படைகள்.

இவற்றில் பலவற்றிற்கு சாட்சிகள், சான்றுகள் என்று குற்றத்தை நிரூபிக்க தேவையானவையெல்லாம் போதியளவில் இருந்தும் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒருபோதும் ஒரு பொருட்டாகவேனும் நீதியின் முன் இருந்ததில்லை. அப்படியிருக்க எப்படி இது சாத்தியமாகிற்று.

ரணில் சனாதிபதி என்ற தலைமேல் தொங்கும் கத்தியின் கீழ் இருந்து ஆட்சி புரியவேண்டிஇருக்கிறது. ஆட்சியில் அவரது அதிகாரங்கள் வலுக்கொண்டவையல்ல.

ரணிலின் ஆட்சி வீழ்த்தப்படுவதற்கான வலை இனவாதத்தினால் நெய்யப்பட்டிருக்கிறது.

இனவாதிகளின் கூட்டினாலேயே ரணிலின் ஆட்சி வீழ்த்தப்படக்கூடியது என்று இன்றைய அரசியலில் திட்டவட்டமாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இதற்கான முயல்வும் காத்திரமான தூரம் முன்னேறிவிட்டது. சமாதான காலத்தில் ரணிலின் நகர்வில் ஏதாவதொரு வாய்ப்பான கட்டத்தில் இனவாதத்திரட்சி மூலம் ரணிலை வீழ்த்திவிட முடியும் என்று எதிர்க்கூட்டணியினர் காத்திருக்கிறார்கள்.

அப்படியானால் ரணில் தனது ஆட்சியை பாதுகாத்துக் கொள்வது என்பது எதிர்க்கூட்டணி காத்திருக்கும் அவர்களுக்கான தருணத்தை வழங்காமல் இருப்பது தான். மேலும் சிங்கள மக்கள் இனவாதத்தின் பெயரால் திரட்டப்படாமல் தடுப்பதிலும் இனவாதிகளிடம் அவர்கள் காத்திருக்கும் ஒரு தருணத்தை அவர்களிடம் கைவிடாமல் இருப்பதிலும் உள்ள எச்சரிக்கையில்தான் ரணில் ஆட்சியின் பாதுகாப்பு தங்கியிருக்கிறது.

யதார்த்தம் இப்படிஇருக்க இதை விளங்கி சிங்கள மனோபாவத்தை புண்படுத்தாமல் இருப்பதற்கான ரணிலின் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விடையம் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விடையம் என்று ரணில் காரியத்தை நிதானமாகக் கையாழும்போது, மேலும் புலிகளுக்கு எதிரான சர்வதேச வலைப் பின்னல் என்று சிங்கள மனோபாவத்திற்கு பால்வார்த்து கச்சிதமாகக்காய் நகர்த்தும்போது பிந்துனுவெவ விடயத்தில் காரியத்தைக் கெடுத்துக்கொள்வாரா?

உள்துறை அமைச்சர் யோன் அமரதுங்க மரணதண்டனையை நிறைவேற்றுவதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உறுதியாக நிலைப்பாடெடுக்கும் பின்னணியில் தமிழ்க்கைதிகளின் படுகொலைக்காக ஐந்து சிங்களவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றுவது எதிர்க்கூட்டணி காத்திருக்கும் தருணத்தை அவர்களிடம் கையளித்துவிடாதா? இது ரணிலே தனது ஆட்சிக்கதிரையை எதிர்க்கூட்டணியின் வீட்டுக்கே கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வந்ததாகாதா?

ஜே.ஆரின் வளர்ப்பில் வந்த ரணில்விக்கிரமசிங்க நிதானமாகவும் கவனமாகவும் சனாதிபதி அதிகாரம் எதிர்த்தரப்பிடம் இருக்கும்போதே காய்களைக் கச்சிதமாக நகர்த்தும்போது இந்தச் சிறுவிடயத்தில் கவனமின்றி இருந்திருப்பாரா.

அப்படியானால் இந்த நீதி மன்றத்தீர்ப்பின் மூலமே சிங்கள மனோ பாவத்தை சாந்திப்படுத்தவும் அதேநேரம் சமாதானத்தின் சர்வதேச பார்வையாளர்களை தன் நேர்மைகுறித்து சந்தோசப்பட வைக்கவும் ரணில் வழியொன்றைக் கண்டு பிடித்திருக்க வேண்டும்.

அது என்ன?

அந்த மர்மமுடிச்சு இது தான் சிங்கள அரசாங்கத்தை பாரதூரமாகப் பாதித்த சம்பவங்களோடு தொடர்புபடுத்தி கைதுசெய்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளையும் வருங்காலத்தில் அவ்வாறு கைது செய்யப்படப்போபவர்களையும் தூக்கில் தொங்கவிடுவதற்கான ஆரம்ப ஏற்பாடே இது.

1990ஆம் ஆண்டு காரைநகர் முகாம் தாக்குதல் ஒன்றுடன் தொடர்புபடுத்தி கைதுசெய்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞன் ஒருவருக்கு மரணதண்டனை தீர்ப்பு அண்மையில் வழங்கப்பட்டிருப்பது இதற்கான கவனத்திற்குரியது. இப்படியான வழக்குகளும் இப்படியான தீர்ப்புகளும் இனி இலங்கை நீதிமன்றத்தில் அதிகம் நிகழும்.

பிந்துனுவெவ தீர்ப்பு மேன்முறையீடுமூலமோ தவறினால் சனாதிபதிக்கு எழுதும் கருணை மனுமூலமோ பின்வாங்கப்பட்டுவிடும். வழமைபோல சில ஆண்டுகளில் அவர்களை விடுவிக்கவோ அல்லது அவர்கள் தப்புவதற்கான ஏற்பாட்டையோ அரசாங்கமே செய்துகொடுக்கும். சில வேளை அதற்கான வாக்குறுதிகளும் இப்பொழுதே ஐந்து குற்றவாளிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் இந்த மறைப்பில், இந்த ஏமாற்றுத்தொடக்கத்தின் பின்னால் தமிழ்க் கைதிகள் தூக்கில் தொங்கவிடப் படுவார்கள். அதன்மூலம் சிங்கள மனோபாவத்தை பழிவாங்கிய உணர்வில் திருப்திப்படுத்துவதோடு அரசைப்பாதிக்கும் சம்பவங்களுக்கு ஆதரவு தரமுயலும் தமிழர்களை அதிகம் அச்சுறுத்தவும் ஏலும்.

இவ்வாறான வழக்குகள் விரைவில் தீர்ப்பை எட்டிவிடுவதற்கான சாத்தியக்கூறை அரசாங்கத்தின் பின்னணியில் நீதித்துறை நிகழ்த்திக்காட்டும்.

ஆயின், பிந்துனுவெவவின் மரண தண்டனைத்தீர்ப்பு தமிழ்க் கைதிகளுக்கும் கைது செய்யப்படப்போவபவர்களுக்கும் வழங்கப்பட்ட தீர்ப்பேயாகும்.

தமிழ்க்கைதிகளை படுகொலை செய்த கொலையாளிகளுக்கு வழங்கியதீர்ப்பு மேலும் சிறைகளில் உள்ள தமிழ் கைதிகளையும் கைது செய்யப்படப் போவபவர்களையும் தூக்கில் இடுவதற்கான மார்க்கம் என்ற குரூரமான யதார்த்தம் விளங்குவதற்கு மட்டுமல்ல உலகத்திற்கு விளக்குவதற்கும் உரியசிங்கள ஆட்சியாளர்களின் முகமாக இருக்கும்.

இதைத்தடுப்பதற்கு தமிழ் அரசியற் கட்சிகளும் தமிழ் ஊடகங்களும் அதிக விழிப்பையும், அதிக உழைப்பையும் வழங்கவேண்டிய தருணமிது. ●



# ஈ.என்.டி.எல்.எவ்.-ஜப்பான் தூதுவர் இரகசியப் பேச்சுவார்த்தை! பின்னணியில் யார்?

**இந்தியாவிற்கான** ஜப்பானிய பிரதித் தூதுவர் ஈ.என்.டி.எல்.எவ். என்கிற தமிழ் குழுவின் தலைவரான 'பரந்தன் ராஜனை' சந்தி த்துப்பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இந்தியத் தலைநகரான புதுடெல்லியில் சிலதினங்களுக்கு முன் இந்தச்சந்திப்பு நிகழ்ந்திருக்கி றது. இதற்கு முன்பாக, சென்னையில் வைத்தும் ஒரு சந்திப்பு இருதரப்பினருக்கிடையே நடந்ததாகவும் ஒரு தகவல் தெரிவிக்கிறது.

என்ன பேசிக்கொண்டார்கள் என்ற விபரம் வெளிவரவில்லை. இரகசியமான முறை யில் இப்பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்தாக செய்தி மட்டுமே வெளிவந்தது. இலங்கை அரசியலில் தற்போது நேரடித் தொடர்புகளெதுவுமற்ற ஈ.என்.டி. எல்.எவ். (ஈழத்தேசிய சனநாயக விடுதலை முன்னணி) குழுவுடன் ஜப்பானுக்கு அப்படி என்ன இரகசியப்பேச்சுவார்த்தை? என்பது தமிழ் மக்கள் மனங்களில் இப்போது எழுந்துள்ள கேள்வி. 'பரந்தன் ராஜனை' மேலதிகப் பேச்சுவார்த்தைகளுக்காக வரும் படி ஜப்பான் அழைப்பு விடுத்ததாகவும் அறிய முடிகிறது.

1983 இல் நடந்த இன வன்முறைச் சம்பவங்களின் பின் பல புதிய தமிழ் குழுக்கள் பல்வேறுபட்ட பெயர்களில் தோற்றம் பெற்றன. ஆயினும் ஈ.என்.டி.எல். எவ். என்ற குழு.

இந்திய 'அமைதிப்படை'யின் வருகையுடனேயே தோற்றம் பெற்றதெனலாம். குழு வின் பெயர்தான் புதியதெனினும் அதன் அங்கத்தவர்கள் பழைய ஆட்களே. இதன் தலைவரான 'பரந்தன்ராஜன்' என்றழைக்கப்படும் ஞானசேகரன் புளொட் அமைப்பிலிருந்து வெளியேறியவர். புளொட்தலைவர் உமாமகேஸ்வரனுடனான முரண்பாடு காரணத்தால் சில சகாக்களுடன் வெளியேறி புதிய குழுவை ஆரம்பித்தார். இந்திய இராணுவத்தோடு இந்தியாவிலிருந்து வந்த இக்குழுவின் தலைமையகம் கிளிநொச்சியிலே அமைந்திருந்தது. 1990ஆம் ஆண்டு இந்திய இராணுவம் வெளியேறியதுடன் ஈ.என். டி.எல்.எவ். குழுவும் வெளியேறிஇந்தியாவிற்கு ஓடிவிட்டது.

இந்திய இராணுவத்தின் கையாட்களாகவே செயற்பட்ட இக்குழுவினர் எந்தவித கட்டுப்பாடுமின்றி தமிழ்ப்பிரதேசங்களில் மக்களுக்கு பல விதங்களில் இம்சைபுரிந்து வந்தனர். கொலை, களவு, பாலியல்வன்முறை என இக்குழுவினர் செய்த தீய செயல்களை குறிப்பாக கிளிநொச்சி மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஈ.என்.டி.எல்.எவ். அப்போதிருந்த வரதராஜப்பெருமாள் தலைமையிலான மாகாண சபையிலும் அங்கம் வகித்தது. இங்குவந்ததும், மக்கள் மத்தியில் தம்மைப் பிரச்சாரம் செய்கையில், புளொட், ரெலோ, ஈ.பி.ஆர், எல்.எவ்,ஆகிய இயக்கங்களின் கூட்டிணைப்பே ஈ.என்.டி.எல்.எவ் என தம்மை அறிமுகம் செய்து கொண்டது. ஆனால், மேற்குறிப்பிட்ட மூன்று இயக்கங்களில் இருந்தும் விலக்கப்பட்ட அல்லது வெளியேறியோர் உதிரிகளாக வந்து இணைந்து கொண்ட குழுவே இது என்பது பின்னர் தெரியவந்தது.

90 இல் தமிழ் பிரதேசங்களில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறிக் கொண்டிருக்க - புலிகள் காடுகளில் இருந்து உள்ளே வந்துகொண்டிருக்க-அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு தப்பியோடிக்கொண்டிருந்த குழுக்களில் ஈ.என். டி.எல்.எவ் குழுவும் அடங்கும். இந்திய இராணுவத்துடனேயே இந்தியாவிற்குத் தப்பிச்சென்ற இக்குழுவினர் பல உறுப்பினர்கள் கலைந்து போனநிலையில், ஒரு சிலரு டன் இந்தியாவில் செயல்பட்டு வருகின்றனர்.

இவர்களுக்கான உதவிகளை இந்தியப் புலனாய்வு அமைப்பான 'றோ' வே (RAW) செய்துவருகின்றது. 'றோ'வின் பணஉதவியுடன் 90களில் இக்குழு'அக்கினி புத்திரன்' என்ற பெயரில் இனப்பிரச்சினையை தொடர்புபடுத்தி திரைப்படம் ஒன்றைத் தயாரித்து வந்தது. தமிழீழ ஆதரவாளர்களால் தமிழ் நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்புகள் காரணமாக இத்திரைப்படம் நின்றுபோனது. பெங்களூரில் தற்போது மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் பெயரில் கல்லூரி ஒன்றை இக்குழுவினர் நடாத்தி வருகின்றனர். தமிழ்ப்பகுதிகளிலிருந்து புலம் பெயர்ந்த மாணவர்கள் இதில் கல்வி கற்கின்றனர். அத்துடன் இக்குழுவினர் ஐரோப்பிய நாடொன்றில் தமிழ் வானொலி நிலையம் ஒன்றையும் நடாத்திவருகின்றனர்.

தமிழ் நாட்டில் புலம்பெயர்ந்த தமிழீழ மாணவர்களுக்கு பலவி தமான உதவிகளை சந்திரகாசன் தலைமை யிலான 'புறொட்ரெக்ட்' (PROTECT) என்ற அமைப்பு வழங்கி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மாணவர்களுக்கு 'புலி எதிர்ப்புக் கல்வி'யும்புகட்டப்பட்டுவருவதாக தகவல்கள் கிடைக்கின்றன. இவ்வாறான செயற் பாடுகளுக்கு நிதிஉதவிகளை 'றோ' அமைப்பே வழங்கிவருவதாகவும் அறிய முடிகின்றது.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அனுசரணையாளர்களாகப் பணிபுரியும் நாடுகள் இலங்கை அரசியலோடு நேரடியாகப் பங்கு கொள்ளும் எந்தக்குழுக்களுடன் பேசுவதைப்பற்றி யாருக்கும் பிரச்சினை இல்லை.'றோ'வின் வளர்ப்புக்குழுவான இலங்கை அரசியலோடு நேரடித் தொடர்புகளெதுவுமற்ற, ஒரு குழுவோடு இரகசியமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பின்னணியில் நிற்பவர்கள் யார் என்பது பல சந்தேகங்களை உண்டுபண்ணும் கேள்வியாக உள்ளது.

ஒரு பக்கம் சர்வதேச பாதுகாப்பு வலை. வெவ்வேறு பக்கங்களில் இருந்தும் வெவ்வேறு விதமானவலைகள்!

மலிந்தால் சந்தைக்கு வராமலா போகும்?

**நிதர்சன்**

☞ மித மிஞ்சிய சிரிப்பு பெருமூச்சில் முடிந்தே தீரும் – ராபர்ட் ஸவ்த்

# தமிழ்த் தினப்போட்டிகளும் சில அவதானிப்புகளும்

சென்றவாரம் அந்த கோட்ட மட்டப்பாடசாலைகளுக் கான "தமிழ்த்தினப் போட்டிகள்" அந்தப்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

பேச்சுத்திறன், ஆக்கத்திறன், நடிப்பாற்றல், வாய்ப்பாட்டு என மாணவர்களின் ஆற்றல்களை, ஆளுமைகளை, வெளிக்கொண்டு வரவே வருடாவருடம் "தமிழ்த் தினப் போட்டிகள்" நடாத்தப்படு கின்றன.

இந்தத் தமிழ்த்தினப்போட்டி களானது, திறமையுள்ள மாணவர் களை இனங்காணுதல், அவர் களிற்கு பரிசில்கள் வழங்கி கௌர வித்தல் என்பதோடு - இந்தக் கௌரவிப்புக்களானது ஏனைய மாணவர்களின் மனப்பரப்புகளில் ஒரு உற்சாகத்தை ஊக்குவித்து, அந்த மாணவர்களையும் அடுத்து வரும் போட்டிகளில் கலந்து கொள்ளவைத்து, அவர்களும் நாளைய திறமையாளர்களே என்ற நம்பிக்கைகளை தோற்றுவிக்கும் ஒரு உயர்நிலைச் செயற்பாடா கவே அமைகிறது.

ஆனால், அந்தக்கோட்டத்தில் நடந்து முடிந்த போட்டிகளையும் போட்டிகளுக்கான மத்தியஸ்தர் களையும் பார்க்கும்போது, ஒரு சார்பு நிலையிலிருந்தே அவர்களின் மதிப்பீடுகள் அமைந்ததை பார்க்கக் கூடியதாகவும் சிலர் நடந்து கொண்ட செயற்பாடுகளையும் வைத்து அவதானிக்கக்கூடியதாக வுமிருந்தது.

இந்தக் கணிப்புகள், அவ தானிப்புகள் யாவும் இங்கே ஒரு "கட்டிக் காட்டல்" என்ற பத்தி லல்லாமல், ஆற்றலுள்ள மாண வர்கள் புறந்தள்ளப்பட்டு தகுதி யற்றவர்களுக்கு புகழாரங்கள் சூட்டப்படுவதை தவிர்த்தல் மட்டு மல்லாது இந்தசார்பு நிலையான மத்தியஸ்தம் சில பின்தங்கிய பிர தேசத்து பாடசாலைகளின் மாண வர்களை புறந்தள்ளி உயர்நிலை அல்லது செல்வாக்குக்கொண்ட வர்களின் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளுக்கு முதன்மை வழங்கும் வேதனைகளான விட யங்களாகவே இங்கே முன்வைக் கப்படுகின்றது.

இந்தச்சார்பு நிலைத்தீர்ப்புக ளுக்கான காரணங்கள், துறை சார்ந்தவர்களை நடுநிலையாளர் களாக உள்வாங்கப்படாமை, அடுத்து பாடசாலைகளிலிருந்து மத்தியஸ்தர்கள் நியமிக்கப்படுவது மாகும்.

**சார்பு நிலை தீர்ப்புகளுக்கான காரணங்கள் துறை சார்ந்தவர்களை நடுநிலையாளர்களாக உள்வாங்கப்படாமை, அடுத்துப்பாடசாலைகளிலி ருந்து மத்தியஸ்தர்கள் நியமிக்கப்படுவதுமாகும்.**



முதலில் அங்கு நடைபெற்ற போட்டிகளில், கவனத்தில் எடுக்க வேண்டிய, சில நிகழ்வுகளை முன் வைக்கின்றேன்....

(1)

குழுப்பாடல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மத்தியஸ்தர்கள் வீற்றிருக்க அவர்களிடத்திற்கு ஒரு அதிபர் வந்து ஏதோ காதுகளில் கதைத்துக் கொண்டிருந்தார். இங்கே முதலாவதாக நடந்து முடி ந்த "குழுப்பாடல்" ஆனது அந்த அதிபரினது பாடசாலைக்குரிய தென்பது இங்கே குறிப்பிடத்தக் கது. இதனை அவதானித்த வேறு பாடசாலை ஒன்றின் ஆசிரியை;

"செல்வாக்கு வேணும்" என்று கூறினார். அக்கூற்று அனைவருக் கும் கேட்டிருக்கவேணும். சிரித் தார்கள். அந்த ஆசிரியையின் கூற்று சிலலேடையில் அமைந்த தால்தான் பெறுமதி பெற்றது அந்தச்சிரிப்பு. உரியவருக்கும் கேட் டிருக்கவேணும்(?) அவரும் அந்த இடத்தைவிட்டு அகன்றார்.

"குழுப்பாடல்கள்" தொடர்ந்த படியிருந்தன.....

ஏற்கனவே எந்தெந்தப் பாடசாலைகள் போட்டிகளில் வெற் றியீட்டும் என பிற ஆசிரியர்களும் மாணவர்களும் எதிர்பார்த்ததற்கு மாறாக - போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததை அவதானித்த சில சார்பு நிலை ஆசிரியர்களுக்கு, அந்நிகழ்வுகளை பொறுத்துக் கொள்ள முடியாமலிருந்ததை சில ரூடாக அவதானிக்க முடிந்தது. போட்டியிட்ட சில பாடசாலைகளின் ஆசிரியர்கள் சிலர் தங்களுக்கு இடங்கள் கிடைக்காது எனக்கூறி விட்டுச்சென்றதை அவதானிக்க முடிந்தது. ஆனால் அனைவரினது கணிப்புகளும் அந்த பின்தங்கிய பாடசாலை மேலேயே இருந்தன. முடிவு சரியாக 5 மணிக்கு கூறப் பட்டது. அந்த எதிர்பார்த்த ஆசிரி யையும் மாணவர்களுமே முடிவு களுக்காக காத்திருந்தனர். மற் றைய பாடசாலைகளைச்சேர்ந்த வர்கள் நம்பிக்கையற்று முடிவு களுக்காக காத்திருக்க வில்லை. அவர்கள் எதிர்பார்த்த படி, பார் வையாளர்கள் கணித்தபடி முடிவுகள் இருக்கவில்லை. மாறாக சொற்கனதி இல்லாத அந்த 'செல் வாக்கு' அதிபரின் பாடசாலை யோடு "இடங்கள் கிடைக்காது " என்ற நம்பிக்கையற்றுப்போனவர் களின் பாடசாலைகளுக்குமே இடங்கள் கிடைத்தன.

அந்த எதிர்பார்த்த ஆசி ரியை " திறமைக்கு இடம் வேணு மென" அந்நிகழ்வுக்குப்பொறுப் பாயிருந்த அதி காரியோடு கதைத் தார். அந்த அதிகாரி சொன்னார்

" திருப்பிப்போட்டி வைக் கத்தான் வேணும், பணிமனைக்கு மறுநாள் வரும்படி"

அதனைக்கேட்டுகுறித்த நாளுக்கு அந்த ஆசிரியை போனார். அந்த அதிகாரி ஒரு பேப் பரை எடுத்துக்காட்டினார்.

" உங்கள் பாடசாலைக்கு ஒருவர் நான்காமிடம் போட்டிருக் கிறார். தயவுசெய்து மிகுதியாட் களின் " சீற்" றை கேட்காதீர்கள். நான் பின்நேரம் உங்களிடம் வந்து நிலமையைச்சொல்லுகிறேன்" என்றார். அந்த ஆசிரியை அந்த அதிகாரியை மாலைவரையும் எதிர்பார்த்தார்.

(2)

இது பாடசாலை மட்டத்தி லான போட்டிகளின்போது... பேச்சுப்போட்டியில் முதலாம் இடம் கிடைக்கப்பெற்ற மாணவன். வசதி படைத்தோரின் பிள்ளைகள் அதி கம் படிக்கும் பாடசாலையின் மாணவன். ஆனால் அந்த மாண வன் ஒரு பின்தங்கிய கிராமத்தைச் சார்ந்தவன்.

அந்த மாணவன்தான் முதலாம் இடம் என்றதும் மகிழ்ச்சி யோடு நின்றான். அப்போது அவ னின் பாடசாலை அதிபர் வந்து பிற ஆசிரியர்களிடம் கேட்டார். "இவனுக்கார் முதலாம் இடம் கொடுத்தது?" என்று அந்த மாண வனின் சந்தோசம் கீழே விழுந்து நொருங்கிக்கொண்டிருந்தது.

அந்த மாணவனின் உற வுக்காறர் ஒரு ஆசிரியை. அந்த ஆசிரியை வந்துசொன்னார். அந்த மாணவனைத்தானேதான் அந்தப் பாடசாலையில் கொண்டுபோய் சேர்த்தது என்றும், சேர்க்கப்போய் அற்மிஷன் கேட்க, அந்த அதிபர் முதலில் கேட்ட கேள்வி

" நீங்கள் எந்த இடம்?" என்று.

(3)

மொழித்திறன் போட்டி நடை பெற்றுக்கொண்டிருந்தது. மத்திய ஸ்தர்கள் ஒருவரின் பக்கத்தில் ஒரு ஆசிரியை நின்றார். அவரின் மகன் தான் போட்டியில் பங்குபற்றிக் கொண்டுநின்றான். ஆனால், அந்த ஆசிரியையின் மகன் சில கேள் விகளுக்குப்பதிலளிக்கவில்லை.

அந்த மத்தியஸ்தர் ஒரு பட்டதாரி. அந்த ஆசிரியையின் மகன்மேடையால் இறங்கியதும் மகனைக் கைகளில் பிடித்த அந்த ஆசிரியை, மத்தியஸ்தரைப் பார்த்து இப்படிச் சொல்லிவிட்டுச்சென்றார்.

" பாப்பம் என்ர மகன் எத்தினையாம் இடமெண்டு?"

இங்கே முன்வைக்கப்பட்ட விடயங்கள் யாவும், நேரடித்தரி சனங்களுக்கூடாக கிடைத்த நெகிழ் வுகளின் வெளிப்பாடுகளே. இந்த நெகிழ்வுகளானது இனிவரும் கால ங்களில் இடம் பெறாமல், ஒரு உண்மையான நடுநிலை யிலிருந்து நிகழ்வுகளை நோக்க வேணும். அப்படியான நோக்குகையே எங்கள் பகுதிகளில் இருக்கும் சில திறமைகளை, தேசியமட்டத்திற்கு எடுத்துச் செல்லும்.

இங்கே குறிப்பிடப்படும் விடயத்தினூடாக பொதுவாக எல்லா அதிபர்களையும், நடுவர் களையும் குறைகூறுவதற்கு அல்ல.

முன் மாதிரியாகவும் பொதுநலனுடனும் செயற்படும் அதிபர்களையும் நடுவர்களையும் பாதிக்கக் கூடியவாறு நடப்பவர் களை மட்டுமே குறிப்பிட விரும்பு கின்றேன்.

இந்த உண்மைத்தரிசிப் புக்களை உரியவர்கள் கவனத்தில் கொள்ள வேணும். ■

**எரிசரன்**

# யாழ்-தேசிய பாடசாலைகளின் மோசடி நாடகங்கள் அம்பலத்துக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கட்டட கட்டுமாணத்தில் நட ந்த மோசடி பாடசாலை மாணவர் களின் மத்தியில்பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. 1990ல் இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்சங்க நிர்வாகம் அமைக்கப்பட்டது. அது இதுவரை மீளமைக்கப்படவில்லை. 1998 ன் பின்னர் அதன் கூட்டமும் நடத்தப்படவில்லை. அதன் தலைவர்-கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஒப்பந்தங்களில் மோசடிகளைப் புரிந் ததாக அம்பலப்படுத்தப்பட்ட முன் னாள் அரசஅதிபர் சண்முகநாதன். செயலாளர்- யாழ்ப்பாணத்தின் பிரபலமான வித்தியாசயமான ஊட கவியலாளர் வித்தியாதரன் போன் றோராகும்.

பாடசாலைக்கு 77 லட்சம் ரூபா மதிப்பீட்டில் கட்டடம் ஒன்றை கட்டுவதற்காக ஒரு கோடி ரூபா செலவில்ஒப்பந்தம் செய்யப்பட்டது. பழையமாணவர் சங்கமே ஒப்பந் தகாரராகி, சோமசுந்தரம் என்பவரின் தலைமையில் கட்டட அமைப்புக் குழுவை அமைத்தது. 2000 யூனுக் குள் இக்கட்டம் முடிக்கப்பட வேண்டும்.

EPDP யின் டக்ளஸ் தேவா னந்தாவுடன் இருந்த நெருக்கத்தை வைத்து அவரின் கட்டுப்பாட்டில் இருந்த 'RRAN' இன் நிதியை இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தலைவரான அரச அதிபர் சண்முகநாதனும் செயலாளரும் கட் டட அமைப்புக்காக எடுத்தனர். வேறு எந்தப்பாடசாலைகளுக்கும் இந்த ளவு நிதிவழங்கப்படவில்லை. தாமே நிதியைப்பெற்று தமக்குள்ளேயே ஒப்பந்தகாரரையும் அமைத்து 85 லட்சம் ரூபா பணமும் இவர்களால் பெறப்பட்டுவிட்டது. ஆனால் கட்டடம் இன்னமும் முடியவில்லை. முடிந்த கட்டட வேலை தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் முடிந்த வேலையின் பெறுமதி 45 லட்சம் ரூபாவாகும். மிகுதி 40 லட்சம் ரூபா வுக்கான வேலை எங்கு என நலன் விரும்பிகள் கேட்கின்றனர்.

1998ன் பின் கூட்டப்படாத பழைய மாணவர் சங்கக்கூட்டத் தைக்கூடுமாறு யாழ்பல்கலைக் கழகத்தில் கல்விபயிலும் 75 பழைய மாணவர்கள் கையெழுத்திட்டு கடிதம் அனுப்பினர். யாப்பின்படி 30 உறுப் பினர்கள் கையெழுத்திட்டுக்கோரி னால் சங்கம் கூட்டப்படவேண்டும். ஆனால் சங்கத்தை கூட்ட பழைய மாணவர் சங்கம் தயாராகவில்லை எனத்தெரிவித்துள்ளது.

உண்மை நிலையை உணர்ந்த பாடசாலையின் உயர்தர மாண வர்கள் 1500 பேர் கையெழுத்திட்டு சங்கத்தை கூட்டுமாறு கேட்டுள்ளனர். ஆனால் சங்கம் கூட்டப்படவில்லை.

இதைவிட பாடசாலை சம யலறை கட்டட கேள்விப்பத்திரம் ஒன்று 4லட்சத்து 87 ஆயிரம் ரூபா மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு பகிரங்க கேள்விக்கு விடப்படாமல் பாடசாலை உபஅதிபர், மற்றும் ஒரு ஆசிரிய ருக்கும் வழங்கப்பட்டுள்ளது. உண் மையில் இந்த கட்டடத்தை 3 லட் சத்து 53 ஆயிரம் ரூபா செலவில் செய்வதற்கு மற்றொரு நிறுவனம் தயாராகவிருந்தது.

இதற்கிடையில் அமெரிக்க பழையமாணவர் சங்கம் பாடசாலை பழையமாணவர் சங்கத்திற்கு 5000 அமெரிக்க டொலர்களை அனுப்பியி ருந்தது. அதுபற்றி எந்தவித பதிலும் தமக்கு இல்லை என அமெரிக்க பழையமாணவர்சங்கம் கூறுகின்றது.

அதேபோல் பிரிட்டன் பழை யமாணவர் சங்கம் 23 லட்ச ரூபாவை அனுப்பியிருந்தது. நீண்ட காலமாக இதற்கு என்ன நடந்தது என தெரியா மலிருந்தது. பிற்காலத்தில் பிரிட்டன் பழைய மாணவர் சங்கம் இது பற்றிக்கேள்வியெழுப்ப அப்போது தான் அப்பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்டது. அதுவரை அப்பணம் யாரிடம் வட்டிக்கு கொடுக்கப்பட்டதுஎன நலன் விரும்பிகள் கேள்வி எழுப்புகின் றார்கள்.

இந்த பழையமாணவர் சங் கத்துடன் அதிபர் ஒத்துவராத கார ணத்தால் அவரை மாற்றுமாறு சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதிபரை விசாரிக்கவென அமைச்சிலிருந்து குழுவந்தது. ஆனால் குழுவை முன்னதாக அழைத்துச்சென்ற பழையமாணவர் சங்கம் அவர்களுக்கு சிறப்பான விருந்தை வழங்கி கௌரவித்தது.

அதிபரை மாற்றசாட்சியளி த்தவர் சங்க செயலாளரான பிரபல யாழ்ஊடகவியலாளர். இப்படியாக அடாவடிகள் அங்கு தொடர கட்டட மோசடி தொடர்பாக யாழ்அரசஅதிபர் செ. பத்மநாதன் அறிக்கை ஒன்றை சிறிலங்கா புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு கொடுத்திருந்தார். அதில் யாழ் இந்துக்கல்லூரி ஒப்பந்தகாரராக யாழ் ப.நோ.கூ.சங்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் ஒப்பந்தகாரர் பழையமாணவர் சங்கம்தானாம்.

இந்துக்கல்லூரி மட்டு மல்ல - யாழ்ப்பாண மத்திய கல்லூரி யிலும் EPDP டக்ளஸ் தேவானந் தாவுடன் இணைந்து நடத்திய மோசடி நாடகங்கள் உள்ளன. அங்கும் பழைய மாணவர்கள் இரு கூறாகியுள் ளனர்.நியாயங்கள் ஆவணங்களுடன் பழைய மாணவர்கள் கூட்டம் ஒன்று அங்கும் இருக்கின்றது. அது விவ காரம் மற்றொரு தடவை பார்க்கலாம்.

உண்மை - நேர்மையை போதிக்க வேண்டிய அல்லது போதிக்கும் பாடசாலைகள் - அதற்கு முரணாக செயற்படுவது எத்துணை சரியானது.

இது விடயம் குறித்து பாடசாலை மாணவர்கள் கொதிப்புற்றும் - அச்சம் கொண்டவர்களாக அடங்கியிருக் கின்றனர்.

**துரு.துரு.துருவன்**

அர்த்தமற்ற சிரிப்பைவிட, ஆபத்தானது, ஒன்றுமில்லை. - கேட்குல்லஸ்

**தமிழக திரைப்படவுலகம் அங்குள்ள மக்களின் அரசியல் சமூக, பொருள்தார வாழ்வில் பின்னிப்பிணைந்துள்ளது. ஒரு விதத்தில் தமிழ் நாட்டு பாமர மக்களை ஒருவித கொத்தடிமை களாக்கிவிட்டுள்ளதெனவும் கூறலாம். திரைப்படங்களினால் மூளைச் சலவை செய்யப்பட்டுள்ள ரசிகப்பெருமக்கள் தங்கள் அபிமான கதாநாயகன், நாயகிகளுக்காக தம்மை அர்ப்பணிக்கும் விதங்கள் பைத்தியக்காரத்தனமானவை.**

# சண்டியர்களை உற்பத்தி செய்யும் கனவுத் தொழிற்சாலை!

நடிகர் கமல்ஹாசனின் 'சண்டியர்' திரைப்படம் தமிழ்நாட்டு அரசியல் கட்சியொன்றின் பலத்த எதிர்ப்புக்குள்ளா கியிருக்கிறது. அரிவால் கலாச்சாரத்தையும், சாதிச் சண்டித்தனங்களையும் இத்திரைப்படம் ஊக்குவிப்பதாகக் கூறி புதிய தமிழக கட்சித் தலைவர் டாக்டர் கிருஸ்ணசாமி அதற்கெதிராக போர்க்கொடி தூக்கியுள்ளார். கமல்ஹாசனின் 'தேவர் மகன்' படம் வெளிவந்ததை யடுத்து தமிழக தென்மாவட்டங் களில் சாதிக்கலவரங்கள் தலைதூக்கியுள்ளதாகவும், 'சண்டியர்' என்கிற இந்தப் படமும் இவ்வாறான தொரு நிலை மையை ஏற்படுத்தி விடலாம் என்பதி



லேயே இப்படத்தை வெளியிடக் கூடாதென அவர்வாதாடுகிறார்.

கமல்ஹாசனோ இந்தக் 'குற்றச் சாட்டுக்களை முற்றாக மறுக்கிறார். 'சண்டியரின்' படப்பிடிப்பு பாதியிலேயே உள்ளது. இன்னும் முழுமையடையவில்லை. 'சண்டியர்' என்கிறதலைப்பை மட்டும் வைத்துக்கொண்டு இது சாதிப்பிரச்சினையைத் தூண்டும் படம் என முடிவெடுப்பது தவறானது. இப் படம் எந்தச் சாதிக்கும் ஆதரவாகவோ, எதிராகவோ எடுக்கப்படும் படம் அல்ல. படம் முடிவடைந்த பின்னர் அதனைப் பார்த்து விட்டு யாரும் விமர்சிக்கலாம். ஒரு கலைஞனின் சிந்தனை சுதந்திரத்தை பாதிப்புக்குள்ளாக்கும் இதுபோன்ற அரசியல் கலாச்சாரம் கிட்டத்தட்ட அரிவால் கலாச்சாரத்திற்கு நிகரானதே என காட்டமாகக் கூறுகிறார் கமல்ஹாசன்.

பி.பி.சி தமிழோசை நடிகர் கமல்ஹாசனையும், புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஸ்ண சாமியையும் சில தினங்களின் முன்பு பேட்டி கண்டது. திரைப்படங்களில் அரிவால் கலாச்சாரத்தையும், சாதிச்சண்டைகளையும் வணிக நோக்கத்திற் காகப் புகுத்துவது தடுக்கப்பட வேண்டு மெனவும், இவ்வாறனதொரு சூழலை தமிழ் திரைப்படங்களில் ஆரம்பித்து வைத்தவர் கமல்ஹாசனே எனவும் கிருஸ்ணசாமி கூறினார்.

இவற்றை ஏற்றுக் கொள்ள முடியா தெனக்கூறும் கமல்ஹாசன் எதிர்ப்புகளின் மத்தி யில் இப்படத்தை எடுத்து முடிக்கவுள்ள தாகவும் அதற்கான பாதுகாப்பை அரசாங் கத்திடம் கோரும் உரிமை தமக்குள்ளதெனவும் கூறினார்.

தமிழக திரைப்படவுலகின் புத்திஜீவி எனக் கருதப்படும் கமல்ஹாசன் தனது பக்கநியாயங்களை மிகநேர்த்தியாகவும், உதாரணங்களுடனும் பி. பி.சி.இடம் விளக்கி னார்.திரைப்படவுலகை 'கனவுத் தொழிற்சாலை' எனக் கூறியவர் எழுத்தாளர் சுஜாதா. இந்தக் கனவுத் தொழிற்சாலை சாதாரண மக்களின் வாழ்வில் கனவுகளை மட்டுமா வளர்த்தது? கயமைத்தனங்களையும் வளர்த்து விட்டுள்ளது என்பதை எவரும் மறக்க முடியாது.

தமிழக திரைப்படவுலகம் அங்குள்ள மக்களின் அரசியல் சமூக, பொருளாதார வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளது. ஒரு விதத்தில் தமிழ் நாட்டு பாமர மக்களை ஒரு வித கொத்தடிமைகளாக்கி விட்டுள்ளதெனவும் கூறலாம். திரைப்படங்களினால் மூளைச் சலவை செய்யப்பட்டுள்ள ரசிகப் பெருமக்கள் தங்கள் அபிமான கதாநாயகன், நாயகிகளுக்காக தம்மை அர்ப்பணிக்கும் விதங்கள் பைத்தியக்காரத்தனமானவை.

நடிகைக்கு கோவில் கட்டி கும்பிடுகிறவர்களையும், நடிகனின் 'கட்-அவுட்' டிற்கு பாலாபிசேகம் செய்பவர்களையும், அன்பைத் தெரிவிக்க தனது கட்டை விரலை வெட்டுகிறவர் களையும், தீக்குளிக்கிறவர் களையும் உலகி லேயே தமிழ் நாட்டில் மட்டும் தான் பார்க்க முடியும்.

படிப்பறிவற்ற பாமரர்களை மட்டுல்லாது. படித்தவர்களைக் கூட தமிழ் நாட்டில் சினிமா ஆக்கிரமித்துள்ளது. அண்மையில் இந்திய வானொலி நிலையம் பேராசிரியை ஒருவரை கல்வி தொடர்பாக பேட்டிகண்டது. அவர் கல்வி தொடர்பாக தனது கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கை யில் ஒரு கட்டத்தில் சொன்னார்.

"நம்ம ரஜினி ஒரு படத்துல சொன்னாரு பாருங்க நமக்குள்ள ஒரு சிங்கம் தூங்கிக்கிட்டிருக்குது என்று, அது மாதிரி மாணவர்கள் மத்தியில் தூங்கிக் கொண்டிருக்கிற திறமை எனும் சிங்கத்தை ஆசிரியர்கள் தான் எழுப்பிவிடணும்"

பாருங்கள் ஒரு பேராசிரியை ஒரு நல்ல கருத்தைக் கூறிவிடும் போது உதாரணத்திற்கு யாரைத்துணைக்கு அழைக்கிறார் என்று? அந்தளவிற்கு சினிமா எல்லோரினது உணர்வுகளுக்குள்ளும் நுழைந்துள்ளது.

தமிழகத்தில் மிகப் பெரிய தொழில் நிறுவனமாக சினிமாவுலகம் நிலை பெற்றுள்ளது. தொழில் நுட்பரீதியாக அதீத வளர்ச்சியினை அது பெற்றுக் கொண்டபோதிலும், திரைப்படங்களின் தரம் மிக மோசமானதாகவே வளர்ந்து வருகிறது. சமீப காலமாக தமிழக சினிமாவில் அதிகம் கோலோச்சுவது ரவுடியினம் தான். கதாநயகர்களை ரவுடிகளாக- வெட்டுக் கொத்துக்கஞ்சாதவர்களாக சித்திரிக்கும் திரைப் படங்கள் அதிகம் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவ்வாறு ரவுடித்தனம் செய்பவர்களை பெண்கள் அதிகம் விரும்புவதா கவும் காட்சிகள் புனையப்படுகின்றன. அடிதடி, அரிவால் வெட்டு என அலையும் கதாநாயகனைப் பார்த்து அதற்காகவே அவன் மீது காதல் கொள்கின்றாள் நாயகி. "......மெல்லிய ஆண்மகனைப் பெண்ணுக்குப் பிடிக்காது. முரடா உனைரசித்தேன்....." என ஆடிப்பாடுகிறாள் அவள். இவ்வாறன சித்திரிப்புக்கள் இன்றைய கட்டிளமைப்பருவத்து இளைஞர்களின் மனங்களில் ஒரு பாதிப்பை உருவாக்குகிறது. இன்று எமது யாழ்ப்பாண மண்ணிலேயே 'தீனா", றெட்" என்ற திரைப்பட பெயர்களில் ரவுடிக் கும்பல்கள் தோற்றம் பெற்றுள்ளதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். படத்தில் 99வீதம் ரவுடிகளையும் ஆபாசத்தையும் உலவவிட்டு விட்டு இறுதியில் ரவுடியினம் தவறானது எனக்காட்டி இயக்குநரும் தயாரிப்பாளரும் தப்பித்துக் கொள்ளப்பார்க்கின்றனர்.

கதாநயகர்கள் ரவுடிகளாகவும், தாதாக்களாகவும் தோன்றும் படங்களே இன்று அடுத்தடுத்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவ்வகையான படங்களே இப்போது அதிக நாட்கள் ஓடி வெற்றியும் பெறுகின்றன.ஓரளவு தரமான 'அன்பேசிவம்' போன்ற படங்கள் தோல்வியடைந்து பொருளாதார நட்டத்தை ஏற்படுத்தியுள்ளன. இன்றைய தமிழ் சினிமா உலகில் இது ஒரு மோசமான நிலைமை.

ஒரு படம் பொருளாதார ரீதியாக வெற்றி பெறுவதற்கு எதைஎதையெல்லாம் கையாளலாம் என தயாரிப்பாளர்கள் ஒவ்வொரு நிமிடமும் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர். வன்முறை, ஆபாசம், இரட்டை அர்த்தவசனங்கள் என இன்னும் எத்தனை மோசமான விடயங்களை சினிமாவில் கலக்க முடியுமோ எல்லாவற்றையும் செய்வார்கள். பணம் ஒன்றே அவர்களது குறி.

தமிழில் நல்ல திரைப்படங்கள் உருவாகாமைக்கு காரணம் திரையுலகினர் தான் என விமர்சகர்கள் குற்றம் கூறுகின்ற போதிலும் சினிமாத்துறையினர் ரசிகர்களைத்தான் குறைகூறுகின்றனர்.

நடிகர், கதாசிரியர், தயாரிப்பாளர், இயக்குநர் என எல்லாத்துறைகளிலும்

**வேனிலன்**

தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்ற கமல் ஹாசனே இப்படித்தான் கூறுகிறார். நாங்கள் வணிகர்கள். மக்களை நுகர்வோர். தரமானவற்றை ஏற்றுக் கொள்ளவும், தரமற்றவற்றைப் புறக்கணிகவும் தகுதியும் உரிமையும் உடையவர்கள் அவர்கள்தான். நல்லனவற்றை ஏற்றுக்கொண்டு தீயனவற்றைப் புறக்கணிக்கின்ற நிலைமை ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டால் தான் நல்ல சினிமா உருவாகும் என்கிறார்.நடிகர் கமல்ஹாசன் தனிப்பட்ட முறையில் சாதி, மத உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவர் என்றே அறியப்படுகின்றவர். பிராமணரான இவர் தனது இளவயதிலேயே பூநூலைக் கழற்றி வைத்துவிட்டார். அசைவ உணவுகளை உண்டவர் தனது மகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் சாதி, மத அடையாளங்களை குறிப் பிட மறுத்தவர் இவற்றை யும் விட இன்றைய தமிழக சினிமாவுலகில் நிறையத் தேடல் உள்ளவர். இலக்கிய ஆர்வம் உள்ளவர்.

எனினும் அவர் ஒரு சினிமா வணிகர். இதனை அவரே ஒப்புக் கொள்கிறார். இன்று சாதி, மதப்பிரச்சினைகளைக் கையாண் டால் தான் லாபம் ஈட்டலாம் என்று வந்தால், அதனை அவர் கையாள முயலலாம் அல்லவா? அவ்வாறு நான் கருதவும் இடம் இருக்கிறது அல்லவா?

கமலின் 'சண்டியர்' விவகாரத்தில் இன்னொரு சுவாரஸ்யம் யாதெனில், படப்பிடிப்புக்களை நடாத்த பொலிஸ் பாதுகாப்புத் தேவையென தமிழக அரசை அவர் கேட்டுள்ளார். பொலிஸ் இதற்குத் தயங்கிறது. தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் கைகளை விரித்து விட்டார்.காரணம் சண்டியர் படத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு அளித்தால் தமது கட்சித் தொண்டர்கள் மனித வெடிகுண்டுகளாக மாறுவர் என புதிய தமிழக் கட்சித் தலைவர் அதிரடி மிரட்டல் ஒன்றை விடுத்துள்ளார். இந்த வார்த்தைக் குண்டிற்குதமிழக அரசு பயப்படுகிறதாம்.

இன்று தமிழ் நாட்டில் மக்களுக்கு எத்தனையோ அவலங்களும், அடிமைத்தனங் களும் சூழ்ந்துள்ளன. அதற்கெதிராக உறுதியுடன் போராட எவருமி ல்லை 'சண்டியர்' படத்திற்கெதிராக மனித வெடிகுண்டுகளாகப் போகி றார்களாம். சில சமயங்களில் அரசியல் வாதிகள் நடிகர்களையும் மிஞ்சிவிடுகிறார்கள்.

இன்று தமிழகத்தில் மட்டுமல்லாது இந்தியா முழுவ துமே சாதி, மத கலவரங்கள் நிகழ்கின்றன.சாதி, மத ரீதியான அமைப்புகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இந்நிலைமைகளுக்கு முக்கிய காரணம் அரசியல்வாதிகள் தான். தமது வாக்கு வங்கிகளை பெருக்கிக் கொள்வதற்காக இவ்வாறான அமைப்புக்களை அவர்கள் வளர்த்து வருகின்றனர். இதற்கெல்லாம் முதலல் பொறுப்பேற்க வேண்டியவர்கள் அரசியல் வாதிகள் தான்.

சினிமா சீரழிவில் இருந்து தமிழக மக்களை மீட்டெடுப்பதற்கு இன்று போராட்ட நடவடிக்கை ஒன்று அவசியமானதென்பதை எவரும் மறுக்கவியலாது. ஆனால் அது சுயவிளம்பரங்களுக்காகவோ, அரசியல் ஆதாயங்களுக்காகவோ என்றில்லாமல் உண்மையானதாக இருக்க வேண்டும். அவ்வாறான அர்ப் பணிப்புடன் எவரும் இதனை மேற்கொண்டால் அது வரவேற்றக் கூடியதே.

---

## உங்கள் இரத்தப் பிரிவு உங்களைப் பற்றி என்ன கூறுகிறது



**O** நீங்கள் தலைமை தாங்குபவராக இருக்க விரும்புவீர்கள். விரும்புவதை அடையமுயல்வீர்கள். முன்னுதாரணமாக இருப்பீர்கள். விசுவாசமானவராக, இரக்க சிந்தை கொண்டவராக தன்னம்பிக்கை கொண்டவராக இருப்பீர்கள். வெற்று ஆரவாரமும் அளவுக்கு அதிகமான போட்டி மனப்பான்மை கொண்டவராக இருப்பதும் உங்கள் பலவீனங்களாகும்.

**A** இணக்கம் அமைதி, ஒழுங்கமைப்பு முதலியவற்றை விரும்புவீர்கள். பொறுமையும் கூருணர்வும், அன்பும் கொண்டவர் களுடன் நன்றாக இணைந்து வேலை செய்வீர்கள். பிடிவாதமும் இயல்பாக பழகமுடியாமையும் உங்களுடைய பலவீனங்களாகும்.

**B** முரட்டுத்தனமான நீங்கள் வெளிப்படையாக கதைப்பவராகவும், உங்கள் விருப்பப்படி காரியங்களை ஆற்றவிரும்பு வராகவும்இருப்பீர்கள். ஆக்க பூர்வமானவரும் நெகிழ்ச்சித் தன்மை கொண்டவருமான நீங்கள் எந்தச்சூழ்நிலையோடும் இயைபாகிக்கொள்வீர்கள். ஆனால் சுயாதீனமாக இருப்பதில் காட்டும் பிடிவாதம் உங்கள் பல வீனமாகலாம்.

நன்றி - டெய்லிமிரா

## பென்குவின் அச்சிட்ட புத்தகங்களை பங்கிட்டால் உலகில் உள்ள அனைவருக்கும் ஒரு புத்தகம் வீதம் கிடைக்கும்

# "பென்குவின்" வெளியீட்டகத்தின் பிரமிக்க வைக்கும் சாதனை

துப்பறியும கதைகளை எழுதி உலகில் பிரபல்யம் பெற்ற 'அகதா கிறிஸ்டி'க்கு 1935இன் முற்பகுதியில் பெரியஅளவில் வேலைகள் இருக்கவில்லை. நண்ப, நண்பியர்களோடு உல்லாசப்பயணங்கள் சென்று காலத்தைக் கழிக்கும்அவரைச் சந்திப்பதற்கு அவரது நண்பியான 'அலன்லேன்' வந்தது அக்கால கட்டத்திலேயே.

அகதா கிறிஸ்டியின் வீட்டில் இருந்து திரும்பி லண்டனுக்குச் செல்லும் அலன்லேன் 'எக்ஸீடர்' புகையிரதநிலையத்தில் புகையிரதத்தில் ஏறவேண்டி இருந்தது. லண்டனுக்குச் செல்லும் இடைவழியில் வாசிப்பதற்கு புத்தகம்- சஞ்சிகை வாங்கினால் நல்லது என்று அப்பொழுது அவர் நினைத்தார். ஆனால் புகையிரத நிலையத்தில் இருந்த எந்த ஒரு புத்தக சாலையிலும் வாசிப்பதற்கு ஏற்றவிதத்தில் புத்தகங்கள் இருக்கவில்லை. அங்கு விக்ரோறியா காலத்தில் எழுதப்பட்ட நாவல்களே இருந்தன. அவையும் அட்டைகள் கட்டப்பட்டு பாரமானவைகளாகவே இருந்தன.

புத்தகங்களை வாங்குவதற்காக புகையிரதநிலையத்தில் கடை கடையாகச் சென்ற 'அலன் லேன்' புதுமையான விதத்தில் சிந்தித்தார். புகையிரதப்பயணங்களின் இடைவழியில் வாசிப்பதற்கு ஏற்றவிதமாக புத்தகங்கள்- சஞ்சிகைகள் வெளியிடப் படாதது ஏன்?

அந்த வினாவிற்கான விடை அந்தநேரத்திலேயே அலன்லேனினுடைய உள்ளத்தில் எழுந்தது. தடிப்பான அட்டைகளுக்குப் பதிலாக கடதாசி உறைகளைப் பாவித்து தடிப்பான கடதாசிகளில் அன்றி மெல்லிய கடதாசிகளைப் பாவித்து புத்தகங்களை அச்சிட்டு வெளியிடவேண்டுமென்பதே அந்த விடையாகும். அப்பொழுது இலாபத்தோடு புத்தகங்கைள வெளியிட முடியும்.

இந்தவிதமாக அச்சிடும் புத்தகங்களை எந்தளவு குறைந்த விலையில் விற்கலாம் என அவர் கணக்கிட்டுப்பார்த்தார். விடை ஆறு பென்ஸ். அந்தக் காலத்தில் ஒரு சிகரட் பக்கட்டின் விலையும் அதுவே. புகையிரதத்தில் பயணம் செய்யும் மனிதர்கள் எத்தனை சிகரட் பக்கட்டுக்களை காரணமின்றி எரித்துத் தள்ளுகின்றார்கள். அந்தத் தொகையை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியும். அத்தோடு ஒரு சிகரட் பக்கட்டுக்குக் கொடுக்கும் விலையினைக் கொடுத்து புத்தகம் ஒன்றினை விலைக்கு வாங்காமலிருப்பதற்கு எந்தக்காரணமும் இல்லை.

இந்த எண்ணத்தினை மனதிலே தாங்கிய வண்ணம் லண்டனுக்கு வந்த அலன்லேன் 1935 இல் கோடைகாலத்தில் 100 பவுண் முதலீடு செய்து புதிய புத்தக வெளியீட்டு நிறுவனம் ஒன்றினை ஆரம்பித்தார். "பென்குவின் வெளியீட்டாளர்கள்" என்று அவர் அதற்குப் பெயர் வழங்கினார்.

"பென்குவின் வெளியீட்டாளர்கள்" இன்று உலகத்தில் இருக்கக்கூடிய மிகப் பெரிய புத்தக வெளியீட்டார்கள் மாத்திரமன்றி, உலகில் புத்தகங்களை வாசிக்கின்ற அதிகம்பேர்களால் பெயர் கூறியவுடன்



தெரிந்து கொள்ளக் கூடிய வெளியீட்டாளர்களும் ஆவர். 'பென்குவின்' புத்தகங்களில் உள்ள அதிவிசேசம் என்ன வென்று கேட்டால் இன்றும் அந்த வெளியீட்டாளர்கள் கூறுவது, அன்றைய ஆரம்ப கர்த்தாவான 'அலன் லேன்' இன்றைக்கும் 67 வருடங்கட்கு முன் சொல்லிய வாக்கியத்தினையே.

"நல்ல புத்தகங்கள் குறைந்தவிலையில்" என்பதே அந்தவாக்கியமாகும்.

குறைந்த விலைக்கு நல்ல புத்தகங்களை வழங்குவதற்கு ஆரம்பித்த பென்குவின் நிறுவனத்தின் பொருட்டு அலன் லேன் முதலில் ஏர்னஸ்ட்ஹேமிங்வே, அகதா கிறிஸ்டி, மற்றும் எரிக்வின்க்லேடர் ஆகிய எழுத்தாளர்களது புத்தகங்களையே வெளியிட்டார்.

இந்த எழுத்தாளர்களது நல்ல ஆக்கங்கள் குறைந்த விலையில் பென்குவின் வெளியீட்டாளர்களினால் தயாரிக்கப்பட்டு கடதாசி உறைகள் இடப்பட்ட புத்தகங்கள் நன்றாக விற்பனையாகின. அந்த விற்பனை எந்தளவு வேகமாக நடைபெற்றது என்றால் பென்குவின் வெளியீட்டு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட காலம் கழிந்தபோது 30 லட்சம் புத்தகங்கள் விற்பனையாகி முடிந்துவிட்டன. இந்த நிறுவனம் ஆரம்பமாகி ஒரு வருடம் கழிந்த போது ஒரு நாளைக்கு 3000 புத்தகங்கள் விற்பனையாகின என்று சொல்லப் படுகின்றது.

உலகிற்கு புதிய எண்ணக் கருத்தோடு அல்லது மெல்லிய கடதாசிகளினால் நல்ல புத்தகங்களை அச்சிடுவதை அறிமுகம் செய்துதந்த அலன்லேனினுடைய பென்குவின் வெளியீட்டு நிறுவனம் பற்றி 1935 மார்ச் 5ஆம் திகதிய 'நியூ இங்கிலீஸ் வீக்லி' (NEW ENGLISH WEEKLY) சஞ்சிகையில் ஜோர்ஜ் ஓவல்' இவ்வாறு எழுதினார்.

"எழுத்தாளர்களுக்கே இருக்கக் கூடிய எனது வறுமை நிலையில் புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்கின்ற நேரங்களில் நான் பென்குவின் புத்தகங்களை பற்றிநினைப்பேன். அதேபோன்று எழுத்தாளன் என்ற விதமாக என்னிடம் இருக்கும் ரசனையின் போதும் நான் முதலில் நினைப்பது பென்குவின் புத்தகங்களைப் பற்றியே.

உலகில் உள்ள ஆயிரக் கணக்கான புத்தக வெளியீட்டாளர்களின் சவால்களுக்கு மத்தியில் 65 வருடங்கட்கு மேலான காலம் வாழ்வதற்கு பென்குவினுக்கு வேகமாக ஓடக்கூடிய ஆற்றலினைக் கொடுத்த ஒரே வேர் நல்ல புத்தகங்களை குறைந்த விலையில் விற்பது மாத்திரம் அல்ல, மனக் கிளர்ச்சியினைத்தரும் புத்தகங்களை- நூல்களை வெளியிடுவதுமே அதற்கான காரணமாகும்.

இரண்டாம் உலக யுத்த சமயத்தில் பென்குவின் வெளியிட்ட 'ஏயர்கிராப்ட் றெகக்னிஷன் (AIRCRAFT RECOGNITION) நூல் அதுபோன்ற மனக்கிளர்ச்சியினைத் தரும் ஒன்றாகும். பல நாடுகளில் நண்பர்கள்-பகைவர்கள் என்ற சாரார் ஆகாயவிமானங்களைப் பற்றி விரைவாக்கத் தெரிந்து கொள்ளும் விதமாக படைவீரர்களைப் போன்று சாதாரண குடிமக்களுக்கும் விளக்குவதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாக இருந்தது.

ஆனால் எல்லாநாடுகளினதும் பாதுகாப்புப் பிரிவுகள் இந்தப்புத்தகம் அனைத்து நாடுகளினதும் யுத்த திட்டங்களை உடைத்துப்போடும் வெடிகுண்டு என்று வர்ணித்தார்கள். அவ்வாறு கூறப்பட்ட உடனேயே புத்தகங்கள் சஞ்சிகைகளை வாசிக்கும் பாதுகாப்புப் பிரிவின் அங்கத்தவர்களும் சாதாரண குடிமக்களும் இந்தப்புத்தகத்தினை விலை கொடுத்துப்பெற்றுக்கொண்டார்கள். பென்குவின் மீது மக்கள் பிரியமும், மிகுந்த ஆதாயமும் இதன் மூலம் பிறந்தது.

சமீப காலத்தில் பென்குவின் பிரசுரம் செய்து பரபரப்பை ஏற்படுத்தியது'சல்மன் ருஷ்டி' எழுதிய 'தி சட்டனிக் வர்சஸ்' (THE SATANIC VERSES) நூலாகும். இந்த நூல் வெளியிடப்பட்டபிறகு முழு இஸ்லாம் நாடுகளும் 'சல்மன் ருஷ்டிக்கு' எதிராக ஆயுதங்களை ஏந்தினாலும் அவரைப் பாதுகாத்துக் கொண்டு புத்தகத்தினை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகளையும் பென்குவின் மேற்கொண்டது.

பென்குவின் வெளியீட்டாளர்களது இத்தனை வெற்றிக்கும் காரணம் அவர்கள் எழுத்தாளர்களோடு வைத்துள்ள தொடர்புகளும் மிகவும் முக்கியமான ஒன்றாக உள்ளது.

புத்தகங்களை வெளியிடுவதற்கு பென்குவின் நிறுவனத்திற்கு வரும் எழுத்தாளர்களோடு இணைந்து கொள்வது விற்பனையாகும் புத்தகங்களின் பிரதிகளின் கணக்கிற்கு ஏற்பஅல்ல.முதலில் எழுத்தாளர்களுக்கு தாங்கள் வழங்கப்போகும் தொகையினைக் கூறுவார்கள். புத்தகத்தின் கையெழுத்துப்பிரதி வழங்கப்பட்டஉடனேயே அத்தொகையை வழங்கிவிடுவார்கள் அவ்வளவே.

இந்தளவு பரந்த உபாயங்களைத் தெரிந்து கொண்டுள்ள வெளியீட்டார்களான பென்குவின் பற்றி யாராவது தெரிந்து கொள்வதற்கு விரும்பினால் விடையினைத் தேடிக்கொள்வதற்கு கடினமான விசாரிப்புகள் இரண்டு உண்டு. புத்தக விற்பனையில் இதுவரை காலமும் பென்குவின் சம்பாதித்துக் கொண்ட செல்வம் எவ்வளவு என்பது ஒருவினா. ஆனால் அதற்கு சரியான விடை தேடுவது என்பது பெருந்தொகையான பாய்க் கூட்டத்தில் ஊசியினைத் தேடுவது போன்றதாகும். அந்தக் காரணம் அப்படியிருந்தாலும் பென்குவின் விற்பனை செய்துள்ள புத்தகங்கள் பற்றி பொதுவான சில கருத்து உண்டு. பலவிதமான கம்பனிகளைப் பற்றி அவற்றின் விற்பனைகள் பற்றி விபரங்களைத் தேடிக்கொள்ளும் 'செல்லிங் பொயின்ற்'(SELLING POINT) என்கின்ற இணையத்தில் தாம் ஒரு தடவை பென்குவின் புத்தகங்களின் விற்பனை பற்றி குறிப்பிட்டுள்ளது. அந்த இணையத்தளத்தில் யாரோ கேட்ட கேள்விக்கு விடையாகச் சொல்லப்பட்டது பென்குவின் விற்பனை செய்துள்ள புத்தகங்களின் தொகை உலகில் இன்று வாழ்கின்ற மனிதர் தொகையைவிட மிகவும் அதிகம் என்பதாகும்.

**வல்வையூரான்**

---

**ஊக்கமாத்திரை**

# உழைத்து வாழவேண்டும்

உலகில அதி உன்னதமானது உழைப்புத்தான். உழைத்து வாழ்வதே சந்தோஷமானது. தன்னம்பிக்கையுள்ள எந்த மனிதனும் தன்னுடைய உழைப்பில் வாழ்வதிலேயே மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைவான். உழைக்கவேண்டும் என்ற ஆர்வமும் முயற்சியும் உள்ளவர்களை வேலைதேடி வரும். தன்னம்பிக்கையற்ற சோம்பலானவர்களைக்கண்டால் இருக்கும் வேலையும் தொலைந்து போய்விடும். ஒவ்வொரு மனிதனும் தன்னம்பிக்கையுடன் விடாமுயற்சியுடன் உழைத்து ஒரு நிறைவான வாழ்க்கையை வாழமுயற்சிக்க வேண்டும்.



எமது உழைப்பில் வெற்றியடைய விரும்பும் நாம் ஒவ்வொருவரும், எங்களுக்கேற்ற வேலையைத்தெரிவு செய்வதில் தான் எமது திறமை வெளிப்படுகிறது. அப்படி எங்களுக்கேற்ற வேலையில் தொடர்ந்து விடா முயற்சியுடன் உழைப்போமானால் எமது வாழ்வில் நாம் வெற்றி பெறுவது நிச்சயமாகிறது. எமது உழைப்பு வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தைக் கொடுக்கின்றது. எவ்வளவு வசதிவாய்ப்புடன் இருப்பவர்களும் தன் உழைப்பில் ஏற்படும் வெற்றியிலேயே மனமகிழ்ச்சியைப் பெறமுடியும். ஒருவன் தனக்காக மட்டுமல்லாது தன் குடும்பத்திற்காகவும் சமூகத்திற்காகவும் உழைத்தானேயானால் அவனுடைய வாழ்வில் தோல்வி என்ற சொல்லுக்கே இடமில்லாமல் போகிறது. இது தான் மனிதனுடைய வாழ்வை முழுமையடைய வைக்கிறது.

மனிதனுடைய வாழ்வில்அவனுடைய தொழில் ஒரு வரம் என்று கூறுவார்கள். மனதிற்குப்பிடித்தமான ஒரு உழைப்பில் ஈடுபடும் போது அவனது வாழ்வே இன்பமயமாக அமைந்து விடுகிறது. குடும்பம் என்ற சிறுவட்டத்திற்குள் நிற்காமல் சமூகம் என்ற பெரு வெளியில் அவனது உழைப்பு இருக்குமானால் அவனது மகிழ்வு இரட்டிப்பாகிறது. உறவுகளிடம் கிடைக்காத இன்பத்தையும் சமூகத்திற்கான உழைப்பில் அவன் பெறமுடியும். ஆகவே உழைப்பு ஒருவனின் உயிர் நாடி என்று கூறலாம். இது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல. உழைப்பின்றி வாழ்பவனை உலகம் கண்டுகொள்வதில்லை. தன் குடும்பத்திற்காக, சமூகத்திற்காக உழைப்பவனை உலகம் என்றும் மறப்பதில்லை. ஆகவே மனிதனை என்றும் வாழவைப்பது அவனின் உழைப்புத்தான். உயர்வுக்கு ஆதாரம் உழைப்பு.

சிலருக்கு உழைக்கத் தொடங்கும் போது உள்ள உற்சாகம், ஆர்வம் தொடர்ந்து இருப்பதில்லை. இதனாலேயே அவர்களின் நிலை தாழ்ந்து உழைப்பை இழக்கவேண்டிய நிலை தோன்றுகின்றது. எந்நேரமும் மனதைச் சோரவிடாது நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். நாளை என்ற நினைப்பையே மறந்து இன்றே எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து விடவேண்டும். அதுதான் முழுவீச்சான உழைப்பு. நாளை என்ற எண்ணம் தோன்றும் போதே மனதில் சோம்பல் தோன்றி விட்டதென்பதே அர்த்தமாகிறது. இதனால் எமது முன்னேற்றம் இறங்குமுகமாகப் போகத் தொடங்கும். இது மனிதனைப் படுகுழியில் தள்ளிவிடும். உயர்வுக்குக் காரணம் விடாமுயற்சியுடனான உழைப்பு. தாழ்வுக்குக் காரணம் சோம்பல். இதையுணர்ந்து விட்டோமானால் சோம்பலை அண்டவிடாது விடா முயற்சியுடன் உழைத்து முன்னேற முடியும். " முயற்சியுடையார் இகழ்சியடையார்" என்பது பழமொழி.

உலகில் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளில் உழைப்போரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதைக் காண முடியும். பின்தங்கிய நாடுகளில் குடும்பத்தில் ஒருவர் மட்டுமே உழைப்பாளியாக இருப்பார். மற்றவர்கள் அவரின் உழைப்பில் உடம்பு வளர்ப்பவர்களாகவே இருக்கிறார்கள். இதற்கு நொண்டிச் சாட்டாக வேலையில்லை என்ற சோம்போறித்தனமான பதிலைக் கூறுவார்கள். தன்மானமுள்ள எவரும் இப்படி நினைக்கமாட்டார்கள். தங்கள் தேவைக்கான உணவு, உடையை தானேதான் உழைத்துப் பெறவேண்டும் என்று முயற்சி எடுப்பார்கள். சீனா, யப்பான் போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் அங்கு சிறுவர்களிலிருந்து முதியோர் வரையில் ஏதோ ஒரு வகையில் உழைப்பாளிகளாகவே இருப்பதைக் காணலாம். எங்கள் நாட்டிலும் சில குடும்பங்களில் அனைவரும் உழைப்பாளிகளாகவே இருப்பதைக் காணலாம்.

இது போல் எல்லோரும் உற்சாகத்துடன் விடா முயற்சியுடன் உழைக்கத் தொடங்கினார்களானால் எமது நாட்டின் வளர்ச்சி துரிதமாகும்.

அதைவிடுத்து சிலர் " ஓடு மீன் ஓட உறு மீன் வரும் வரை வாடியிருக்குமாம் கொக்கு " என்பது போல் பெரிய வேலைக்காகக் காத்திருப்போமானால் அது எமக்கும் நாட்டிற்கும் பெரும் நட்டமாகவே முடியும். எனவே எந்த வேலையானாலும் எமது உழைப்பில் நம்பிக்கை வைத்து இன்றே ஒரு தொழிலைத் தொடங்கி விடாமுயற்சியுடன் உழைப்போமானால் நாமும் நாடும் வெற்றியடைவது நிச்சயம். நாம் உழைக்க ஆயத்தமாக இருப்போமானால் தொழில் எம்மைத் தேடிவரும். உழைப்பாளிகளே எமது உழைப்புத்தான் ஒரு தொழிலுக்கு கௌரவம் கொடுக்குமே (யொழிய) தவிர தொழில் எங்களுக்கு கௌரவம் கொடுப்பதில்லை.

**இராஜசாந்தி**

( 1[illegible]ம்பக்கம் பார்க்க...)

தாமரைச்செல்வியின்



# பச்சை வயல் கனவு

## அத்தியாயம் – 04

முழுநிலவு வானத்தில் முகில்களிடையே நீந்திக்கொண்டிருந்தது. தூரத்தூர மினுக் மினுக் கென்று ஒளிரும் நட்சத்திரங்கள். அந்தப் பால் நிலவு வெளிச் சத்தில் சிவமும் நண்பர்களும் ஊர் இளை ஞர்களும் நவக்கிரியிலிருந்து வண்டில்களில் ஊருக்குத்திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஓவென்ற உற்சாகம் அவர்களுக்குள் தழும் பிக்கொண்டிருந்தது. சண்முகமும் தியாகனும் உரத்த குரலில் பாட்டுப் பாடிக்கொண்டே வந்தார்கள். முன் புறமாய் போன வண்டிலி லிருந்து நாகன் பதிலுக்குப்பாடினான். ஊர் இளைஞர்களிலும் ஒரு பகுதியினர் வண்டில் கட்டிக்கொண்டு சவாரி பார்க்க வந்திருந்தார்கள்.

போட்டியில் சிவம் முதல் பரிசு பெற்றபோது தமக்கேகிடைத்த வெற்றியாக..... தமது ஊருக்கேகிடைத்த வெற்றியாக அத்தனை பேரும் கொண்டாடி னார்கள். இப்படி கூட்டமாய் வருவதை அப்பு பார்த்தால் திட்டத்தொடங்கிவிடுவார். கண்ட கண்டபெடியளோட உனக்கென்ன கொண் டாட்டம் என்று முணு முணுப்பார். சினேகிதம் என்று இல்லாவிட்டாலும் பார்க்கும்போது சிரிப்பதும் அவசியம் என்றால் கதைப்பதும் தவறாய் அவனுக்குத்தோன்றியதில்லை.

இன்றைக்கு நவக்கிரியிலிருந்து புறப்படுவதற்கே நேரமாகிவிட்டது. நிலாவரை வெளிகடக்கும்போதே எட்டு மணியாயிருந்தது. வண்டிலில் இருந்தபடியே செல்லமாய் தட்டிக்கொடுக்க சிவலையும் வெள்ளையும் ஆறுதலாய் நடந்து கொண்டி ருந்தன. புத்தூர் கடந்து மட்டுவிலுக்கு வரும் வெளியை அடைய ஒன்பது மணியாகி விட்டது. இருபக்கமும் பெருவெளி பரந்து கிடக்க இரவின் அமைதியில் நிலவின் வெளிச்சத்தில் வண்டில்கள் நிதானமாய் வந்துகொண்டிருந்தன.

இன்றைய போட்டியில் வழமையை விட அதிகமானவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். மட்டுவில்,புத்தூர், ஆவரங்காலிலிந்து பெயர்பெற்ற சவாரிக்காரர் வந்தும் அவனை முந்த அவர்களால் முடியவில்லை. இரண்டாம் இடத்துக்கு வந்திருந்த மட்டுவில் மாப் பாணரின் வண்டிலும் அவர்களுக்கு பின்னாலேயே வந்துகொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அவர்தான் வெல்லப்போகின்றார் என்ற நிலை இருந்தது. கடைசி நேரத்தில் சிவலையும் வெள்ளையும் வேகமாக ஓடி முந்திவிட்டன. மாப்பாணருக்கு முகம் கொஞ்சம் மாறித்தான் போய்விட்டது. அதைக் காட்டிக்கொள்ளாமல் “இளந்தாரிப் பெடியளோட எங்களால போட்டி போட ஏலுமே..... என்று சொல்லிச்சிரித்து சமாளித்து விட்டார்.

வந்துகொண்டிருந்த வண்டில்கள் வாதரவத்தையில் தெருவோரம் இருந்த சிறிய கோவிலின் முன்பாக நின்றன. தாங்கள் தொடர்ந்து போவதாகக் கூறிய நாகனின் வண்டில் தொடர்ந்து பயணித்தது.

“ மாடுகளும் களைச்சுப்போச்சுதுகள். கொஞ்சம் ஆறிப்போவம்.” எல்லோரும் வண்டில்களிலிருந்து இறங்கி தெருக்கரையில் நின்றார்கள். அந்த வெட்ட வெளியில் வீசிய காற்று காதின் சவ்வுகளை வந்து அறைந்தது. “ இதென்னடாப்பா இப்படிக் காத்து வீசுது.” சண்முகம் இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டான். திரும்பவும் வண்டிலில் ஏறி அமர்ந்து கொண்டான்.

மாடுகளைத் தடவிக் கொண்டே சிவம் மாப்பாணரிடம் கேட்டான். “ அண்ணை இப்பவும் மட்டுவிலில தான் இருக்கிறியளே...” “ இல்லைத் தம்பி. மனுசியின்ர ஊரோட போயிட்டன். வன்னிவிளாங்குளம் விதானையாற்ற மோளைத் தானே நான் முடிச்சனான்.” “ வன்னிவிளாங்குளம் என்றால் அது எங்க கிடக்கு.” “ கிளிநொச்சி தாண்டி மாங்குளம் போய் மேற்குப் பக்கமாய் போனால் மூண்டு கட்டையில வாற ஊர். பழைய காலக்குடியிருப்பு. கொஞ்சச் சனம் பரம்பரை பரம்பரையாய் அங்க இருக்குதுகள். வயல் புலம் தோட்டம் துரவு கிடக்கு. இந்தச் சவாரிப் பைத்தி யத்தாலயல்லோ நான் இங்க ஓடி வாறது.” ஏற்ற இறக்கத்துடன் பேசிய அவரது பேச்சை ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்தான் சிவம்.

“அந்தக் காடுகளுக்க எப்பிடியண்ணை சனங்கள் சீவிக்குதுகள்.” “ வழியில தானடாப்பா பெருங்காடுகள் இருக்கு. உங்களுக்கு இங்க இருந்து யோசிக்க காடு போலதான் இருக்கும். அங்க உள்ளது களுக்கு தங்கட ஊர்தானே பெரிசு. மட்டு விலுக்கு வாவனடியாத்தை எண்டு மனுசியைக்கேட்டனான். தன்ர ஊரை விட்டுட்டு வரமாட்டன் எண்டு சொல்லிப் போட்டுது. நீ அம்மாளாச்சியைப் பற்றிக் கேள்விப்படேல்லையோ. வைகாசி விசாகப் பொங்கலுக்கு இங்கயிருந்து தானே வாழைக்குலை, தேங்காய் எல்லாம் ஏத்திக்கொண்டு பண்ட வண்டில் போறது. இந்த மாதிரி சின்னச் சின்ன குடியிருப்புகள் அங்க இருக்கு. பனங்காமம் எல்லாம் அப்பிடித்தான் பண்டார வன்னியன்ர மண் அல்லே.”

நிலவு வெளிச்சம் தெறித்து விழுந்த அவர் முகத்தையே சிவம் பார்த்துக் கொண்டிருந்தான். கிளிநொச்சி பற்றிய தன் நினைப்பு மெல்ல ஆட்டம் காண்பது போல இருந்தது. “ காத்துக்கு இருக்கஏலாது. போவம் வாருங்கோடாப்பா.” வண்டிலி லிருந்த படியே தியாகன் கூப்பிட்டான்.

மறுபடி அவர்கள் ஏறிக் கொள்ள வண்டில்கள் புறப்பட்டன. வெளி தாண்டி மட்டுவிலுக்குள் வந்து பன்றித்தலைச்சி அம்மன் கோவிலை கடந்தார்கள். சில மாதங்களுக்கு முன்பு இதே இடத்தில சாதிக்கலவரம் ஏற்பட்டு மூன்று பேர் கொல்லப்பட்ட சம்பவம் நினை வில் எழுந்தது. கத்திகள் வாள்களினால் வெட்டப் பட்டு ரத்தம் சிந்தக் கிடந்த கோலம் இன்றைக்கும் கவலையை ஏற்படுத்தியது.

அடுத்து வந்த ஒழுங்கையில் மாப்பாணரின் வண்டில் பிரிந்து போனது. மேலும் இரண்டு மைல் கடந்து அவர்களது ஊரை வந்தடைய பன்னிரண்டு மணியாகி விட்டது.

நண்பர்கள் ஒவ்வொரு வரும் தங்கள் வீடுகளில் இறங்கிக்கொள்ள சிவம் கடைசியாய் தங்கள் வீட்டுக்குள் நுழைந்தான். தன் வெற்றியைப் பகிர்ந்து கொள்ள இந்தச் சாமத்தில் வீட்டில் யாரும் விழித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியும். வீடு அமைதி யாய் இருந்தது.

மாடுகளை அவிழ்த்து கொட்டிலுக்குள் கட்டிவிட்டு தவிடும் தண்ணீரும் வைத்தான். குசினித் தாழ்வாரத் தில் வைக்கப்பட்ட மண்பானைக்குள்ளிருந்து தண்ணீர் எடுத்து முகம், கை கழுவி விட்டு குசினிக்குள் நுழைந்தான்.

எந்தநேரம் வந்தாலும் சாப்பிடட்டும் என்று நினைத்து அவனது தட்டுவத்தில் தினைச் சோற்றைப் போட்டு வைத்து பெரிய ஓலைப் பெட்டியால் கவிழ்த்து மூடி வைத்திருந்தாள் அன்னம். பக்கத்தில் கைவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அதுவரை தோன்றாத பசி உணர்வு சோற்றைக் கண்டதும் வயிற்றை உலுப்பியது. அப்படியே அமர்ந்து அள்ளி அள்ளிச் சாப்பிடத் தொடங்கினான். “ வந்திட்டியே மோனை” ஆச்சி நித்திரைக் கலக்கத்துடன் வந்து பக்கத்தில் அமர்ந் தாள்.“என்னணை எழும்பிட்டாய்.” “ உன்ர சிலமன் தெரிஞ்சுது அதுதான். நீ சாப்பிடு மோனை.” “நான் தானனை இண்டைக்கும் வெண்டனான்.” உற்சாகமாகச் சொன்னான். “அப்பிடியே.... சரி நீ சாப்பிடு.” ஆச்சி அவ்வளவாய் அக்கறை காட்டவில்லை. அது தெரிந்த விடயம் தானே என்பது போல அவனும் அது பற்றி வேறு பேசவில்லை. அவன் சாப்பிட்டு முடிக்கும் வரை ஆச்சி பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் கை கழுவி வாய் துடைத்த போது “ மோனை



ஒரு விசயம்....” என்றாள் ஆச்சி. “ நீ வந்து இருக்கேக்கயே ஏதோ சொல்லப் போறாய் எண்டு விளங்கியிட்டுது. என்ன சொல்லணை.” “உவன் வண்டில்க் காரச் சின்னையன் அன்னப் பெட்டையைக் கட்டித்தரச் சொல்லி பிறகும் கேட்டு விட்டிருக்கிறான். சின்னாச்சியும் எங்கட பெட்டையை தன்ர மருமோள் எண்டு சொல்லித் திரியுதாம்.” “ அவசொல்லித் திரியிறதுக்காக நாங்கள் செய்து குடுக்கஏலு மேணை.” “அதில்லை. தான் கள்ளுக் குடிக்கிறேல்லை எண்டு சத்தியம் பண்ணினவனாம். உனக்கு ஆரோ பிழையாய் சொல்லிப் போட்டினம் போல. அப்புவும் உங்க ஆட்களிட்ட விசாரிச்சவராம். நல்ல மாதிரிச் சொல்லுறாங்களாம். சின்னையன் தோட்டங் களுக்கு எருவும் குழையும் ஏத்திக் குடுக்கிறவன் தானே.நல்ல உழைப்பாளி.”

“ எணை அவன் நல்லவன் எண்டால் எனக்கும் சந்தோசம் தானே.தங்கச்சியை நல்லாய் வைச்சிருந்தால் காணும். நானும் ஒருக்கால் விசாரிச்சுப் பார்க்கிறன்.” ஆச்சி கொஞ்சம் தயங்கி விட்டு மெல்லிய குரலில் சொன்னாள். “பெட்டைக்கும் கொஞ்சம் விருப்பம் போல இருக்கு. நல்ல தண்ணி அள்ள புளிவெட்டைகிணத்துக்கும் போகேக்க அங்க எங்கேயோ நிண்டவனாம். ஆரோ பிறத்தியே... எங்கட சாதிசமயம் தானே. பாத்து சரி வந்திட்டால் இந்த ஆவணியிலேயே சோறு குடுப்பிச்சு விட்டிடலாம் எண்டு அப்பு சொல்லுறார்.” ஆச்சி சொல்லி விட்டு அவன் முகத்தைப் பார்த்தாள். “ஓமணை விசாரிப்பம். சரி எண்டால் அப்பு சொல்லுற படி செய்வம்.” ஆச்சி நிம்மதியான முகத்துடன் எழுந்து போனாள்.அவன் தலைவாசல் திண்ணையில் ஓலைப் பாயை விரித்துப் படுத்துக் கொண்டான். எதிரே வானமும் வட்ட நிலவும் தெரிந்தது. பால் போன்ற வெளிச்சம். காற்றில் பனம்பழ வாசம்.

பெட்டைக்கும் கொஞ்சம் விருப்பம் என்ற செய்தி மனதுக்குள் நெருடியது. இந்த வசனத்தை ஆச்சி அப்புவிடம் சொல்லியிருக் கமாட்டாள். தலை குனிஞ்சு கொண்டு போய்வாற இந்தப் பெட்டைஎங்க எப்பிடி சின்னையனைப் பாத் திருப்பாள்.எப்போதும் எண்ணெய் வழிகின்ற முகத்துடனும் தூசி படிந்த உடம்புடனும் வண்டிலில் குழையும் எருவும் ஏற்றித் திரிகின்ற சின்னையன் கண்ணுக்குள் நின் றான். உழைப்பாளி தான். ஆனால் குடிக்காமல் இருக்கிறவனா என்று விசாரிக்க வேணும். அவன் களைப்புடன் கண்களை மூடிக் கொண்டான்.

அடுத்து வந்த நாட்களில் சின்னையனைப் பற்றிய விசாரிப்பு நடந்தது. அவனோடு சேர்ந்து சண்முகம் ஒருபக்கமும் தியாகன் ஒருபக்கமாயும் விசாரித்து அவன் குடிப்பதில்லை என்று தெரிந்து கொண்டார்கள்.

அப்பு பிள்ளையார் கோவில் ஐயரிடம் கேட்டு சோறு குடுப்பிக்க அடுத்த வெள்ளிக்கிழமை நல்ல நாள் எண்டு குறித்துக் கொண்டு வந்தார். கிளிநொச்சிக்கு வண்டிலில் கிடுகு ஏற்றிக்கொண்டு போகும் தாமோதரியிடம் வேலாயுத்திற்கு தகவல் சொல்லி அனுப்பினார்கள். வல்வெட்டித்துறை புடவை வியாபாரியிடம் சிவம் போய் அன்னத்துக்கு சரிகைக்கரை போட்ட பட்டுச்சேலை வாங்கி வந்தான்.

இரண்டு நாளைக்கு முதலே வேலாயுதமும் வந்து விட்டான். வெள்ளிக் கிழமை வீடு சாணகமும் முருங்கையிலைச் சாறும் கலந்து அழுத்தமாய் மெழுகப் பட்டது. அயலில் உள்ள பெண்கள் வந்து பெரிய மண் பானைகளை அடுப்பில் ஏற்றி சோறும் கறிகளும் சமைக்கத் தொடங்கினார்கள்.

அன்னம் சிவப்புச் சேலை கட்டி தலையில் பூவும் வைத்துக்கொண்டு நின்றாள். மூக்குத்தி காதுகளில் அணிந்த நகைகளைத் தவிர கழுத்தில் சங்கிலியும் கையில் பூட்டுக் காப்பும் அணிந்திருந்தாள். மாலையில் கடகப்பெட்டிகளில் பால் ரொட்டியும், முறுக்கும் அரியதரம் பலகார முமாக சின்னையன் வீட்டிலிருந்து வந்தார்கள். பெண்களின் கதையும் சிரிப்பும் முற்றம் தாண்டி தெருவரை கேட்டது.

எல்லோரும் வெற்றிலை பாக்கு எடுத்துக் கொண்டார்கள். இரவு ஒரு பெரிய தலை வாழை இலை விரித்து சோறும் ஏழுவகையானகறிகளும் ஆச்சி பரிமாறி வைக்க, சின்னையனும் அன்னமும் சேர்ந்து குழைத்தார்கள். அன்னம் முதல் எடுத்து சின்னையன் கையில் கொடுக்க அவன் சாப்பிட்டு விட்டு அன்னத்துக்கு எடுத்துக் கொடுத்தான். அன்னம் குனிந்த தலை நிமிர வில்லை.

சிவத்துக்கு அவளைப்பார்க்க சந்தோசமாய் இருந்தது. சிவப்புச்சேலையின் கீழ் பாதங்களில் போட்டிருந்த வெள்ளிப்பாத சரம் எட்டிப்பார்த்தது. அந்த நகைகள், பட்டுச்சேலை,அந்த ஒலிப்பு இந்த சிறு வசதியும் அவளின் இந்த அலங்காரமும் அண்ணையின் உழைப்பால் வந்தது.

ஆச்சி என்ர மருதடிப் பிள்ளையாரே..... என்று கண்கலங்க கும்பிட்டாள். வந்தவர்கள் எல்லோரும் சாப்பிட்டார்கள். ஆச்சி ஓடி ஓடி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டாள். ஆச்சிக்கு பெரியதொரு மனப்பாரம் இறங்கியது போல் இருந்தது. மூக்குத்தி மின்னிய முகத்தில் மகிழ்வும் வெட்கமுமாக நின்ற அன்னத்தைப் பார்க்கும் போது சிவத்துக்கும் அப்படித்தான் தோன்றியது. (தொடரும்)

சமயத்தின் பெயரால் மிருக பலி கொடுப்பது காட்டு மிராண்டித்தனத்தின் எஞ்சின சின்னம் – மகாத்மா காந்தி




# பிரமிட்டுகள்

ஈரத்தீ

அவள் அவன் மடிமீது குட்டித்தூக்கம் போட்டுக்கொண்டிருந்தாள். தூக்கத்தைக் கலைக்க விரும்பாது அவனும் செல்லமாகத் தடவிக்கொடுத்தான். பள்ளங்கள் நிறைந்த பாதையில் பேருந்து குலுங்கித்தளம்பி ஓடியது. அது அவளிற்குச் சுகமான தாலாட்டாய் இருக்கும் போல. பயணம் செய்யும்போது அதிசிரத்தையோடு தூங்குவது இன்று தான். அல்லது அவள் கண்ணாடிக்குள்ளால் வீதியைப்பார்த்து ஓடும் மரங்களிற்குக் கைகாட்டுவாள். அவனது தோளோடு உரசிக்குதூகலிப்பாள்.

இரவு அவனும் அவளும் படம் பார்க்கப் போயிருந்தார்கள். ''Mummy Returns'' எனும் ஆங்கிலப் படம் படம் பார்த்துவிட்டு வரும் போது எத்தனை ஆயிரம் கேள்விகள் கேட்டாள்.

" இப்படி உண்மையில் நடக்குமா....."

" நாங்களும் இப்படிச் செய்யேலாதோ...."

முற்றத்து மணலில் நிலாவின் மங்கிய வெளிச்சத்தில் இது பற்றியே நீண்ட நேரமாக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். படுக்கைக்குப் போகும்போது நள்ளிரவாகி விட்டது . சிறிது நேரமே தூங்கி அதிகாலையில் எழுந்து பயணம் செய்வதாலேயே இப்படித் தூங்குகிறாள்.

நடத்துநர் கிட்டவாக வந்து மீதிக் காசை நீட்டினான்.

'' எவடம் போக வேணுமெண்டனியள்..."

" முள்ளியவளை"

'' என்னையொருக்கா வற்றாப்பளைச்சந்தியில இறக்கிவிடு மோனை; இடம்தெரியாது...." முதியவர் ஒருவர் அவனோடு பேசினார். அவன் பதிலுரைத்தபடி

**மாலையும், பூக்களும், செல்விக்குப் பிடித்தமான உணவுகளும் ஒரு தாயைப் போல இருந்து அவனே எல்லாம் செய்து கொண்டு வந்தான். அவனது சட்டைப் பையிற்குள் கவனமாக இருந்தது அவளிற்குப் பிடித்தமான மல்லிகைப்பூக்கள். அவன் நடை தளர்வதை உணர்ந்தான். தலை சுற்றுவது போலிருந்தது.**

அடுத்தவரின் மீதிக் காசையும் கொடுத்தான். இந்தக் குலுக்கத்திற்குள்ளேயும் தூங்கிக் கொண்டிருக்கும் அவள் மீது சில ரின் ஆச்சரியப்பார்வை பதிந்தது. அவன் காற்றுக்கு விலகிய அவளது சட்டையை இழுத்து சீராக விட்டான். அவள் மெதுவாக முனகினாள். அவன் ஆதரவாக அரவணைத்தான்.வாகனம் கேப்பாப்புலவு வயல் வெளிகளினூடாகப்போய்க்கொண்டிருந்தது.

பசுமையான வயலும் தூரத் தெரிந்த மரங்களும் வழமைபோலவே அழகானதாய் இருந்தன. அவனால் அவற்றை ரசிக்க முடியவில்லை. அந்த வெளியின் ஒவ்வொருமரமும் செல்வியின் ஞாபகங்களை பசுமையாக சேகரித்து வைத்திருந்தன.

அந்த ஆற்றோர மருத மரத்து வேரில் இருந்து கொண்டுதான் றோமியோயூலியட்டின் காதல் கதைகளை அவள் அவனுக்கு வாசித்துக்காட்டினாள். அறுவடைக் காலங்களில் அந்த வயல்வெளிகளில் அவர்கள் உலாவுவார்கள். நெல் பொறுக்கவரும் குருவிகளைப்போல அவர்களையும் யாரும் கவனிப்பதில்லை. அதற்குப் பின்னர் எத்தனை அறுவடைக் காலம் வந்துவிட்டது. அந்த இடங்களில் விதைத்த நினைவுகள் இனி அறுவடையாவது எக்காலம். இப்போது பெருமூச்சு வந்தது.

வெளியில் பார்ப்பதை நிறுத்தி வாகனத்துள்ளே பார்த்தான். சிலர்தூங்கிப்போனார்கள். இன்னும் சிலர்வெளியே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவன் அவளைப் பார்த்தான். லேசான



முனகலோடு விழித்தாள் . ''இனிக்காணும் எல்லாரும் உங்களைத்தான் பாக்கினம்...." என்று அவளைத்தூக்கி நிறுத்தினான். தோளில் சாய்ந்தபடியே கண்ணாடிக்குள்ளால் வெளியே பார்த்தாள். ஏராளமான கொக்குகள் குதூகலித்தன. "அங்க....அங்க பாருங்கோ...." தூண்டில் போட்டுக் கொண்டிருந்த சிறுவர்களைக் காட்டினாள்.

" நாங்களும் இதில் இறங்கி மீன் பிடிப்பமே..." கெஞ்சினாள். எது வேணுமெண்டாலும் அடம் பிடிக்க மாட்டாள். கெஞ்சலோடு குழைவாள். அவள் கெஞ்சும் சாயல் மனசுக்குப்பிடித்தமான இன்னொருத்தியினைப் போன்றது. " வரேக்க இறங்கிப்பிடிப்பம்....." அவள் சம்மதமாக தலையாட்டிச் சிரித்தாள். அதுவும் இன்னொருத்தியின் குழந்தைத்தனமான சிரிப்பே.

வாகனத்திற்குள் சினிமாப்பாடல் பரவிக்கொண்டிருந்தது. அவனது மனசிற்குள் "நந்திக்கடல் மௌனமாகக் கரைந்தது....

வங்கக்கடல் கோபமாக இருந்தது...." எனும் பாடலே நிறைந்து போயிருந்தது.

ஏன் தென்னிந்தியப் பாடல்களை மட்டும் போடுகிறார்கள். யார்கேட்டார்கள். புனிதமான உணர்வுகளைச்சொல்லும் இந்தப் பாடல்களை ஏன் போடுகிறார்கள் இல்லை. அவனுக்குள்ளே சிந்தனை நீண்டது.

" வற்றாப்பளைச்சந்தி இறக்கம்"

வாகனம் கிடுகிடுத்து நின்றது. முதியவரும், வேறு சிலரும் இறங்க, இளம் பெண்ணொருத்தி ஏறினாள். வாசனை பரவியது வாகனம் புறப்பட்டது. வற்றாப்பளைச்சந்தியிலேயே அவனது நினைவுகள் நின்றுவிட்டன. பொங்கலுக்கு எல்லோரும் ஒன்றாய் கோயிலுக்கு வந்தது, கூடியிருந்து கதைத்தது இப்போது அந்த மரங்களும், வயல் வெளியும், அம்மன் கோயிலும் அப்படியே இருக்கும். மீண்டும் பெருமூச்சு வந்தது.

"அப்பா; முள்ளியவளை இன்னும் கொஞ்சத்தூரமல்லோ" மகள் சொல்லிவிட்டு கண்ணாடிக்குள்ளால் வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்தாள். இடங்களை ஞாபகம் வைத்திருப்பதில் கெட்டிக்காரி.

செல்வி நீண்ட காலமாய் காதலியாய் சிறிது காலமே மனைவியாய் அவனோடு வாழ்ந்தவள். கனவுகளோடு தொடங்கிய அந்தவாழ்க்கை இப்போது கலைந்த கோலமாய். சூழலின் எந்த மாறுதலும் அவனைப்பாதிக்கவில்லை. அவன் இறந்த காலத்திற்கு நினைவுகளால் உயிர்கொடுத்தான்.

ஒரு சராசரி காதலரின் கனவுகளோடும், ஏக்கங்களோடும் ஆரம்பமானது அவர்களது உறவு. ஆனாலும் துயிலுமில்லப் பாடல்களும், துப்பாக்கிச் சத்தங்களும் அவர்கள்; சராசரிகளாக வாழ்வது தவறு என்பதை உணர்த்தியது. அவர்களைப்பொறுத்த வரையில் "உயிர் வழியும் காதல் மட்டும் அவர்களிற்கானது..... அவர்களின் வாழ்க்கை மற்றவர்களிற்கானது (தேசத்திற்கானது).... அதுவே சுகமானது.....!'' இரண்டுபேரும் மாறி மாறி எல்லைக்காவலுக்குச் சென்று வருவார்கள். கடைசியாக அவள் எல்லைக்குப்போகும் போது 5 வயது பாரதியை அவனோடு விட்டுப் போனாள்.

இப்போது அவள் தான் அவனிடமுள்ள ஒன்பது வயதுச்செல்வி.

" துயிலுமில்லத்தடி இறக்கம்..." வாகனம் அமைதியாக நின்றது.

" செல்வி பூக்கூடைகவனமம்மா... பார்த்து இறங்க வேணும்...''மகளிற்கு கவனம் சொல்லி அவனும் இறங்கினான். வாகனம் மெதுவாக ஓடி வேகம் எடுத்தது.

துயிலுமில்லத்தினுள் அங்கொன்றும், இங்கொன்றுமாகப் பலர் நின்றார்கள். செல்வி வீரச்சாவடைந்த சண்டையில் பலர் வீரவச்சாவு. அவர்களின் ஆண்டு நினைவுக்கு உறவுகள் வந்திருக்கிறார்கள். மகள் பூக்கூடையையும் தூக்கிக்கொண்டு நடந்தாள். அதற்குள் மாலையும், பூக்களும், செல்விக்குப் பிடித்தமான உணவுகளும் ஒரு தாயைப்போல இருந்து அவனே எல்லாம் செய்து கொண்டு



வந்தான் அவனது சட்டைப்பையிற்குள் கவனமாக இருந்தது அவளிற்குப்பிடித்தமான மல்லிகைப்பூக்கள். அவன் நடை தளர்வதை உணர்ந்தான். தலை சுற்றுவது போலிருந்தது.

" அப்பா; எனக்கு அம்மா படுத்தி ருக்கிற இடம்தெரியும் " அவள் அவனது கைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு வேகமாக நடந்தாள்.

" அப்பா ராத்திரிப்பார்த்த படம் மாதிரி இஞ்சை மம்மியள் செய்யேலாதோ...."

"........................."

" அப்படிச் செய்தா எவ்வளவு நல்லம் என்னப்பா...."

"........................."

" என்ர அம்மாவை ஒவ்வொரு நாளும் நான் வந்து பாப்பன். எவ்வளவு வடிவான அம்மா என்று எல்லாருக்கும் காட்டுவன் "

"........................."

" என்னப்பா; பேசாம வாறியள் ..."

அவன் மனசிற்குள் ஓலமிடுவதை அவளால் அறிய முடியாதே..... மௌனம் போர்த்திய ஒப்பாரி..... இளமைக்குள் புதைந்த கண்ணீர்.... நடந்து கொண்டேயிருந்தார்கள். "ஏனப்பா இஞ்ச பிரமிட்டுக்கள் கட்டேல்ல? இஞ்சையும் மம்மியள் செய்யலாம் தானே..... அவள் தாயின் கல்லறைக்கு மாலை போட்டு, பூக்கள் பரவி , ஊதுபத்தி கொழுத்தினாள். சிரித்து மகிழ்ச்சியோடு கொண்டுபோன உணவுகளை எடுத்துவைத்தாள். அவன் மகளைப்பார்த்தபடி அசைவற்று நின்றான்.

அப்பா; ஏனப்பா இஞ்ச பிரமிட்டுகள் கட்டேல்ல. ஏன் மம்மியள் செய்யேல்ல...." அவனது கன்னங்களை ஆதரவாகத்தடவிய படியே பரிதாபமாகக்கேட்டாள். பார்க்க பாவமாய் இருந்தது. " ஏனப்பா....." இப்பொழுது அவள் அழத்தொடங்கினாள். விக்கி, விக்கிஅழுகின்றாள்.

அப்.....பா...ஏ...ன்....மம்மி....யள்''

அவளைத் தூக்கி கண்ணீர் துடைத்து கன்னங்களில் அழுத்தி முத்தமிட்டான். குரலைச் செருமிச் சரிப்படுத்தி,

" எங்கட மம்மிகளும், பிரமிட்களும் நீங்கள் தான். உங்களுக்க தான் எல்லோரையும் பத்திரபடுத்தி வைச்சிருக்கிறம். நாங்கள் விலை கொடுத்த 17651 பேரையும் உங்களில பார்க்கிறம்...." அவளிற்கு அப்பாவின் வார்த்தைகளைப் புரிவது சிரமமாக இருந்தது. "நான் உங்களுக்குள்ள உன்ர அம்மாவைப் பத்திரப்படுத்தி வைச்சிருக்கிற மாதிரி ஒவ்வொரு பிள்ளைகளிற்குள்ளும் ஒவ்வொரு மாவீரரைப் பத்திரப் படுத்தி வைச்சிருக்கிறம். நீங்கள் தான் பிரமிட்டுகள். எங்கட தேசத்தின்ர மம்மிகள்..." சொல்லிக் கொண்டே செல்விக்குக் கொண்டு வந்த மல்லிகைப் பூக்களை எடுத்தான். அவை கண்ணீரில் நனைந்திருந்தன. பூக்களைப் பரவிவிட்டு மகளை தோளில் சுமந்து கொண்டு நிரைநிரையாக விருக்கும் கல்லறைகளிற்கு அருகாக நடந்தான். சில கல்லறைகளிற்கு முன் அஞ்சலி செலுத்திக் கொண்டிருப்பவர்களோடு சிறுவர், சிறுமியர்களும் வந்திருந்தார்கள். பூக்களைப் பரவிக் கொண்டும், தீபம் ஏற்றிக் கொண்டுமிருக்கும் அவர்களை பார்த்தபடியே பெரியவர்கள்.

இவர்களிற்குள் யாரை அவர்கள் பார்ப்பார்களோ அது அவர்களிற்கே தெரியும்.

●

# நூல் வரவு




''எழுத்துலகு புகத்துடிக்கும் இளையோரை ஊக்குவித்து அவர்தம் படைப்புகளுக்கு களமமைத்துக் கொடுக்கும்'' பிரதான நோக்கத்தோடு இளைஞர்களின் கூட்டு முயற்சியினால் இளையவர்களுக்காகத் தொடங்கப்பட்டிருக்கும் “திசைபுதிது”எனும் இதழ்-01 சனவரி, மார்ச் 2003 புதிய தொரு வரவாக பிரசவிக்கப் பட்டுள்ளது.

“புதிய சிந்தனைகளை
பதிய முகங்களை
புதிய கருத்துக்களைத்
தேடிப் புறப்பட்டதோடு,
இது தேடல்தான். இந்த தேடலின் வெற்றி எங்களில் மட்டுமல்ல, உங்களிலும்தான் தங்கியிருக்கிறது'' என்ற நம்பிக்கைத் துளிகளைக் கொண்டு வெளிவந்திருக்கும் திசைபுதிது ஆசிரியர்குழு பல முதிர்ந்த படைப்பாளிகளால் கொண்டு வரப்பட்டதல்ல என்பதற்கு சான்றாக வெளிவந்திருக்கிறது.

திசைபுதிது இதழான குழந்தைப்பருவத்திலேயே பயன் தரு விடயங்களோடு மூத்த எழுத்தாளர்களை இளையவர்கள் அறிந்து படிப்பதற்கு ஒரு ‘தூண்கல்லாகவே’ சோ. பத்மநாதன்உடனான நேர்காணல், மூத்த எழுத்தாளர் வரதர் பற்றிய வெளிப்படுத்தல், யேசுராசா அவர்களின் ‘தமிழ் திரைப்படம் மாயையும் யதார்த்தமும்’ என்னும் சினிமா பற்றிய பார்வை, மற்றும் கவிஞர்களின் கவிதையும் அவர்கள் பற்றிய அறிமுகமும், ‘உயர்தொழில்நுட்பத்தில் ஓர் உன்னதபுரட்சி ’ என்னும் கட்டுரையும் இன்னும்பல விடயங்களைக்கொண்ட தொரு தேடல் என்றே கூறலாம்.

ஆழமான கருத்தாழங்களைக் கொண்டு இன, மத அரசியற் பக்கச்சார்பற்ற விதத்தில் சமகாலத்தைப் பதிவு செய்யும் படைப்பைத் திசைபுதிது வரவேற்பதோடு, மாணவர்களின் பல ஆக்கங்களுக்கும் களமமைத்துக் கொடுத்ததோடு தரமான ஆக்கங்களுக்கு அவர்களை ஊக்கிவிக்கும் முகமாக புத்தகப்பரிசுகளையும் வழங்கக்காத்திருக்கிறது.

''திசைபுதிது'' இதழ் இளையஆசிரியர் குழுவினால் உருவாக்கப்பட்டதாயினும் அவர்களின் தேடலின் முயற்சி பாராட்டப்பட வேண்டியதோடு இனிவரும் இதழை பரந்த வாசகர் மட்டத்தில் கொண்டு வரும் போது பலரது வரவேற்பையும் பெறும் என்பது உண்மையே.

ஒவ்வொரு வாசகர்களும் வ்ளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களும் பயன்பெற வேண்டியது மிக அவசியமானது.

- திசை புதிது
- ஆசிரியர்: கோபி
- முகவரி:
  90/3 புதுச்செட்டித்தெரு
  கொழும்பு –13.

பொ.நந்தினி




சமூக- கலை இலக்கிய, கல்வி அறிவியல் ஏடான சித்திரை-வைகாசி-2003 இருதிங்கள் தாங்கிய நான்காவது இதழாகிய “ஏகலைவன்” சஞ்சிகை வெளிவந்துள்ளது.

உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியினால் பாடசாலை மட்டத்திலிருந்து வெளிக்கொண்டு வரும் இச்சிறு சஞ்சிகை மாணவர்களின் கலை இலக்கிய, அறிவியல் சார்ந்த விடையங்களை வெளிக்கொண்டுவந்து அவர்களின் வளர்ச்சிப் பணிக்கு உந்து சக்தியாக வெளிவந்துள்ளது பாராட்டத்தக்கது.

“ஏகலைவன்” பல பாடசாலைகளுக்கும் பரந்து விரிந்து மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதோடு, எழுத்துத்துறைக்கும் புதிய களமமைத்துக் கொடுத்து ஊக்கப்படுத்தப்படவேண்டும்.

சஞ்சிகையின் வடிவமைப்பு நல்லதாக இருப்பினும் கொஞ்சம் கவனமெடுப்பது நல்லது. ஏகலவனின் ஊக்கிவிப்புக்கு மாணவர்கள் மட்டுமல்ல அனைவரும் படித்துப் பயன் பெறவேண்டியதாகும்.

- ஏகலைவன்(இருதிங்கள் இதழ்)
- சமூக, கலை, இலக்கிய, கல்வி
  அறிவியல் ஏடு.
- ஆசிரியர்: இ.சு.முரளிதரன்.
- வெளியீடு:
  உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

# எல்லோருமாய் கவலை கொள்வோம்



பின்னான அறியாமை
பின்னெதையாம்
அறுவடை செய்யும்?

வளமாக்கப்பட வேண்டிய
வளமாக்கியினால்
பயிருக்கென்ன லாபம்?

கிருமித்தாக்கத்தால்
நலிவுற்ற நாசினிக்கு
பீடை எங்ஙனம் கட்டுப்படும்?

நவீனம் புகுந்து விளையாடும்
இன்றைய உலகில்
பெரு வயலில் எத்தனை
புழுக்களைக் கையால் பிடித்து
நசுக்கிக் கொல்ல முடியும்?

விளைவை எதிர்பார்ப்பது
அறியாமை; எனினும்
கடமையல்லவா?

விருட்சங்களின்கனவை
இலையுதிர்த்துமொட்டைக்
கிளைகள் தானும்
கலைக்கவில்லை

உரித்துப் படைத்த
“போன்சாய்'' தானும்
பூரணமற்றிருப்பதான
பிரேமையில் பொய்
இல்லை.

களை எடுப்பதில் அக்கறையற்ற
செய்கை முறையும்,
பண்ணைகளின் பராமரிப்பின்மையும்
மட்டும் குறையில்லை.

மண்ணின் வளத்தில் சந்தேகிப்பது
அறிவீனம்

பண்ணையாளனின்
அதி மேதாவித் தனத்தின்

விருட்சக் கனவுகளை
“போன்சாய்''கள் கூட
ஈடுசெய்ய முடியாத
பயிர்ச் செய்கை
மனவருத்தம் தான்

தேற்றிக் கொள்ள அல்லது
விளங்கிக்கொள்ள
உதாரணம்

கல்வியின் வீழ்ச்சியை,
ஏற்றுக் கொள்ளமுடிந்தால்,
அளவிட்டு ஒப்பிடமுடிந்தால்,
அதற்காக எல்லோரும்,
கவலை கொள்வோம்.

கை.சரவணன்

# நான் ஒரு மரமாக இருந்திருந்தால்...

■ கன்னடக்கவிதை

படித்ததில் பிடித்தது

நானொரு மரமாக
இருந்திருந்தால்....

கேட்டிருக்க மாட்டேன்
கூடு கட்டு முன்னரே
பறவையிடம்
நீ என்ன ஜாதி என்று

என்னை ஒளிமய சூரியன்
தழுவும் பொழுது
நிழல் இழந்திருக்காது
தன் தூய்மையை

இலையும், தென்றலும்
குலையாது கூடும்
குலவும் நட்புடன்.

தூறும் மழைத் துளிகள்
தீண்டத் தகாதவன்
எனத் தூற்றி
பின் வாங்கியும்,தயங்கியுமிரா.

வேரூன்றி ஒரேயிடத்தில்
நான் செழிக்க,
தாய் மண்ணுக்குத்
தேவையிருந்திராது
தூய்மையானவள் நான்
தூய்மையானவள்
என்ற புலம்பல்.

தினவைத் தணிக்க
புனிதப் பசு
தன் மேனியை
என் மீது தேய்க்க
உள்ளே உறையும் தேவர்
முப்பத்து முக்கோடியும்
என்னைத் தொடுவர்
தன்னிச்சையாய்

யாருக்குத் தெரியும்
நாட்கள் முடிய
நான் சாய்ந்ததும்
காய்ந்த என் கிளையே
தூய்மை துய்க்கக் கூடும்
கேள்விக்கு இடமின்றி
வேள்வித் தீயுள்.

அல்லது
சாதனை பல படைத்தவன்
சடலத்தைச் சுமக்கும்
நால்வர் தோள்களின்
மேலேற வாய்ப்பொன்று
நேருட்டிருக்குமோ?

மூலம்: பி.சின்னஸ்வாமி
தமிழில்: வி.விஜயராகவன்.

# தூரிகைகள் பேசுகின்றன



அந்த வெள்ளைத் தாளில்
படிந்து படிந்தே.....
சிவப்பு மை தடவிப்
போயும்
எஞ்சியவைகளுக்காய்
ஏமாராவண்ணம்
மீண்டும் மீண்டும்
சில படிமங்களுக்காகவும்
மெய்ப் பதிவுகளுக்காகவும்
தூரிகைகள் பேசுகின்றன.

பச்சை, பச்சைகளாய்....
உரசிச் சென்றதன் பயனாய்
வரும் பின்னணியின் உச்சி
விளைவாய்
ஒரு போதும் சிவப்பு நீர்
பாயத் தடுப்பதாய்
ஏதோ வாய்
வார்த்தைகளாலும்
செயன்முறைகளாலும்
போக்குக்காட்டிய போதும்
கூட....
பேசின தூரிகைகள்.

சில வேளைகளில்
எமது வரைபு,
எமது பதிவு,
எமது பக்கமென...
போக்குகளுக்கமைவாய்
நிமிர்ந்தும், வளைந்தும்
போயின
தூரிகைகள்.

இப்போதும்
தூரிகைகள் பேசுகின்றன
தமது பாதைகளில்
பதிந்து, சிதைந்த
பக்கங்களுக்காய்....
சிந்திய, சிவப்பு
நிறங்களுக்காய்....
ஒற்றைச் சிந்திப்புடன்
சீரான பாதையினின்று
அந்தத் தூரிகைகள்.....
அதே தூரிகைகள்....
இப்போதும் பேசுகின்றன.

நா.கானகன்

உங்களைச் சபிப்பவர்களுக்கு நீங்கள் ஆசி கூறுங்கள் -இயேசுநாதர்




## குட்டிக்கதை

## நன்றாய் வாழ

தனது வகுப்பு மாணவர்கள் ஒற்றுமையின்றி இருப்பது ஆசிரியை வதனாவிற்கு வேதனையாக இருந்தது. எந்த நேரமும் அடிபிடியும், கோளும் தான்.

இவர்கள் ஒன்றாய் வாழ வேண்டியதன் அவசியத்தை அநுபவபூர்வமாக உணரவைக்கப்படவேண்டும் என்று தீர்மானித்தார்.

வகுப்பறைக்குள் நுழைந்ததும், ஒவ்வொரு மாணவர்களிடமும் ஒவ்வொரு தாள்களை வழங்கினார். அவற்றில் மாணவர் தாம் விரும்பி உண்ணும் பழத்தின் படத்தினை வரைந்து, நிறந்தீட்டுமாறு கேட்டுக்கொண்டார்.

மாணவர்கள் அழகாக வரைந்து, நிறந்தீட்டினர். அவற்றைச் சேகரித்து ஒரு மெல்லிய நூலால் ஒன்றாகக் கட்டி மேசை மீது வைத்தார்.

இன்னும் ஒவ்வொரு தாள்களைக்கொடுத்து அவற்றில் ஒவ்வொருவரும் தாம் வரைந்த பழத்தின் பெயரை எழுதுமாறு கேட்டுக்கொண்டார்.

மாணவர் விரைந்து எழுதினர். அவற்றையும் சேகரித்த ஆசிரியை மேசை மீது வைத்தார். வேறு வேலையாக ஆசிரியை சிறிது நேரம் வெளியே சென்றிருந்தார். வேகமாக வீசிய காற்றில் அத்தாள்களெல்லாம் சிதறிப் பறக்கத்தொடங்கின. மறைப்பு அற்ற அவ்வகுப்பறையிலிருந்து பறந்த அத் தாள்கள் வகுப்பறைக்கு வெளியே பறந்தன. சில சேற்றிலும் வேறு சில முட்புதர்களிலுமாக அங்குமிங்கும் அள்ளிச்செல்லப் பட்டன. உயரமான மதிலுக்கு மேலாகவும் பல தாள்கள் பறந்தன. முன் வரிசையிலிருந்த சில மாணவர்கள் அதனைச்சேகரிக்க விரைந்தும், ஒரு சில தாள்களை மட்டுமே அவர்களால் காப்பாற்ற முடிந்தது.

ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்ததும், மாணவர்கள் தாம் எழுதிய தாள்கள் காற்றினால் அங்குமிங்கும் சிதறப்பட்டதை எடுத்துக்கூறி கவலைப்பட்டனர்.

மெல்லிய நூலினால் கட்டிவைக்கப்பட்ட தாள்கள் அப்படியே இருப்பதனைச் சுட்டிக் காட்டிய ஆசிரியை, "பார்த்தீர்களா? இத்தாள்களை காற்றினால் எதுவும் செய்ய முடியவில்லை. இதே போன்று அன்பு, ஒற்றுமை, பாசம் எனும் ஏதாவது ஒரு மெல்லிய இழையால் மாணவர்களாகிய நாமும் கட்டப்பட்டு, ஒன்றாக இருப்போமாயின் நன்றாக வாழலாம்..." என்றார். சேற்றிலும், முட்புதர்களிலும் விழுந்து கிடந்த தாள் களைப்பார்த்து பெரு மூச்செறிந் தனர் மாணவர்கள்.

செல்வதாசன்

## வாரம் ஒரு குறள்



ஒரு தந்தையானவர் தனது மக்களின் நல்வழிசார்ந்த அனைத்து நிலைக்கும் நல்ல சிறந்த கல்வியினை ஊட்டி அவர்கள் தலை நிமிர்ந்து தம்கால்களில் தன்னம்பிக்கையோடு நிற்பதற்காக வழிகாட்டிக் கொடுக்கவேண்டும். இதனையே வள்ளுவனார் தன் குறள் மூலம் இவ்வாறு அழகாகக் கூறுகிறார்.

**"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்திஇருப்பச்செல"**

## குறுக்கெழுத்துப் போட்டி 28




### இடமிருந்து வலம்

01. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று.
07. அகந்தை குழம்பி உள்ளது.
13. பனையோலையால் செய்யப்பட்ட பொருள் குழம்பியுள்ளது.
20. விளையாட்டுப் பொருள்குழம்பி உள்ளது.
27. சாவு.
31. மலர்.
33. அன்பு குழம்பி உள்ளது.

### மேலிருந்து கீழ்

01. கண்தெரியாதவன்.
02. ஒரு பறவை குழம்பி உள்ளது.
06. இது கைப்பழக்கம் என்பர்.
22. சுமை தலைகீழாக உள்ளது.
23 காசு

### குறுக்கெழுத்துப்போட்டி இல.26 இன் விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. சங்கிலியன். | 01. சந்திரன் |
| 07. காந்தம். | 06. தேன். |
| 13. தினகரன். | 08. கானல் நீர். |
| 23. விதி. | 10. தரணி. |
| 29. வலை. | 15. கடிதம். |
| 33. அப்பம் | 30. அலை. |

### குறுக்கெழுத்துப்போட்டி இல.26 இன் பரிசுக்குரியவர்

**பா. சுதாகரன், ஆண்டு - 6
மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.26 இன் பாராட்டுக்குரியவர்கள்.

01. மோ. டிலோஜி, ஆண்டு - 5^A, கிளி/அக்கராயன்.ம.வி.
02. ஜெ.குமரன், தனிப்பனை வடக்கு, செம்பியன்பற்று.
03. ஞா. பிரசாந், தரம் - 4, புன்னைநீராவி.
04. பா. கீர்த்தனன், 1ம்,வட்டாரம், புதுக்குடியிருப்பு.

இளையவர்களே! மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.28
**வெள்ளிநாதம்
ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## பட்டம்

பட்டம் நல்ல பட்டமாம்
பறந்து செல்லும் பட்டமாம்
வட்டம் இடும் பருந்து போல
வானில் பறக்கும் பட்டமாம்

பச்சை சிவப்பு நீலம் மஞ்சள்
பளபளக்கும் நிறங்களில்
இச்சையோடு அண்ணா செய்த
இறக்கை கொண்ட பட்டமாம்

சு. மோகனதீபன்
தரம் - 7, கிளி/கிளி. ம.வி



இவ் ஓவியங்களுள் "6" வித்தியாசங்கள் உள்ளன அவற்றைக்கண்டுபிடியுங்கள். முடியாவிட்டால் விடையைப்பாருங்கள்.

01. மனிதனின் தொப்பி
02. மனிதனின் சேட்கை
03. குதிரையின் பின்கால்.
04. குதிரையின் கால் குரை
05. குதிரையின் வால்.
06. குதிரையின் நாணயக்கயிறு.

பூ. நிரஞ்சன்.



இது உலகின் ஆரம்பகால தொலைபேசி 1876ல் அலெக்ஸாண்டர் கிரகம்பெல் தொலைபேசியை கண்டுபிடித்தார். அதன் வடிவமே இது. நோர்வே தொழில் நுட்பஅருங்காட்சிச் சாலையில் இது உள்ளது.

## மகிழ்ந்து நானும் கதைத்திடுவேன்

அத்தை தந்த அப்பிள்
அழகான அப்பிள்
மாமா தந்த மாம்பழம்
வடிவான மாம்பழம்
அப்பிளை விட மாம்பழமே
அச்சாவாக இருக்கிறது
மாங்கன்றை நட்டு
தண்ணீர் ஊற்றி வளர்த்திடுவேன்
மாமரத்துக் குருவிகளோடு
மகிழ்ந்து நானும் கதைத்திடுவேன்.

சுட்டிச்சித்தி

## உதவிக்கெட்டார் - 03




## கம்பர்

சுமார் 10 நூற்றாண்டுக்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்த பெரும் புலவர் கம்பர். சோழ மன்னனின் அரசவையிலே பெரும்புகழுடன் விளங்கிய கம்பரின் கவிதைகள் யாராலும் விரும்பிப் படிக்கப் படுபவையாகும்.

இவர் கலைத்தெய்வமாகிய கலைமகள் மீது பக்தியுடையவர். இவர் ஏர் எழுபது என்ற ஒரு நூலையும், வான்மீகி இராமாயணத்தைத் தழுவி தமிழில் இராமாயணத்தையும் எழுதியுள்ளார்.

கம்பரின் கவிபாடும் திறமையைச் சிறப்பித்துக் கூறுவதற்காக " கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவிபாடும் " என்று சொல்வார்கள். கம்பருடைய மகள் அம்பிகாவதியும் ஒரு சிறந்த கவிஞை ஆவார்.

**வீ. ரஞ்சினி, தரம் - 8
கிளி/புன்னைநீராவி
வித்தியாலயம்.**

## விடுகதைகள்

01) பல பேர் கட்டிய வீடு ஒருவன் கண்பட்டு உடைந்தது. அது என்ன?
02) அலறி அலறிக் கூப்பிடுவான் தொட்டால் அடங்கி விடுவான் அவன் யார்?
03) உயர உயர சிறக்கும். உயர்ந்து விட்டால் சிரிக்கும் . அது என்ன?
04) ஓட்டை வாயனுக்கு விழுந்த பல் முளைக்கவில்லை. அது என்ன?

**இ. காந்தீபன்
தரம் - 4
மு/விசுவமடு ம.வி**

விடைகள்
01.தேன்கூடு
02. தொலை பேசி
03.தலையணை
04.சீப்பு

தன் சிந்தனையின் இறுதிவரை செல்ல அஞ்சாதவன் தான் சுதந்திரமான மனிதன் - லியான் ப்ளாம்



தொடர்கதை

## பிளானறி ஓ கொணரின்

# இடம் பெயர்ந்தவன்



### அத்தியாயம் -05

"கொடுமைக்காரனே!" எனத்தனக்குள் கூறியபடி, முதன் முறையாக அப்போது தான் அவனைப் பார்ப்பது போல், தனது பார்வையை அவன் மேல் பதிய விட்டாள். அவனது நெற்றியும் தலையும் தொப்பியால் மறைக்கப் பட்டிருந்ததால் வெள்ளை யாகவும், முகத்தின் மற்றப் பகுதிகள் சிவப்பாகவு மிருந்தன. முகமெங்கும் மஞ்சள் ரோமங்கள் சிலிர்த்துக் கொண்டி ருந்தன. பொன்முலாம் பூசிய கண்ணாடியின் பின் தெரிந்த கண்கள், நகங்கள் போல் மின்னின. மூக்கின் மேல் சரியாக பொருந்தியிருந்த கண்ணாடியின் மேல், வைக்கோல் இழைகள் கிடந்தன. பலருடைய முகங்கள் ஒட்டப்பட்டது போல் அவனது முகம்தோன்றியது. இந்த நீகிரோவிற்கு ஐரோப்பா விலிருந்து வரும், ஒருவெள்ளை இனப் பெண் மனைவியாக அமையமுடியாது. அந்த நீகிரோவுடன் நீ இந்த வகையி லெல்லாம் பேசி அவளை உணர்ச்சியடைய வைக்கிறாய். இவ்வகைக் காரியங்களை யெல்லாம் போலந்தில் வேண்டுமானால் வைத்துக்கொள். ஆனால் இங்கு எல்லாம் அப்படிச் செய்ய முடியாது. இவையெல்லாம் மடத்தனமானவை. அந்த நீகிரோவிற்கு கடுகளவு கூட புத்திகிடை யாது. நீ அவனை உணர்சியடைய வைக்கிறாய். மெதுவாகப் பேசத்தொடங்கியவள், பின் ஒவ்வொரு சொற்களுக்குமிடையே மூச்சுவிடக்கூட நேரம் கொடுக்காது பேசிய போது குரலில் தொனி கூடியது.

"அந்தப் பெண் மூன்று வருடங்களாக முகாமிலிருக்கின்றாள் என்றான் கௌசக்."

" உன்னுடைய மனைவியின் தங்கை எந்தவகையிலும் இங்கு வந்து ஒரு நீகிரோவை மணக்க முடியாது." என மக்கின்ரயர் தீர்மானமான குரலில் கூறினாள்.

' அவளுக்கு வயது 16 ஆகிறது. தாயும் தந்தையும் அற்ற நிலையில் அனாதரவாக இருக்கின்றாள் ஒரு முகாமில். இங்கே வருவதற்காக 3 ஆண்டுகள் காத்திருக் கிறாள். கையிலிருந்த பேசிலிருந்து கை விரல்களால் தேடி, அந்தப் பெண்ணுடைய வேறொரு புகைப்படத்தை எடுத்துக் கொடுத்தான். அதில் அவள் சிறிது வயதான வளாகத் தோற்றமளித்தாள். கறுத்த நிறத்தில் பொருந்தாத சட்டை அணிந்து கொண்டிருந்த வளின், பக்கத்தில் நின்றிருந்த பெண்ணுக்கு வாயில் பற்கள் எதுவும் இல்லாமலிருந்தது. அப்பெண் தனது மச்சாளின் தாயார் எனவும், இரண்டு வருடங்களுக்கு முன் முகாமிலேயே இறந்து விட்டதாகவும்' கௌசக் மக்கின் ரயரிடம் கூறினான்.

மக்கின்ரயர் அப்படத்தை அவனிடமே தள்ளிவிட்டு, ' நான் எனது நீகிரோக்களை யாரும் குழப்பமடையச் செய்யவிடமாட்டேன். இந்த இடத்தை நீகிரோக்கள் இல்லாமல் என்னால் நடத்த முடியாது. ஆனால் நீ இல்லாமல் நடத்திக் கொண்டு போகமுடியும். இந்தப் பெண்ணைப் பற்றி சல்க்கிற்கு ஏதாவது குறிப்பிட்டாயானால், பின் நீ எனக்குக் கீழ் வேலை செய்ய முடியாது. இது உனக்கு விளங்கிறதா?

அவனது முகத்தில் அவற்றை புரிந்து கொண்டதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. கௌசக் தான் கேட்டவற்றை எல்லாம் மனதில் முடிச்சுப் போட்டு ஆலோசிக்க முயன்றான்.

மிஸிஸ் மக்கின்ரயர் சோட்லி முன்பு சொன்னதை எண்ணிப் பார்த்தாள். "அவனுக்கு எல்லாம் நன்றாகப் புரிகிறது. தான் நினைத்ததை அப்படியே செய்து முடிப்பதற்காகவே, ஒன்றும் விளங்காதவன் போல் பாவனை செய்கிறான்." அதிர்ச்சியுடன் கடுங்கோபங் அவளுக்கு உண்டாயிற்று. இப்படிப்பட்ட புத்திசுவாதீனமற்ற நீகிரோ ஒருவனுக்கு, ஒன்றுமே அறியாத அப்பாவியான இந்தப் பெண் பிள்ளையை இங்கு கொண்டுவந்து திருமணம் செய்வித்து வைக்க நினைக்கும் இவனை, எப்படி ஒரு கிறிஸ்தவன் என்று சொல்வது. "இதனை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை." எனத் தனக்குள்ளே கூறியவளின் வெளிறிய நீல நிறக்கண்கள் வருத்தத்துடன் தூர எதையோ பார்த்தன.

ஒரு செக்கனின் பின், அவள் தோளைக் குலுக்கி களைத்துபோய் விட்ட தோரணையுடன் கைகளைச் சோரப் போட்டாள்.

"அவள் கறுப்பினத்த வனை மணம்செய்வது பற்றி கவலைப்படவில்லை. ஐந்து வருடங்களாக முகாமிலிருக் கிறாள்." மிஸிஸ் மக்கின்ரயர் தனது கால் அசாதாரணமான முறையில்பலவீனம் அடைவதை உணர்ந்தாள்.

ஆயினும் 'அப்படியெல்லாம் முடியாதென்றாள். ஒட்டுப் போட்டது போன்ற முகத்தையுடைய கௌசக், பதில் எதுவும் கூறவில்லை. தான் அங்கிருப்பதை அவன் கருத்திலேயே எடுக்கவில்லை என்ற அபிப்பிராயம் அவளுக்கு ஏற்பட்டது. "இது எனது இடமென்றாள்அவள். நானே இங்கு யார்வரலாம், யார் வரக்கூடாது என்பதைக் கூறுபவள்!"

தொப்பியை அணிந்து கொண்டு அவன் "ஆம்" என்றான்.

"உனக்கு ஒரு நல்ல வேலை கிடைத்திருக்கிறது. இங்கு இருப்பதையிட்டு நீ நன்றி உடையவனாக இருக்க வேண்டும். ஆனால் நீ அப்படிதான் இருக்கிறாயா என என்னால் தீர்மானமாகச் சொல்ல முடியாமலிருக்கிறது என அவள் அடுக்கிக் கொண்டே போனாள்.

தோளைச் சிறிது குலுக்கியபடி தனது ரக்ரருக்குச் சென்றவன், "ஆம்" என்றான்.

அவன் யந்திரத்தில் ஏறி அதனை இயக்கினான். பின் ரக்ரர் கோதுமை வயலுக்கூடாகச் சென்று திருப்பத்தில் மறைந்த பின்பு, அந்த ஏற்றத்தின் உச்சியில் அவள் ஏறி நின்றாள்.

"அவர்கள் போலந்திலிருந்து வந்தால் என்ன ரினீசிலிருந்து வந்தாலென்ன் எல்லோரும் ஒன்றே" எனக் கைகளைக் கட்டியபடி கடுமையான பார்வையுடன் வயலைப்பார்த்து முணுமுணுத்தாள். நான் றெரின்ஸ், ரிங்பில்ட், சோட்லி போன்ற எல்லோரையும் கட்டி மேய்த்தவள். இந்தக்கௌசக்கையும் எப்படிக் கையாள்வது என எனக்குத் தெரியும். துப்பாக்கியால் குறிவைத்துப் பார்ப்பது போல், உழவுயந்திரத்தின் மேலுள்ள அவனது உருவம் மறையும் வரை கண்களைக் குறுக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள். உலகின் எதிர்ப்புக்களையெல்லாம் இவ் வளவு காலமும் சந்தித்தவளுக்கு, இப்போது அது இந்தப் போலிஸ்காரன் உருவில் வந்திருக்கிறது போலிருந்தது. மற்ற எல்லோரையும் போலவே நீயுமிருக்கிறாய். ஒன்று நீ சமர்த்தியமும், சிக்கனமும், பலமும் உள்ளவன். நானும் அப்படிப் பட்டவளே. ஆனால் இது என்னுடைய இடம். கறுப்பு நிற உடைகளுடன் தொப்பியும் அணிந்து ஒரு வயதான தேவதை பேன்ற தோற்றத்துடன், கைகளைக் கட்டியபடி எதற்கும் சமதையாக நிற்கமுடியும் என்ற தோரணையுடன் அவள் நின்றிருந்தாள். அவன் கண்களை முழுமையாக திறந்து பார்த்தபோது, அந்த உழவியந்திரத்லிருந்த உருவம், சிறிய வெட்டுக் கிளி அளவிற்கே அந்தப்பரந்த வயல்ப் பரப்பிலே தோற்றம் அளித் தது.

அவள் சிறிது நேரம் அங்கேயே நின்றாள். மெதுவாக வீசிய காற்றில், சரிவின் இருமருங்கும் இருந்த புற்கள் அலைகள் அசைவது போல் அசைந்தன. அந்தப் பெரியபுல் வெட்டி, ஒரே சுருதியுடன் கூடிய பெரியசத்தத்துடன், பொடியாக்கப்பட்ட மாட்டுத் தீவனத்தை வாகனத்துக்குள் விசையுடன் தள்ளிக் கொண்டிருந்தது.

சுற்றிச் சுற்றி ரக்ரரில் வந்து இடம் பெயந்தவன், கடைசியில் அந்த இரண்டு மலைகளுக்கிடையே எதுவுமே இல்லாத வகையில், எல்லாவற்றையும் வெட்டி வெளியாக்கி விடுவான். மலைகளுக்கு நடுவே இருந்த சவச்சாலையில், கிழவர் தனது பாழடைந்து கிடக்கும் கல்லறையின் கீழ் அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடியிருப்பார் என அவளுக்குத் தோன்றியது.

(தொடரும்)

தமிழில்
சு.மகேந்திரன்

---

## ஒரு நினைவுக்குறிப்பு

# கனவுகளை விரியச்செய்தவன்



1999இல் மெல்லிய உடலும் மலர்ச்சியான விழிகளும் சதா புதியவற்றைத்தேடும் துறுதுறுத்த மனமும் உடையவரான ராஜ்குமாரைச் சந்தித்தேன். அப்போது அவர் புதுக்குடியிருப்பு ம.வி.யில் சித்திர ஆசிரியர். ஒரு சாதாரண உரையாடலில் பரஸ்பரம் எங்களுக்கிருந்த ஆர்வங்களைப் பகிர்ந்து கொண்டோம். அது அடுத்து வந்த மூன்றாண்டுரை களுக்கும் தொடர்ந்த பயனுள்ள அர்த்தமுள்ள உறவை எமக்குள் ஏற்படுத்திவிட்டிருந்தது.

நாடகத்துறையில் அவரு க்கு இருந்த விருப்பம், தேடு வதிலும் செய்து பார்ப்பதிலும் இருந்த ஈடுபாடு என்பன அவரை அரங்கின் காண்பியக் கலைஞனாக உருவாக்கியது.

90 களின் இறுதியில் இருந்து எமது நாடகங்கள் படிமங்கள் மூலமே சனங்களுடன் பேசவிழைந்தன. படிமங்களைக் கட்புலனாக்குவதில் காண்பியங் களுக்கு முக்கிய இடம் இருந்தது. படிமங்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு காண்பியங்களாக உருவாக்குவதென்பது அரங்கியல்துறையைப் பொறுத்து, அதனுடன் உணர்வுபூர்வமான பரிச்சயம் உள்ளவரா லேயே சாத்தியமானது.

ராஜ்குமார் இவை எல்லாவற்றையும கடந்து எங்களுடன் இணைந்தார். காண்பியங் களை அரங்கில் பேசவைத்தார். அவரது குடும்பப்பின்புலமும் சவாலை எதிர்நோக்கி வாழ வேண்டிய தேச நிலைமைகளும் செய்து பார்க்கவேணும் என்ற ஆர்வமும் இதைச் சாத்தியமாக் கியிருக்கவேண்டும்.

'உயிர்த் தீ நாடகத்திற்காக இராணுவக்காலணி ஒன்றை உரு வாக்க வேண்டியிருந்தது. இது பற்றி நான் அவருடன் கதைத்த கணத்தில் 'செய்யலாம்' என நம்பிக்கையுடன் சொன்னார். அதன்பிறகு அவரது கடுமையான .உழைப்பையும் அர்ப்பணிப்பையும் கண்டேன். இரண்டு தடவைகள் பிழைத்துப் போய், மீண்டும் முயன்று வேறு உத்திகளைப் பாவித்து காலணியை உருவாக்கினார்.

'ஆன்மதகனம்' நாடகத் திற்காக பாரிய மண்டை ஓடு ஒன்றை அமைக்க வேண்டியிருந்தது. நாடகத்தின் பிரதான காட்சிப்படிமமே அது தான். அது மேடையில் நகரக் கூடியதாயும், தாடைகளை அசைக்கக் கூடியதாயும் இருக்க வேண்டும். அவருக்குச் சவாலாய் அமைந்த ஒரு பணி. அவரை உள் நின்று ஊக்கிவரும் அவரது தேடலார்வத்தின் துணை கொண்டு இந்தச் சவாலைக் கடந்தார். முதல் முயற்சி பின்னடை வைத்தர எல்லாவற்றையும் கழற்றிக் கொட்டிமீண்டும் முயற்சி தொடங் கியது. இரவு பகலாக உணவு உறக்கம் பாராதபணி. எந்தவித எதிர்பார்ப் புகளும் இல்லாமல்; ஒரு ஞானியைப் போல வேலையில் ஆழ்ந்து போனார். நித்திரை விழிப் பின் காரணமாய் முகம் முழுவதும் வீங்கிப் போய் விடும். கேட்டால் சிரித்து விட்டுப் போவார்.



"ஆன்மதகனம்" நாடகத்திற்கான அரங்கத்தயாரிப்பு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ராஜ்குமார்.

ராஜ்குமாரை ஒரு வழமையான ஆசிரியராக நான் என்றும் கண்ட தில்லை. நடப்பில் ஆசிரியர் என்ற அதிகார வரம்புகளைத் தாண்டி ஆழமான நேசிப்புடன் மாணவர்களுடன் பழகினார். இரவு வேலை என்றால் கலகலப்புக்குப் பஞ்சம் இருக்காது. எனது சக அரங்கச்செயலாளிகள் அவரது பகிடிகளை அடிக்கடி சொல்லிச் சிரிப்பார்கள்.

எந்தக் கட்டுக்குள்ளும் இறுகிப் போகாமல் சுதந்திர ஜீவியாய் இருக்க வேண்டும் என்ற அவரது எண்ணம் தான் சித்திர ஆசிரியர் என்பதற்கு அப்பால் அவரை மானிடநேசமுள்ள கலைஞனாக சிருஷ்டித்திருக்க வேண்டும்.

அவரது தேடலுக்கான சந்தர்ப்பத்தையும் எம் ஆத்மார்த் தமான உறவையும்தான் எம்மால் அவருக்குத் தரமுடிந்தது. ஆனால் அவரோ தனது அனுபவங்களை எம்மிடம் விட்டுச் சென்றுள்ளார். அவருடன் இணைந்து பணியாற்றிய அரங்கச் செயலாளிகள் இப்போது சுயமாக காண்பிய வேலைகளில் ஈடுபடத்தொடங்கியுள்ளனர். இது அவரது உருவாக்கம் தான்.

அமைதியான ஆனால் ஆழமான ஒரு செயலாளி அவர்; ஆனால் சரிவர வெளித்தெரிய முன்னமே உயிர் அடங்கிப்போனது பெருந்துயரம். எங்களது எதிர்பார்ப் புகளைத் தூண்டி கனவுகளை விரியச் செய்துவிட்டு அவர் போய் விட்டார். மனது ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

உயிர்க்கலையைப் படைத்த அந்த அற்புதக் கலைஞ னின் இடம் இன்னமும் எம்மிடம் வெற்றிடமாகவே உள்ளது.

இளங்கோ

---

மனிதரோடு நான் பழகப்பழக, மிருகங்களிடம் என் பிரியம் வளர்கிறது - ஃ பிரேடெரிக் மன்னர்

# யாரோடு நோவது யார்க்கெடுத்துரைப்பது

**வெளிவாசல் பாலன்**



ஒரேதடவையில் ஒரு காரியத்தை எந்த அலுவலகத்துக்காவது போய் நிறைவேற்றிக் கொண்ட அனுபவம் உங்களில் யாருக்காவது இருக்கிறதா?

நீண்ட காலத்துக்கு முதல் அப்படியான வழமை இருந்ததென்று நீங்கள் அடிக்கடி சொல்லி இருக்கிறீர்கள். அதுவும் உண்மை தான்.

ஆனால், பிறகு அப்படியொரு வழமை இருந்ததாகவோ ஏன் இப்போது இருப்பதாகவோ யாருக்கும் அனுபவங்களில்லை என்பதும் உண்மையே.

ஒரு அலுவலுக்காக குறைந்தது மூன்று நான்கு தடவைக்கு மேல் அலையும் அல்லது அலைந்த அனுபவந்தான் பலருக்குமுண்டு. சில காரியங்களுக்காக ஒரு பணிமனைக்குப் பத்துப் பதினைந்து தடவைகள் என அலைவதும் இன்று சாதாரண வழமையாகிவிட்டது. இப்படி எத்தனை தடவைகள் அலைந்து திரிந்தாலும், ஒவ்வொரு தடவையும் மிக நீண்ட நேரமாகக் காத்திருந்தாலும் வந்த காரியம் நிறைவேறுவதாயிருக்காது. உரியவர்களைப் பார்க்கவும் முடியாது.

பணிமனைகளிலிருப்போருக்கு வேலைச்சுமை. எல்லோரும் படுபிஸி என்று யாரும் இதற்குக் காரணம் சொல்லக் கூடும். மேலும் ஆட்பற்றாக்குறையும் அதனாலேற்படும் நெருக்கடிகளும் வளப்பற்றாக் குறைகளும் உடனடியாகச்சனங்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன என்றும் அவர்கள் கூறலாம்.

இவர்கள் படுபிஸியாக இருக்கின்றார்கள் என்றால் தேவைக்காக வரும் தாங்கள் மட்டுமென்ன பொழுதுபோக்குவதற்காகவோ அங்கே போகிறோம் என்று கோபத்துடன் கேட்கிறார்கள் பலரும். வேண்டுமானால் உரிய பதிலை, உள்ள நிலைமைகளையாவது சொல்லலாமே என்று தொடர்ந்து கேட்கிறார்கள் அவர்கள்.

இப்படி உண்மை நிலைமையைச் சொல்வதற்குப் பதிலாக பொறுப்பற்ற விதத்தில் அவர்கள் நடப்பதுதான் பெருங் கவலையையும் கடுங்கோபத்தையும் தருகிறது என்கிறார்கள் பொதுவாக.

யுத்தம் நிகழ்ந்த போது ஏற்பட்டிருந்த இயல்பற்றதன்மை இந்தப் பொறுப்பற்றதான தப்பித்தல் மனோபாவத்தை வளர்த்துவிட்டது என்பது பலருடைய அபிப்பிராயம்.

தாம் சேவை செய்ய வேண்டும் அது தமது தவிர்க்க முடியாத கடமை, சேவையைப் பெறுவதற்குரிய உரித்துடையோர் சனங்கள் என்ற எண்ணமும் மன விரிவும் புரிதலும் இருக்குமாயின் எத்தகைய புறக்கணிப்பும் பொறுப்பின்மையும் வெட்டியோடுதலும் கடத்துதலும் அவமதிப்பும் நிகழாது என்பது கவனிக்க வேண்டியது.

அப்படியாயின் இந்த மனச் சுருக்கமும் தப்பித்தலும் எதற்காக என்ற கேள்வி எழுகிறதல்லா?

நேரடியாகப் பதிலளிக்க வேண்டி வரும் போது அதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டிய அல்லது பொறுப்பு நிற்கவேண்டியதொரு நிலைமை உருவாகிவிடும். அது அதைச் செய்து முடித்தேயாக வேண்டும் என்ற அடுத்த கட்டத்தை உருவாக்கிவிடும்.

சரி, இதைப் பொறுப்பெடுத்துச் செய்து முடிக்கலாம்தான் என்ற கேள்வி தொடர்ந்து அடுத்ததாக வருகிறது.

சில காரியங்களை அவரே செய்யலாம். சிலதை அவருக்கு மேல் நிலையில் இருக்கும் அதிகாரிகளே தான் செய்ய வேண்டும். அல்லது செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். அதற்கு இவர் அதாவது சம்பந்தப்பட்டவர் கொஞ்சம் கரிசனையும் பொறுப்பும் எடுக்கவேணும்.

எடுக்கலாமே! ஏன் எடுத்தாலென்ன? அது அவருடைய கடமையல்லவா?

ஆனால் அதற்குத் தயாரில்லை எவருக்கும். சில பகுதிகளில் லஞ்சம் வாங்குவதற்காக இப்படி அலைக்கழிக்கிறார்கள். சில பகுதிகளில் லஞ்சம் இல்லைத்தான், ஆனால் அலைச்சலோ அளவு கணக்கில்லாமல் தொடர்கிறது; அனுமாரின் வாலாக நீள்கிறது என்கிறார்கள் அலைந்தலுத்தவர்கள் சலிப்போடும் எரிச்சலுணர்வோடும். சனங்கள் தொடர்ந்து தங்களைத் தேடி வருவதும் காத்திருப்பதும் தமக்கொரு பெருமையென நினைக்கிறார்கள் போலும் இவர்கள். அதிலொரு குரூர ரசனை எப்போதும் இவர்களுக்கிருப்பதாகவும்படுகிறது.

உண்மையில் சனங்கள் தொடர்ந்தும் ஒரு காரியத்துக்காக அலைவது என்பது இவர்களுக்கே சிரமாக இருப்பதில்லையா? மறுவளத்தில் சனங்களுக்கும் இது பெரும்துன்பமாக இருக்குமென்று இவர்கள் நினைப்பதில்லையா?

தொடர்ந்து ஒருவர் ஒரு அலுவலை நிறைவேற்றுவதற்காக அலையும் போது தினமும் அவரிடம் எத்தனை வகையான பொய்களைச் சாட்டுகளாகவும் காரணங்களாகவும் சொல்ல வேண்டியிருக்கிறது? இது எமது சமூகத்தை எங்கே கொண்டுபோய்விடப்போகிறது? இத்தகைய சுழிப்புகளின் பின்னால் இயங்கும் மனோபாவம் சாதாரணமானதல்ல.

அதிகார மமதையும் பொறுப்பற்றதனமும் இணைந்த கலவையான இந்த மனோநிலை எல்லாவற்றையும் சீரழித்து விடும். அப்படி சீரழித்தே வருகிறது.

அன்பு, கருணை, இரக்கம், மனிதாபிமானம், கடமை, பிறருடைய உரிமையை அங்கீகரித்தல், மற்றோரை மதித்தல், பிறருக்கு உதவுதல், நேசித்தல் என்பதற்கான அடையாளங்கள் எம்மிடம் மெல்ல மெல்லக் குறைந்து வருகிறதா?

சேவை என்பது என்ன?

பொறுப்பு என்பது யாது?

கடமை என்பது என்ன?

ஒரு பதவியைப் பொறுப் பெடுக்கும்போது அதன் வழி வரும் கடமையைச் செய்வது ஒருவருடைய பொறுப்பாகிறது.

பதவியின் வழிவரும் அதிகாரத்தையும் புகழையும் சுவைக்கும் இதம் கடமையையும் பொறுப்பையும் செய்ய விடாமல் தடுக்கிறதா?

முகம் பார்த்து- தகுதி பார்த்து, வசதி பார்த்து, தருணம் பார்த்து, ஆள் பார்த்து செய்வது தான் கடமையா? பொறுப்பான செயலா? அதுதான் சேவையா?

இது தானே மெல்ல மெல்லப் பெருகி வழமையாகிவருகிறது. ஒவ்வொரு அலுவலகங்களின் ஓரங்களிலும் இருக்கும் மரநிழல்களின் கீழ் தினமும் நிற்கும் சனங்களின் தொகையை நீங்கள் எப்போதும் பார்க்கலாம். ஏன் அவற்றில் நீங்களும் ஒருவராக எத்தனையோநாட்கள் நின்றிருப்பீர்கள் என்று சொன்னார் ஒரு தடவை ஒரு நண்பர். இப்படி நிற்போர் யார்? இந்தத்தேசத்திற்காக உழைப்போர் அதிலும் எப்போதும் கஸ்ரப்பட்டு தங்களின் உடலை வருத்தி உழைப்போர்களே எல்லாவகையான சுமைகளையும் தாங்கிக் கொண்டு ஒரு நாளின் வாழ்வையே நகர்த்துவதற்கு பெரும்பாடுபடும் சனங்கள், கடலோடிகள், வயற்காறர்கள், சாரதிகள், தையற்காறர்கள், கணவனை இழந்தோர், முதியோர் கையோ, காலோ ஊனமுற்றோர்...கள் தான்.

பலர் மிகத்தொலைவில் இருந்து வந்து காத்திருந்து விட்டு எந்தப் பிரயோசனமும் இல்லாமல் இனி, என்ன, ஏது? என்று தெரியாமல் திரும்புகிறார்கள்.

பிறகு மீண்டும் வருகிறார்கள்.

காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள்.

பிறகும் பிறகும் வருகிறார்கள்.அவர்களால் வேறு என்னதான்செய்யமுடியும்.

இப்படியே அலைவதைத் தவிர?

“இன்றுபோய்நாளைவா?

பிறகு நாளைபோய் நாளையின் பின்வா?”

-இது தான் புதுமந்திரம்.

இந்தச் சனங்கள் இப்படி அலையும் போது அவர்களுடைய மனம் எப்படியிருக்கும்?

வெம்பித் துடித்திருக்கும்; வேதனையால் கலங்கியிருக்கும். வெப்பியாரத்தால் சிவந்திருக்கும். வெறுப்பால் சலித்திருக்கும்.

ஆனால் என்ன செய்ய முடியும்?ஆரோடு நோவது? ஆர்க்கெடுத்துரைப்பது? ஏனிப்படி? ஏனிப்படி நடக்கிறார்கள்? பொறுப்பானவர்கள், படித்தவர்கள், பதவியாளர்கள் சில இடங்களில் புதிய நந்திகள் மேலே போகவிடாமல் தாமேதடுத்தும்விடுகின்றார்கள். சிலஇடைநிலையாளர்கள்.

சனங்கள் தங்களுடைய தேவைக்காக தன்னிடம் வரும் போது அவர்களை மறித்து ‘ஐயாவை இப்போது பார்க்க முடியாது.அவர் அலுவலாக இருக்கிறார்; அல்லது வேறு ஆரோ கதைத்துக் கொண்டிருக்கிறார். அதுவுமல்லாவிட்டால்- ஐயா கோபமாக இருக்கிறார், அல்லதுகூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்; இல்லையெனில் கூட்டத்துக்குப் போகப்போறார், இல்லாவிட்டால் தூர இடத்திலிருந்து இப்பதான் வந்தவர்’ என்று ஏதோ சாட்டுக்கள் சொல்லி திருப்பி அனுப்பிவிடுகிறார்கள் தனக்குக் கீழேயுள்ள ஊழியர்களில் சிலர்என்றார் ஒரு அதிகாரி. இப்படியும் அதிவிசேட சேவைகள் நடந்தும் விடுகின்றன.

இவற்றுக்குப் பின்னாலுள்ள சில விடயங்களை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒருகாரியத்தை நிறைவேற்றிக் கொள்ளுவதற்காக ஒருவர் பல தடவைகள் ஒரு இடத்துக்கு வரவேண்டியிருப்பதால் அவர் எவ்வளவு நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது. இது அவரின் உழைப்பு நேரத்தின் இழப்பாகிறது. சில வேளைகளில் ஒரு அலுவலுக்காக ஒருவர் மூன்று நான்கு இடங்களுக்கு மாறி மாறித் திரிய வேண்டி வரும்போது இந்த இழப்பு இன்னும் பன்மடங்காகி விடுகிறது.

இந்த உழைப்பு நேரஇழப்பு அவருக்கு மட்டுமான இழப்பு மட்டுமல்ல. அது இந்தத் தேசத்தின் உழைப்புச் சக்தியின் இழப்பாகிறது; இந்த உலகின் உழைப்பு நேரத்தின் இழப்பாகிறது. ஒரு மனிதனின் உழைப்புச் சக்தி வீணே இப்படி இழப்பதாயின் அவனுடைய ஆயுட்காலத்தின் சரிவாகவும் வாழ்வின் வீழ்ச்சியாகவும் அது அமையும்.

இது மட்டுமல்ல இப்படி பல சந்தர்ப்பங்களிலும் அலைய வேண்டியிருக்கும் போது உள நெருக்கடியேற்படுகிறது. பொருளாதாரச் செலவு நிகழ்கிறது. இவையெல்லாம் அந்தக் குடும்பத்தின் சரிவாகவே மாறிவிடுகின்றன. இது தான் இன்றைய யார்த்தமாக மாறியும் வருகிறது.

ஒரு தேசத்தின் வளர்ச்சியென்பதில் உழைப்புச் சக்தியை வீணே கழிந்து போகாமல் காப்பதிலும் அதை உரிய முறையில் திட்டமிட்டு பயன் படுத்துவதிலும் பெரும் பங்காற்றமுடியும். அது அப்படி இருக்கவும் வேண்டும். ஆனால் நமது சூழலில் நிலைமை எப்படி இருக்கிறது பார்த்தீர்களா!

இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும்.

அரசாங்க ஊழியர் ஒருவர் தனது தேவையொன்றிற்காக கடமை நேரத்திலிருந்து ‘சோட்லீவு’ எடுத்துக் கொண்டு போய்ஒரு அலுவலகத்தில் தொடர்பு கொண்டால் அவருடைய தேவை கூடியளவுக்கு விரைவில் முடித்துக் கொடுக்கப் படுகிறது. இதற்கு இரண்டு காரணங்கள் பொதுவாக உண்டு.

1) அவர் இங்கே இப்படி நின்று தாமதித்தால் அங்கே அவரு டைய வேலை மிஞ்சியிருக்கும். அவருடைய அதிகாரி கேட்பார். (பாருங்கள் அந்த வேலையில் இழப்போ தாமதமோ ஏற்படக்கூடாது என்பதில் ஒரு உறுதிப்பாடு எங்குமுண்டு; எப்போதுமுண்டு.)

2) அவர் இப்போது இங்கே இந்த அலுவலகத்துக்கு தனது தேவைக்காக வந்திருக்கிறார். இங்கிருக்கும் இவர் நாளை அங்கிருக்கும் அவரிடம் அப்படியொரு அலுவலுக்குப் போக வேண்டிவரும். அதற்காக ஒருவருக்கொருவர் உதவுதல்; மதிப்பளித்தல், செய்தல், நிகழ்கிறது. சாதாரணர்களிடம் யாருக்கு என்ன வேண்டியிருக்கிறது? அவர்களை ஏன்தான் மதிக்க வேண்டும் என்றமனோபாவம் தான் எல்லாம் தமது மதிப்பை உயர்த்திக் கொள்ளும் ஒருவகை எண்ணப் பாங்குதான் இது.

ஒரு காலத்தில் சேவை செய்தே சனங்களிடமிருந்து அன்பையும் மதிப்பையும் பெற்றார்கள் அதிகாரிகளும் ஊழியர்களும். இன்றோ சனங்களை அலைக்கழித்து அவமதித்து சிப்பிலியாட்டியே மதிப்பைப்பெற முயற்சிக்கின்றார்கள் மேலாளர்கள்.

பிற சூழலில் ஒரு தொலைபேசியூடாகவே பல பிரச்சினைகளை மிக இலகுவாகத்தீர்த்து விடுகின்றார்கள் அவர்கள். அதனால் அவர்களுக்கு எவ்வளவு சுமைகுறைகிறது. எவ்வளவு இலாபம் கிட்டுகிறது. இங்கோ சிறு அனுமதியொன்றிற்குக்கூட மணிக்கணக்காக நாட்கணக்காக அலைய வேண்டியிருக்கிறது. போக்குவரத்தும் இலகுபடுத்தப்படாத சூழலில் நேரில் வருவதும் போவதும் என்பதும் சாதாரணமானதோ பொறுத்துப் கொள்ளக்கூடியதோ அல்ல.

நேரத்தைமிச்சப்படுத்தி, அதை நல்ல முறையில் பயன்படுத்தாவிட்டால் நமது சமூக வளர்ச்சியானது எத்தகைய அற்புதமான திட்டங்களைப் போட்டாலும் அது வெற்றியளித்து விடாது.

மற்றவரின் துயரத்தையும் உரிமையையும் உணர்வையும் மதிக்காத நமது வாழ்க்கை என்றும் அமைதியாகவும் சீராகவும் இருந்துவிடப்போவதுமில்லை.

பிறரை மதிக்காத போதும் பிறருடைய உரிமைகளை அங்கீகரிக்காத நிலைமையின் கீழ்த்தானே எல்லாப் பிரச்சினைகளும் முளைவிடுகின்றன.

நெஞ்சு இலக்கணம் தெரியாதவனுக்கு பஞ்சலக்கணம் தெரிந்து பலனென்ன - தமிழ்பழமொழி

# நயினாதீவு
## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய
## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் - 12.07.2003







## திருத்தேர்ப்பவனி - அறங்காவலர் சபையின் ஆசிச்செய்தி

சனிக்கிழமை காலை (12.07.2003) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் வருடாந்தத் தேர்த்திருவிழா இடம் பெறுகின்றது. 64 சக்தி பீடங்களுள் ஸ்ரீ புவனேஸ்வரி பீடம் என்று அழைக்கப்படுவது நயினா தீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானமாகும். இந்துப்பண்பாட்டுக்கு எதிரான மிலேச்சர்களால் எவ்விடர் வந்தபோதும் அம்பாளின் ஆகம முறை யிலான பூசைவழிபாடுகள் திருப்பணிகள் முட்டின்றி நடந்து வரும் சத்தித் தலம் நயினை நாகம்மாளின் திருக்கோயிலாகும். இயற்கையாகவே நாற் புறமும் அலையெறியுங் கடலாற்சூழப்பட்டு மிகவும் பழைமை வாய்ந்த வழிபாட்டு மரபுகளைக் கொண்டு இன்றும் சைவத்தமிழ் அடியார்களின் உள்ளத்திலே மிகவுயரிய மகோன்னத மகிமையுடன் போற்றி வழிபடப்படும் திருத் தலம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலாகும்.

நயினை நாகபூஷணி அம்பாள் பல்வேறு திருக்கோவில் களிலேயும் மெய்யடியார்களுக்குத் தனது பேரருட் கடாட்சத்தினை நல்கி வருகின்றாள். ஆன்ம கோடிகள் இறைஞ்சும் பெருவரங்களை யெல்லாம் நல்கி அகிலாண்டேஸ் வரியாக விளங்குகின்றாள்.



உணர்வதற்கரிய மாபெரும் தெய்வம் ஸ்ரீ நாக பூஷணி அம்மன். அம்பாளின் வர லாற்றுச் சிறப்பு அறி ஞர்களுக்கும், ஆய்வாளர்களு க்கும் ஞானிகளுக்கும், சித்தர் களுக்கும், யோகிகளுக்கும், ரிஷிகளுக்கும், இன்றைய அனைத்துப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவ,மாணவியர்க் கும் ஆய்வின் போதும் மலைப் பையும் பெருவியப்பையும் தந்து நிற்கின்றமையைக் கண்கூடா கவே நாம் கண்டுகொண்டி ருக்கின்றோம்.

இன்றும், இனியெதிர் காலத்திலும் நயினை ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலயத்தில் உள்ள மூலமூர்த்தியின் தோற்றம், வடிவம் அதன் தத்துவவிளக்கம், மர்மம் என்பன துலக்கமுறாத வகையிலேயே இருக்கும். சிவாச்சாரியார்களும், ஆய்வா ளர்களும், யோகிகளும் மூலமூர்த்தி அம்மனின் திருவுருவத்திற்குப் பல்வேறு விளக்கங்களையும் தத்தமது அனுபவத்திற்கும் அறிவிற்கும் ஏற்ப வெளியுலகிற்கு எழுதியும் பேசியும் உணர்த்தியும் வருகின்றனர். ஆராய ஆராய மிகவும் கீர்த்தி வாய்ந்த தலமாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் திகழும்.

இன்று உலகின் நாலாபுறங்களிலும் இருந்து அம்பாளைத் தரிசித்து தமது இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொள்ளும் அடியார்கள் வெகு அதிகளவிலான தொகையினர் ஆகும். இஃதொன்றே அம்பாளின் பேரருளை அளவிடப் போதுமான சான்றாகும். இக் கோவிலினதும் மூல மூர்த்தி, எழுந்தருளி மூர்த்திகள் பற்றிய பெருமைகளும், நாகதோஷம் தீர்க்கும் வரலாறும் இவ்வா லயத்தின் புகழையும், கீர்த்தியையும், மகிமையையும், மகத்துவத்தையும் துல க்க உதவுவனவாகும்.

இத் திருத்தலம் மணிமேகலாதெய்வத்துடனும், கௌதமபுத்தரு டனும் தொடர்புடையதென்பதனை மணிமேகலையினூடாகவும், மகாவம்சத்தினூ டாகவும் அறியமுடிகிறது. ஆதி வரலாற்றுச் சான்றுகளாக இன்றும் காணக் கூடியதாகவுள்ள பாம்பு சுற்றிக்கல், கருடன் கல் என்பனவும், முதலாம் பராக்கிரம பாகுவின் காலத்து கல்வெட்டும், திருத்தேரிலேயுள்ள அம்பாள் ஆலய வரலாற்றைச் சித்திரிக்கும் புகழ்வாய்ந்த அழகிய சித்திரங்கள் ஆகியனவும் நாகபூஷணி அம்மனின் தனிப்பெரும் கீர்த்தியை துலக்க வல்லனவாகும். இயற்கை மூலிகையான வேப்பிலையின் மகத்துவத்தை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலிலேயே கண்கூடாகவே அனைவரும் அறியலாம். பல்வேறு பிணிகளையும் போக்கிச் சுகம் செய்யும் வல்லமை யும் ஆற்றலும் ஸ்ரீ நாகபூஷணி என்னும் வேப்பிலை நாயகிக்கு உண்டு.

இன்றும் பெண்களின் உள்ளத்தில் அதியுயர் தெய்வமாகவும், நம்பிக்கைக்குரிய தாயாகவும் திகழ்கின்றாள். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருமணம், மகப் பேறு, உடற்சோர்வு, குடல் நோய்கள், தோல் நோய்கள், என்பவற்றினை நீக்கும் பேராற்றல் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் ஆலயத்திற் குண்டு. சிவராத்திரி, ஆடிப்பூரம், திரு வெம்பாவை எனும் சமய விரத நாட்களிலே அம்பிகையை பூசிக்கும் அடியார் தொகை பெருகிக் கொண்டே வருகிறது. இவற்றுக் கெல்லாம் காரணம் நாகம்மாளின் பெரும் கருணையே ஆகும். அருளாட்சியின் வீச்சு அதன் மகிமை எம்மால் எடுத்துரைக்க முடியாத வகையிலே வியாபித்து விரிந்து பரந்து ஆழ்ந்து அகன்று நிற்கிறது.

இன்று அறங்காவலர் சபையினர் அம்பாளுக்கென புதிய தொரு இராஜகோபுரத் திருப்பணியினைத் தொடங்கியுள்ளனர்.99 அடி சப்த தள இராஜகோபுரத்திருப்பணி தொடங்கப்பட்டுள்ளது. இதனை அடியார்கள் அனைவரும் மனதில் இருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

அலையெறியும் சமுத்திரத்தின் மத்தியிலே அழகு மிளிரும் ஒரு சக்தி பீடம் மேலும், ஓங்கி ஒலிக்கவும் உயர்வாக தோற்றம் அளிக்கவும் பேரழகைக் குவிக்கவும் இராஜ கோபுரத் திருப்பணியானது மிகவும் அவசியம் என்பதனை அனைவருமே ஒத்துக் கொள்வர் என்பது எமது திடமான நம்பிக்கை. புண்ணியப் பெரும் பங்களிப்பையும் - பெருநிதியி னையும்-திருப்பணி நன்கொடையினையும் அம்பாளின் இராஜ கோபுர திருப்பணிக்கு நல்கி, இத்திருப்பணி இனிதே நிறைவுறப் பரிபூரண ஒத்துழைப்பினை நல்குவீர்களென எதிர்பார்க்கின்றோம். அம்பாளின் 'அருட்டுணர்வு' அடியார்களின் துடிப்பு, அறங்காவலர் சபையின் 'முயற்சிகள்' இவையனைத்தும் இணைகின்ற செயற்பாடே இராஜ கோபுரத்திருப் பணி. இப் புண்ணியத்தில் இன்று முதலே நீங்களும் இணை யலாம், உதவலாம். நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் உதவப்பண்ணலாம்.பிரச்சாரம் செய்யலாம், சக்தியை வியக்கலாம்.

அனைத்து உயிர்களையும் காப்பாற்றும் கருணைஉள்ளம் படைத்த தெய்வம் நயினை ஸ்ரீ நாக பூஷணி அம்மன். இலங்கையிலே வசிக்கும் பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இசுலாமியர்கள் இந்துக்கள் இன்னும் எத்தனையோ சமயப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் எவ்வித வேறுபாடுகளும், பேதங்களுமின்றி இங்கு வந்து அம்பாளைத் தரிசித்து, அன்னதானத்திற் பங்குகொண்டு வரங்கள் பல பெற்றுச் செல்கின்றனர். சர்வமத சந்நிதி எனத்திகழ்வது நயினாதீவு. எல்லாச் சமயங்களுக்கும் சமயவாதிகளுக்கும் இடந்தந்து பெரும் தத்துவமாய் வியாபித்துள்ள சைவ சித்தாந்தம் எனும் ஆணி வேரின் பலத்துடனும், ஆகமவழி பாட்டு மரபினையும், சைவநீதியினையும் நிலைநிறுத்தும் நயினை நாகபூஷ ணியம்மனின் திருத்தேர்த் திருவிழாவைபவம் ராஜயோக போக வைப வமும் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்ததொன்றாகும்.

இன்றைய அம்பிகையின் திருத்தேர்ப்பவனியிலன்று நாம் அனைவரும் மனமொன்றிப் பிரார்த்திக்கத்தக்கது என்ன வென்றால் இந்தநாட்டிலே நிரந்தரமான சமாதான சகவாழ்வும் சாந்தியும் ஒற்றுமையும் ஏற்படவேண்டும் என்பதுடன், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களது நிம்மதியான வாழ்வுக்கு அம்பாள் திருவருள் சுரந்து வழிசமைக்க வேண்டும் என்பதேயாகும். சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர் சீல முற்று, நித்திய சாந்தியையும் அமைதியையும் திருவருள் சுரந்து நல்கிடம்மா! என்று பிரார்த்திப்போமாக!

அறங்காவலர் சபை.
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்
நயினாதீவு.

## நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச் செய்தி

**அகில அண்டங்களையும் ஆண்டு அலைகடல் மத்தியிலே வீற்றிருந்து அல்லலுறும் அடியவர்களுக்கு அருள் புரியும் அன்னை நாகபூஷணி அம்பிகையின் பிரம்மோற்சவம் ஆரம்பமாகி தேர்த்திருவிழா சனிக்கிழமை நடைபெறுகிறது. அன்னையின் அருட் கடாட்ஷம் அனைத்து மக்களுக்கும் கிடைத்து மக்கள் சுகமான வாழ்வும் சுபிட்சமான நிலை அடைவார்கள். திருத்தேரேறி வரும் அம்பிகையின் கடைக்கண் பார்வையால் அனைத்து மாணவர்களும் கல்வியில் சிறந்தும். உத்தியோகஸ்தர்கள் உயர்பதவியடையவும். வியாபாரிகள் சிறந்த லாபமும், சுமங்கலி பெண்கள் நித்திய சுமங்கலியாகவும், கன்னிகைகள் உசிசகால விவாகமும் கிடைத்து நீடூழி வாழ பிரார்த்திக்கின்றோம்.**

—— பிரதிஸ்டா திலகம், ஆசிர்வாதசரபம் கைலாஸநாத வாமதேவக்குருக்கள்

# நயினாதீவு
# ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய
# தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்
## 12-07-2003



## நிம்மதி தந்து காத்திடுவாய்!

நற்றவப் பயனாய் நல்லறம் வளர்க்கும்
நயினையம் பதியில் நீ யமர்ந்து
கற்றவ ராக்கிக் களித்தருள் புரியும்
கன்னித் தாயே ஈஸ்வரியே
சுற்றம் சூழத் தொழுதிட வந்தோம்
துயரந் தீர்ப்பாய் துரந்தரியே
பெற்றவள் நீயே பிள்ளைகள் செய்யும்
பிழைகள் பொறுத்துக் காப்பாயே.

எத்தனை காலம் உன்னெழில் காண
எழுகின்ற ஆவல் இயலாமல்
அத்தனை நாளும் அன்னையே அடியார்
அழுகின்ற குரல்கள் அறிவாயே
சுபானுவில் திருவிழாக் காணல்
திண்ணமென்றெண்ணிப் புறப்பட்டோம்
உத்தமித்தாயே உன்னருள் நல்கி
உள்ளத் தளர்வை அகற்றிடுவாய்.

எல்லை கடந்த இடர்தனைக் கண்டோம்
ஈடேறா நிலையில் துயருற்றோம்
வல்லமை இழந்தோம் வகையது அறியோம்
வாடிப் பதற்ற நிலையுற்றோம்
செல்லுந் திசையும் அறியா நிலையில்
தேவி உன்னைச் சரணடைந்தோம்
அல்லும் பகலும் அமைதியைத்தேடி
ஆலயம் வந்தோம் அருள்வாயே.

சந்ததி தழைக்கத் தாரணி சிறக்க
தமிழும் சைவமும் தான்வளர
சிந்திய குருதியும் செய்தீ வினைகளும்
சிறிதும் தொடரா தகன்றுவிடப்
பந்தியில் சகலரும் சமத்துவம் பெற்றுப்
பாங்காய் வாழ்ந்து மகிழ்ந்திருக்க
நிந்திப்பவர்கள் தொல்லை களைத்து
நிம்மதி தந்து காத்திடுவாய்.

திருமதி. சீனிவாசகம் சாரிகாசினி
(ஓய்வுபெற்ற அதிபர்)

(சி-8301)


தேரேறிவரும் நயினைநாகபூஷணி அம்மன் அருள் அனைவருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.



இளம் நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளை கைதேர்ந்த நிபுணர்களின் கைவண்ணத்தில் அழகாகவும், சிறப்பாகவும் அசல் 22கரட்டில் செய்து கொள்ள நாடவேண்டிய இடம்

நம்பிக்கை, நாணயம், தரச்சிறப்பு

Sgh சிவா கோல்ட் ஹவுஸ்

இல:56, தர்மலிங்கம் வீதி, வவுனியா. Tel: 024-23034

(சி-7983)

நலமருள்வாய் நாகபூஷணித் தாயே!

விவசாயப்பெருமக்களுக்கோர் நற்செய்தி!



அக்ரிமெக் JET 5

இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின்
"லக்பொஹெர "
"BASF FINLAY" பெற்றோலியம்
விவசாய இரசாயனங்கள்
ஜினசேன லிமிட்டெட்டின்
இருசக்கர உழவு இயந்திரம்,
அறுவடை இயந்திரம் மற்றும் விவசாய
உபகரணங்களை விசேட கழிவுடன்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள



அக்ரிமெக் AHT 12



அக்ரிமெக் AHT 8

வேலும் மயிலும் களஞ்சியம்

(ஈழநாதம் பணிமனை முன்பாக)
353, யாழ்சாலை, கிளிநொச்சி.



அக்ரிமெக் AHT 7

(சி-8302)

# ஈராக்கிய குடிமகனின் வாக்கு மூலம் - 08

ஆனால் அமெரிக்கக் கடற்படை பிற்காலத்தில் கடத்துகின்ற கப்பலையும் சேர்த்து பறிமுதல் செய்து விடுவதாக முன்னர் அவர் சொன்னாரே!

விட்டேனா நான் அதைப்பற்றியும் அவரிடம் கேட்டேன்.

"பிற்காலத்தில் பிடிபடும் கப்பல்களில் எண்ணெயை அமெரிக்கக் கடற்படை பறித்துவிட்டுபின் பணியாளர்களை விடுவித்துவிட்டு கப்பல்களை டுபாய்த்துறைமுகத்திற்கு அனுப்பி விடுவார்கள். அங்குவைத்து விற்பனைக்காக அவை விடப்படும். ஆனால் புதினம் என்னவென்றால் கப்பல் சொந்தக்காறர்களே மீண்டும் அதனை வாங்கிவந்து விடுவார்கள். விற்பனைக்கு விடப்படும் கப்பல்கள் அதன் சொந்தக்காறராலேயே வாங்கப்படுவதுதான் வழமை. எனக்கு அந்த துரதிஷ்ரம் நிகழவில்லை"



"நான் கேட்பதையிட்டுக்குறை நினைக்கமாட்டீர்கள் என்றால் உங்களுடைய திறமையின் தொழில் ரகசியம் என்னவென்று நான் அறியலாமா?" என்று நான்கேட்க பலமாகச்சிரித்த அவர்.




"ஏன் உங்கள் தொழிலை விட்டுவிட்டு எங்கள் தொழிலைத் தொடங்கிவிடலாம் என்று திட்டமிட்டுவிட்டீர்களா?"

என்கிறார் சிரித்துக்கொண்டு. ஆனால் தொடர்ந்து அவர்தனது தொழில் நுணுக்கத்தை என்னிடம் ஒப்பித்தார்.

"நாங்கள் எல்லாநாடுகளுக்கும் எண்ணெயைக்கொண்டு போவதில்லை. ஈராக்கடலுக்கு மிக அண்மையாக உள்ள அரபு நாடுகளுக்குத்தான் நான்கொண்டு செல்வேன். அதில் ஒப்பீட்டளவில் இலாபம் குறைவுதான் ஆபிரிக்க நாடுகள் பக்கமாகச் சென்றால் அதிக இலாபம் கிடைக்கும். ஆனால் நான் அப்படிச் செல்வதில்லை"

"அரபு நாடுகளில்தானே போதியளவு எண்ணெய் வளம் இருக்கிறதே அப்படியிருக்க அந்த நாட்டில் எண்ணெயை விற்க முடியுமா?" இது எனக்குள் எழுந்த நியாயமான சந்தேகம். அதற்கு அவர் பதில் தந்தார்.

"நாங்கள் அந்த நாட்டில் எண்ணெயை விற்பதில்லை. அந்தத்துறைமுகத்திற்கு வரும் வேற்று நாட்டுக் கப்பல்கள் எங்களிடம் எண்ணெயை வாங்கும். ஏனென்றால் ஒரு டன் டீசலின் சர்வதேச விலை ஏறத்தாழ 300 தொடக்கம் 350 டொலராக இருக்கிறது. அதனால் அவர்கள் அந்த நாட்டில் எண்ணெயைப் பெறாமல் எங்களிடம் வாங்குவார்கள."

"இந்த நாடுகளை தெரிவு செய்வதற் கான தொழில் ரகசியத்தைச் சொல்வதை விட்டு விட்டீர்களே" என்று ஞாபக மூட்டினேன்.

"ஆ...அது என்னவென்றால் நாங்கள் எண்ணெயை ஏற்றிக்கொண்டு முதலில் செங்குத்தாக ஈராக்கிய கடல் எல்லையைத் தாண்டாதவாறு உயரக் கடலை அடைவோம். பின் ஈராக்கிய கடல் எல்லையை அண்டி கிடையாகக் கப்பலைத் திருப்பிப் பயணிப்பேன். ராடரில் அண்மையில் அமெரிக்கர்களின் கப்பல் இல்லை என்பதை உறுதிசெய்ததும் ஒரு சாய்வான பயணப்பாதைமூலம் குறித்த நாட்டை நோக்கி கப்பலைத் திருப்புவேன். இதில் என்னவென்றால் ஈராக்கியக் கடல் எல்லையை அண்டிச் சென்றுகொண்டிருப்பதால் அமெரிக்க பீரங்கிப்படகுகள் எம்மைத் துரத்தும்போது என்னால் கப்பலை ஈராக்கிய எல்லைக்குள் வேகமாக செலுத்திவிடமுடியும். செல்ல வேண்டிய நாட்டிற்கு ஒரு சாய்வான பயணப்பாதையைத் தெரிவுசெய்வதன்மூலம் அமெரிக்கர்கள் துரத்திவந்து எமது கப்பலை வழிமறித்து ஏறிவிட்டால் கப்பலின் மேல்தளங்களின் வாயில்கள் அனைத்தும் மேலும் அடுத்ததளத்தின் வாயில்களும் விசேடமாகச் செய்யப்பட்ட இரும்புக் கதவுகளை மூடிவிட்டு உள்ளே உள்ளே இறங்கிவிடுவோம். அவர்கள் கதவை ஒரு வழிபண்ணுவதற்கு எடுக்கும் நேரத்தில் நாங்கள் சர்வதேசக் கடற்பரப்பில் இருந்து ஈராக் கடல் எல்லைக்கோ அல்லது செல்லும் நாட்டின் கடல் எல்லைக்கோ வேகமாகக் கப்பலைச் செலுத்திவிடுவோம். அவர்கள் கடலில் குதித்து தங்கள் படகுகளில் ஏறிச் சென்றுவிடுவார்கள்."

"இதற்கு மாற்றுவழி அமெரிக்கர் களிடம் இருக்கவில்லையா?"

"நீண்டகாலத்தின்பின் இதைவிளங்கிக் கொண்டு அமெரிக்கக் கடற்படை எங்கள் விசேடமான இரும்புக்கதவுகளை வெட்டுவதற்கு லேசர் கதிரிலான கருவிகளுடன் செயலில் இறங்கினார்கள். அது பார்த்துக்கொண்டிருக்க ஓரிரு நிமிடங்களிற்குள் வெட்டி எறிந்து விடுகிறது. அது எங்களுக்கு மிகுந்த சிரமத்தைத் தந்ததுதான். இதனால் பல கப்பல்கள் பிடிபடவும் நேர்ந்தது."



"கப்பல் கட்டன்களுக்கு அமெரிக்கக் கடற்படை வெறுப்புக்கும்,சாவாலுக்கும் உரியதா கத்தான் விளங்கியிருக்கிறது." என்று சவால் நிறைந்த அவர்களது தொழிலில் வியப்பை நான் வெளிப்படுத்தினேன்.

"வெறுப்பு மட்டுமா? கடலில் அமெரிக்கப்பீரங்கிப்படகுகளைக் கண்டால் பல கப்பல்காறர்கள் தமது சிறிய ரக ஆயுதங்களால் சுடத்தொடங்கிவிடுவார்கள். சுட்டுக்கொண்டே ஈராக்கிய எல்லைக்குள் தப்பித்துவிடுவார்கள். எங்கள் எண்ணெயைமறிக்க அவன்யார்?" என்கிறார் கோபத்தோடு.

பிரவீன்

(ஒரு வாரம் காத்திருக்க)

# நேர்நோக்கு

## அதிகாரத்தைக் கைப்பற்ற...

அவசரகாலச் சட்டம் இல்லாத நிலையில் சிற்றூழியர்களின் வேலை நிறுத்தத்தின் போது அவர் களுக்குப்பதிலாக இராணுவத்தினரை எவ்வாறு சேவைக்கு அமர்த்த முடியும்? அது அப்பட்டமான மனித உரிமைமீறல் என சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ச தெரிவித்திருக்கிறார். அது அரசாங்கத்தின் அடக்கு முறையை வெளிப்படுத்துவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

அரச ஊழியர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்துவது தவறி ல்லைத்தான். அதற்கு எதிராக இவ்வாறான கடும் நடவடிக் கைகளை எடுப்பதும் தவறு தான். ஆனால் சட்டத்திற்கு விரோதமாகவும் மனித உரிமை மீறலாகவும் மக்களின் அடிப்படை மனித உரிமையை மீறும் வகையிலுமான நடவடிக்கைகளை இவர்கள் தொடர்ந்து புரிந்து வருவதையிட்டு கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரவலாகவும் யாழ். குடாநாட்டில் குறிப்பாகவும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ள மக்களின் சொத்துக்கள் குறித்து இவர்களுக்கு கவலையில்லை.

சிறிலங்கா மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் அவசர காலச்சட்டம் இல்லாத நிலையில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களின் குடியிருப்புகளும்,விளைநிலங்களும், தொழிற் சாலைகளும் மக்களின் பாவனைக்கு தடுக்கப்படுவது மனித உரிமைமீறல் எனச்சுட்டிக்காட்டியும் இராணுவத்தரப்பு அதற்கு செவிசாய்க்க மறுத்துள்ளது. பாதுகாப்பு முக்கியம் எனவும் அது கூறியுள்ளது. மக்களின் பாதுகாப்புக்கு என்னும் பெயரில் மக்கள் அதற்கு எதிராக குரலெழுப்பியும் மனித உரிமையை மீறும் செயலில் படைத்தரப்பு ஈடுபட்டிருக்கின்றது. இத்தகையதொரு அமைப்பை உருவாக்கியவர்கள் மகிந்த ராஜபக்ச போன்றவர்களே. இப்பொழுதும் கூட இராணுவத்தின் நிலைப்பாடு சரி என வாதிடுபவர்களும் இவர்களே. இந்நிலையில் மனித உரிமைகள் குறித்து இவர்கள் எவ்வாறு பேசமுடியும்?

இன்று அவசரகாலசட்டம் அமுலில் இல்லை என்பதால் இராணுவத்தைப் பயன்படுத்தியது தவறு என்று கூறும் இவர்கள், தமிழ் மக்களின் வாழ்விடங்களை இராணுவம் சுற்றிவளைக் கவும்,தேடுதல் நடத்தவும். சந்தேகம் எனும் பெயரில் கைது செய்யவும் எவ்வாறு அனுமதிக்கின்றனர்?

இன்று ஊழியர்களின் போராட்டம் இவ்வாறு அடக்கப்பட்டது தவறு என்று கூறும் இவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவுசெய்ய என்ன செய்தார்கள்? அவ்வேளை யில் இவர்களால் நிறைவேற்றப்படாத கோரிக்கை களே இப்பொழுது அவர்களால் முன் வைக்கப் பட்டு போராட்டங்கள் நடாத்தப்படுகின்றன என்பதே உண்மை.

அதேவேளை தமது ஆட்சிக்காலத்தை அவசர காலச்சட்டத்தின்கீழும் மனித உரிமை மீறல்கள் புரிந்துமே நடத்துகின்ற இவர்கள் எதிர் க்கட்சிக்கு வந்ததும் மக்கள் மீது அன்பைச் சொரிகின்றனர்.

எம்பிலிப்பிட்டியவில் சிங்கள மாணவர்களின் புதைகுழிகளைத் தோண்டி குற்றவாளிகளைத் தண்டிப்பதாகக் கூறி ஆட்சியைக் கைப்பற்றிய இவர் கள் அதே படுகொலையாளர்களைக்கொண்டு செம்மணியிலும் பாரியபுதைகுழிகளை ஏற்படுத்தினர்.

ஆக மொத்தத்தில் தமது அதிகாரத்திற்கு எதிரானவர்கள் மீது எதனையும் செய்யத் தயங் காத இவர்கள் அதிகாரத்தைக்கைப்பற்ற முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர்.

வேலவன்

எட்டினால் குடுமியைப்பிடி; எட்டாவிடால் காலைப்பிடி. – தமிழ்பழமொழி

# கிராமிய மக்களின் முன்னேற்றப் பாதையில் கிராமிய அபிவிருத்தி வங்கி

வங்கியின் அறிமுகம்:-

ஒருநாட்டின் பொருளாதாரத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் கிராமிய பொருளாதார அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளது. இதற்காக கிராமப்புறங்களில் காணப்படும் வளங்களைச் சரியானமுறையில் பயன்படுத்தப்பட்டாலேயே இவ் இலக்கை அடையமுடியும். இந்த வகையிலேயே கிராமிய மட்டவளங்களை பூரணமாகப் பயன்படுத்தி கிராமிய மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்காக உருவாக்கப் பட்டதே கிராமிய அபிவிருத்தி வங்கியாகும்.

இந்தவகையில்தற் போதுள்ள கிராமிய அபிவிருத்தி வங்கியானது கிராமிய நிதியம் என்ற பெயருடனேயே ஆரம்பமாகியது. இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய போது சிறிலங்கா அரசினால் மேற் கெள்ளப்பட்ட பொருளாதாரத் தடை யாலும் கொடிய யுத்தத்தாலும் மக்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்து வறுமையில் வாடியபோது இம்மக்களை பொருளாதார ரீதியாக முதன்மை பெறச்செய்ய வேண்டும் என்பதற்கமைய வேலைத் திட்டங்கள் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் தால் மேற்கெள்ளப்பட்டது. இந்த வகையில் மக்களுக்கு இருந்த முக்கியபிரச்சினை முயற்சி இருந்தும் முதல்அற்ற பிரச்சினையாகும். இவ்வாறான முதலீட்டுப் பிரச்சினையை போக்குவதுடன் சுயமான சேமிப்பே சுகமான வாழ்வுக்கு வழிகோலும் என்பது போல் கிராமிய மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவிப்பதன் ஊடாக சாதாரணமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம். கடன் வழங்குவது தனிநபர் வருமானத்தையும் உயர்த்தும் எனக்கருதி 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் திகதி, செல்வபுரம், கந்தரோடை ஆகிய இடங்களில் தனது முதற் பணியை கிராமிய நிதியம் ஆரம்பித்தது. முதன் முதலில் வறுமையில் வாடும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த் தும் நோக்குடன் கோழிவளர்ப்புக்கு கடன் வழங் கப்பட்டது.

இவ்வாறு வளர்ச்சியடைந்த கிராமிய நிதியமானது 1998 ஆம் ஆண்டு சேமிப்பு மட்டுமல்லாது நிலையான வைப்புக்களையும் திரட்ட ஆரம்பித்தது. அடுத்த கட்டமாக தமிழீழத்தின் முதுகெலும்பாக உள்ளவர்கள் விவசாயிகளே. இவ்விவசாயிகளின் மேம்பாட்டிற்கு எந்தவித திட்டங்களும் எந்தவொரு நிறுவனத்தாலும் மேற்கொள்ளப்படவில்லை. இக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு 1999 ஆம் ஆண்டு விவசாயிகள் முதலீட்டு சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரையும் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறு பல கட்டங்களையும் தாண்டி செயற்பட்டு வந்த நிதியமானது பணிப்பாளர் சபையினால் 09. 06. 2001 இல் கிராமிய அபிவிருத்தி வங்கி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகின்றது.

இன்றுஇவ் வங்கியானது தனது மத்திய செயலகத்தை வட்டக்கச்சியிலும்கிளைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் பரப்பியுள்ளது.

கிராமிய அபிவிருத்தி வங்கியானது கிராமிய முன்னேற்றத்தில் பங்கேற்று தன் பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டிய நிலையில் சிறுவர்களுக்கான தளிர் சேமிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி பாடசாலை தோறும் திறம்படச் செயலாற்றி வருகின்றது. அத்துடன் கிராமமட்டங்களுக்குச் சென்று நடமாடும் சேவையை ஆரம்பித்து கிராமிய மக்களுக்கு கடன் வழங்கல் மற்றும் சேமிப்புப்பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் குறிக்கோள்.

வடக்கு - கிழக்குவாழ் மக்களின் தன்னிறைவான பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

01. செயற்திறன் வாய்ந்த கிராமிய முதலீட்டுத் துறையை உருவாக்கக் கூடிய நிதித்தளத்தை உருவாக்குதல்.
02. கிராமிய மூலதன உருவாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நிதியை கவர்ச்சிகரமான சேமிப்புத் திட்டம் மூலம் திரட்டுதல்.
03. வலுவிருந்தும் நிதியற்றிருக்கும் முதலீட்டாளர்களிற்கு நிதியாதாரத்தினை வழங்கும் வகையில் கடன் திட்டங்களைச் செயற்படுத்துதல்.
04. கிராமியத்துறையில் பல்வேறு துறைகளின் அபிவிருத்திக்கு தூண்டுதல் அளிக்கும் கிராமிய மட்ட முதலீட்டாளர்களை உருவாக்கி நாட்டின் தொழிற்துறை வளர்ச்சித்திட்டங்களுக்கும் நிதியாதார வசதியை வழங்குதல்.

வங்கியால் வழங்கப்படுகின்ற கடன் திட்டங்கள்.

01. விவசாயக் கடன்:- நெற்செய்கை, சிறுதானியம், மரக்கறிச் செய்கை, பழமரச் செய்கை, தெங்குச் செய்கை, ஏனைய வகைப் பயிர்ச் செய்கை போன்ற சகல பயிர்ச் செய்கையிலும் ஈடுபடும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்கள் இவ்வகைக்குள் அடங்கும்.
02. சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்:- கால் நடைவளர்ப்பு, கடற்தொழில், வியாபாரம், சிறுகைத்தொழில் போன்ற முயற்சிகளுக்கு வழங்கப் படும் கடன்கள் இவ்வகைக்குள் அடங்கும்
03. தொழிற்துறை மேம்பாட்டுக் கடன்:- உற்பத்தி, வியாபார நிறுவனங்களின் தன்மைக்கு ஏற்ப நோக்கத்தினையும் பிணையின் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் கடன்கள் இவ்வகைக்குள் அடங்கும்.
04. வைப்புக்கு எதிரானகடன்:- வங்கியிலுள்ள வைப்புகளுக்கு எதிராக வழங்கப்படும் கடன்கள் இவ்வகைக்குள் அடக்கப்படும்.

## பொருண்மிய வாசல்

# எங்கள் மண்ணின் மாண்பு

எங்கள் நிலமே எங்களின் மாபெரும் சொத்து. எங்கள் வாழ்வும் தாழ்வும, ஏற்றமும் எழுச்சியும் இந்த மண்ணோடு தொடர்புபட்டது. எங்கள்தாயக மண்ணின் விடுதலையையே எங்கள் உயிர் மூச்சாகக் கொண்டு செயற்படுகின்றோம். எங்கள் மண்ணுலகிலே எங்கள் மாவீரர்கள் தம் உயிரினை காணிக்கை ஆக்குகின்றார்கள்.

இத்தகைய பெருமையும் சிறப்பும் மிக்க எங்கள் மண்ணைப் பாதுகாப்பதும், போற்றுவதும், பயன்பெறுவதும் எங்கள் கடமையாகின்றது.

ரஷ்ய இலக்கியமான அன்னை வயல் நாவலில் அதன் ஆசிரியர் "சிங்திஸ் ஐத்மாத்தல் " அவர்கள் குறிப்பிடும் இந்தப் பகுதியை வாசித்துப்பாருங்கள். உங்கள் நெஞ்சு எப்படிப் பூரிக்கின்றது என்று

*'' ஏ மாந்தரே*
*உங்களுக்கு என்ன வேண்டும்*
*நிலமா?*
*இதோ இருக்கிறேன்*
*நான் நிலம்*
*(உங்கள்) எங்கள் அனைவருக்கும்*
*நான் ஒரே மாதிரி*
*நீங்கள் யாவரும் எனக்குச் சமமானவர்கள்*
*உங்களுடைய பிணக்குகள்*
*எனக்கு வேண்டாம்*
*எனக்கு வேண்டியது*
*உங்களின் நட்பு*
*உங்கள் உழைப்பு*
*உழவு காலில் ஒரு தானியத்தைப் போடுங்கள்*
*நான் உங்களுக்கு*
*நூறு தானிய மணிகளைத் தருகின்றேன்.*
*ஒரு கொப்பை நடுங்கள்*
*ஒரு பெரிய மரத்தை தளைத்து வளரச் செய்கிறேன்.*
*தோட்டம் போடுங்கள் நான் பழங்களாகச் சொரிகின்றேன்.*
*கால் நடை வளருங்கள்*
*நான் புல்லாகிறேன்*
*வீடு கட்டுங்கள்*
*நான் சுவராகிறேன்*
*பல்கிப் பெருகுங்கள்*
*நான்உங்கள் அனைவருக்கும் இருப்பிடமாக விளங்குகின்றேன்*
*நான் முடிவற்றவன்*
*எல்லையற்றவன*
*ஆழ்ந்தவன்*
*உயர்ந்தவன்.*

சிதம்பரதிரு


# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது சுயவிபரமடங்கிய வேண்டுகைகளை 2003.07.20 ஆம் நாளிற்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**பணிநிலை**

01) ஆய உதவியாளர் (ஆண்கள்)
02) ஆய அலுவலர் (ஆண்கள்)

**கல்வித் தகைமை:-**

பணிநிலை 01 -க.பொ.த [சா/த] பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

பணிநிலை 02 -க.பொ.த [உ/த] பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

நடுவப்பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

(F - 8403)



# அனுமார் பதில்கள்

● **கலோ அனுமார் அசத்தலான பதில்களுடன் விருட்சமாக வளர்ந்து வரும் உமது வருகைக்கு எனது வாழ்த்துக்கள்! அதுசரி உந்த பீல்ட் பைக் குறூப்பினர் ஏதோ தற்காலிக நடவடிக்கை செய்யினமாம். பயப்பிடவேண்டியவர்கள் உண்மையாக சிறுபான்மையினரோ அல்லது?...**

ஜெ.குமரன்
தனிப்பனை
செம்பியன்பற்று.

அவர்கள் கொசோவையும் பலஸ்தீனத்தையும் பங்களாதேஷையும் படத்தில் பார்த்துவிட்டு பயிற்சி செய்கிறார்கள். தமிழர்கள் பொங்கி எழுந்தால் அது அவர்களின் எந்தப்பாடத் திட்டத்திற்குள்ளும் அடங்காது என்பதைத்தானே அண்மையிலும் காட்டி இருக்கிறோமே.

● **புதுக்கவிதைகள் மலர்ந்து மணம் பரப்பும் இந்நாள்களில் மரபுக்கவிதைகள் மறைந்து வருகின்றனவே என்று ஆதங்கப்படுகிறார் பண்டிதர் ஐயா ஒருவர் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.**

க.இரத்தினசிங்கம்
கிளிநொச்சி.

மரபுக்கவிதைகள் அன்று மணம் பரப்பியது போலவே புதுக்கவிதைகள் இன்று மணம் பரப்புகின்றன. இனிமேல் மரபுக்கவிதைகளுக்கும் காலம் வரலாம். நன்றாக மணம் பரப்புபவையே அவ்வப்போது நிலைக்கும்

● **அனுமாரே! நன்றாக கற்றுப்பரீட்சையை திறமையாக எழுதியும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமையால் சோர்வடையும் மாணவர்களுக்கு உங்கள் அட்வைஸ் என்ன?**

எஸ்.வசந்தி
வட்டக்கச்சி.

பல்கலைக்கழகம் மட்டும் தான் சமூகத்தில் அனைவரையும் வழிநடத்துவது இல்லையே. சமூகம் ஒரு பல்கலைக்கழகம் தானே. படித்து முன்னேறு சமூகத்தை.

● **அனுமாரே எனக்குப்பிடித்த பொழுதுபோக்கு காதலிப்பது உமக்கு பிடித்த பொழுது போக்கு என்ன?**

சி.சுரேஸ் பிரபா
யூனிட்-01
பூந்தோட்டம்.

உங்கள் பொழுது போக்குக்காக மற்றவர்களின் வாழ்க்கையைப்போக்காதீர்கள். காதலையும் பொழுது போக்காதீர்கள்.

● **அனுமாரே! உருவாகப் போகும் நாட்டுப்பற்றாளர் சங்கத்தில் டக்ளஸ் தேவானந்தாவும் சேரவுள்ளாராமே!**

தமிழ்,
வள்ளிபுனம்.

ஏதேனும் பிரயோசனமாகக்கதைப்போமே தமிழ். எப்படி இம்முறை வெங்காய விளைச்சல் வள்ளிபுனத்தில்?

● **அறுவைச்சிகிச்சையின் போது உயிரிழந்த ஈரானியச் சகோதரிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

செல்வராசா,
காரைநகர்.

தங்களைப்பிரித்து விடும்படி அவர்கள் வைத்தியர்களைக் கேட்டபொழுதே இந்த உலகை விட்டுப்பிரிவதற்கும் சம்மதித்து விட்டார்களே. அதன் பின் தானே அறுவைச்சிகிச்சையே இடம் பெற்றது. அத்தனை வயதுக்குப்பின்பும் சேர்ந்திருப்பது என்பது கடினமானது போலும்.

● **அனுமாரே! மீண்டும் யுத்தம் தொடங்கினால் இந்தியாவும் அமெரிக்காவும் உதவும் என சிறிலங்கா அரசு கூறுகிறதே. இந்தியா வந்தால் அமெரிக்காவுக்கு பிடிக்காது. அமெரிக்கா வந்தால் இந்தியாவுக்குப்பிடிக்காது. அரசாங்கத்தின் எண்ணம் சாத்தியமாகுமா?**

கே.ரி.பிரியா
முள்ளியவளை.

இருவருக்கும் ஒன்றையொன்றை பிடிக்காதோ என்னவோ இருவருக்கும் இலங்கையைப் பிடிக்குதே. அதனால் எதுவும் செய்வார்கள் அல்லவா.

● **எமது விடுதலைப் போராட்டத்தின் வீச்சையும் வெற்றிகளையும் பறைசாற்றும் நினைவுச் சின்னங்களை மறைத்தபடி தற்போது எழுந்து கொண்டிருக்கும் விளம்பரப் பலகைகள் பற்றி கவனத்தில் எடுக்க யாருமில்லையா?**

பிரகாஸ்,
•கிளிநொச்சி.

விளம்பரப்பலகைகள்- அவை நேற்றய தூறலில் முளைத்தவை தானே விரைவில் மடிந்து விடும்.

நினைவுச்சின்னங்கள் எங்கள் குருதியில் எழுந்தவை அல்லவா. சிரஞ்சீவிகள் அவை. கவலைப் படாதீர்கள்.

● **பெருகி வரும் சினிமாத் தொடர்களும் எங்கள் தாய்மாரும். எதிர்காலம் என்னவாகும்.**

சு.விக்கி
புதுக்குடியிருப்பு.

சிலவேளைகளில் அவர்களின் பிள்ளைகள் சினிமாத்தொடர்களின் வில்லன்கள் போல் உருவாகலாம் அல்லவா.

● **பெரிய கொலைக்குற்றங்களுக்கெல்லாம் நீதி வழங்குகிறார்களாம்! சிங்களப்படைகள் செய்த கொலைக்குற்றங்களுக்கு ஏன் நீதி வழங்கப்படவில்லை.**

ச.சரணியா,
புதுக்குடியிருப்பு.

அவர்களுடைய கார், அவர்களுடைய பெற்றோல், அவர்கள் எப்படியும் ஓடுவார்கள். ஆனால் ஒன்று. எங்கள் வீதிகளில் ஓடவிடமுடியாதல்லவா.

● **என்னைத்தவிர வேறொருவரையும் நினைக்கக்கூடாது நினைத்தால் கொன்றுவிடுவேன் என்று கூறும் மனைவி பற்றி என்ன கூறுகிறீர்கள் அனுமாரே?**

கா.சுரேன்
நாவாந்துறை.

அவளிடத்தில் கவனமாக இருங்கள். சமையலறையில் கூரிய ஆயுதங்களை பாவிப்பதை இயலுமான அளவு தவிருங்கள் என்று உங்களுக்கு ஆலோசனை கூறலாம்.

---

(08ஆம் பக்கத்தொடர்ச்சி)

நாட்டின் சனா திபதியாக இருந்தால் கூட அவரின் உழைப்புத்தான் கௌர வமே தவிர அவரின் பதவிக்கு ஒரு போதுமே கௌரவம் கிடைத்துவிடாது. உலகின் சரித்திர நாயகர்கள், நாயகிகள் எல்லோருமே விடாமுயற்சியான உழைப்பாளிகளாகவே இருந்துள்ளார்கள். அவர்களின் உழைப்புத்தான் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இறந்து போய்விட்டாலும் இன்றும் எம்மத்தியில் அவர்களின் பெய ரும் புகழும் நின்றுலாவிக் கொண்டிருக்கிறது. உலகின் வாழ் வாங்கு வாழ்ந்தவர் என்ற பெருமையும் பெறவைத்திருக்கிறது. நாம் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் அனைத்துக்குமே இந்த விடாமுயற்சியுடைய உழைப்பாளிகளே காரணம் என்பதை மறந்து விடவோ, மறுத்து விடவோ முடியாது.

ஒரு நாட்டின் விஞ்ஞா னம், தொழில்நுட்பம் மட்டுமல்ல கலைகள், காவியங்கள், பண்பாட்டு முறைகள் கூட இவ் உழைப்பாளி கள் மூலமே எமக்குக் கிடைத்துள்ளன. எனவே உழைப்பதற்குப் பல ஊடகங்கள் உள்ளன. இவற்றை உணர்ந்து எம்நிறைவான வாழ்விற்கு ஆதாரமான உழைப்பை நல்கி உயர வழிவகுப்போம். சாதாரண விளையாட்டின் மூலமே தன்னையும் வளர்த்துதன் நாட் டுக்கும் பெருமை தேடிக்கொடுத்த முத்தையா முரளிதரனி லிருந்து நிலவைத் தொட்டு வந்த நீல் ஆம்ஸ்ரோங் வரை உழைப்பையே தமது மூலதனம் என்பதைக் காண் கின்றோம்.

ஆபிரகாம்லிங்கன், மகாத்மாகாந்தி, நெல்சன் மண் டேலா, இவர்களின் வரிசையில் எமது தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் வரை உழைப்பினால் உயர்ந்தே தலை வர்கள் ஆகினார்கள் என்பதை மனதில் இருத்திக் கொண்டு நாம் நம்மை உயர்த்திக் கொள்வதுடன் நம்நாட்டையும் மேன்மையுறச் செய்வதற்கு இன்றே இப்பொழுதே முழுமூச்சுடன் விடா முயற்சியான உழைப்பை நல்கிவளமுடன் வாழ்வோம்.

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –26



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –26

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –25



**மாணிக்கவாசகம் -சாந்தா**
**மு/முள்ளியவளை**
**தமிழ் வித்தியாலயம்.**

### பரிசுக்குரிய வரிகள்

இது உணவுப்பொங்கலல்ல
தமிழர் உணர்வுப்பொங்கல்
இது உண்பதற்கு அல்ல
தமிழர் உணர்வை பறைசாற்ற

### பாராட்டுக்குரிய வரிகள்

*ஏந்திடும் பானைக்குள் அன்னமல்ல*
*ஏங்கிய மக்களின் எண்ணங்களே*
*பொங்கி எழுந்திடும் நாளிகையில்*
*அதை அள்ளி பருகிடும் அகிலமுமே*

மா. இளந்தென்றல்,
தமிழீழம

*பொங்கி வழிகிறது மக்களின் புரட்சி*
*இதுவே இன்றைய நிலை காட்சி*
*இன்றைய சமாதானம் இதற்கு சாட்சி*
*இனி வருமோ சூழ்ச்சி?*

ப. சுரேந்திரதாஸ்,
இராமநாதபுரம்.

*எங்கள் மண்ணை விட்டு விடு*
*சொந்த ஊரில் வாழவிடு*
*எம் ஊரை விட்டு ஓடிவிடு*
*என்று தமிழ் பொங்கியது.*

மா. சிறிதரன்,
118 கனகாம்பிகைக்குளம்.

*கல்லூரியில் தலைதூக்கி*
*கன்னித்தமிழ் கொடிதூக்கி*
*கயவர் தடைதாக்கி - உலவுதே*
*ஊரெல்லாம் பொங்குதமிழ்*

க. அப்பன்
கிளி॰ சாந்தனூர்.

*சங்கு முழங்க சனங்களே புறப்படுங்கள்*
*பொங்கு தமிழில் புதுயுகம் சமைக்க.*
*எங்கும் காணா என்விழாக்கூட்டம்*
*பொங்குதமிழில் பார்க்கின்றேன்.*

எஸ்.சிவா,
பருத்தித்துறை.

*மக்கள் புரட்சி வெடிக்கட்டும்*
*சுதந்திர தமிழீழம் மலரட்டும்*
*பொங்குதமிழாய் பொங்கட்டும்*
*திலீபன் அண்ணன் கனவு நனவாகட்டும்*

நாவண்ணன்,
முள்ளியவளை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.



வவுனியாவில் இடம்பெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வில் பங்கேற்ற ஊர்தி ஒன்று படத்தில். இதுவரையும் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்துக் கரும்புலிகளினதும் உருவப்படத்தைத் தாங்கி கப்பல் வடிவில் அமைந்த இவ்வூர்தி நகரின் பல பகுதிகளிலும் அஞ்சலிக்காக ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. கரும்புலி நாளையொட்டி பல இராணுவக்கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் இதுபோன்ற ஊர்திகள் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டன.



திருகோணமலையில் தற்பொழுது உல்லாசக்கடற்கரையாக மாறிவரும் நகரின் கடற்கரை மாலை நேரங்களில் மக்களால் நிறைந்து காணப்படும் ஆயினும் அதேகடற்கரையிலேயே நகரின் கழிவு நீர் வாய்க்கால் வந்து முடிவடைவதால் ஏற்பட்ட கழிவு நீர் குட்டையில் காகங்கள் உல்லாசமாக குளித்து மகிழ்வதைக்காணலாம்.


# 1வது பிறந்தநாள் வாழ்த்து

## அலக்ஷன் ALAXAN

**07.07.2003**



பிரான்ஸ் திரு.திருமதி பாக்கியநாதன் -ரேவதி தம்பதிகளின் அன்புப்புதல்வன் அலக்ஷன் தனது 1வது பிறந்தநாளை 7.7.2003 அன்று வெகு விமரிசையாக கொண்டாடினார். அலக்ஷனை அப்பா, அம்மா, அக்கா லக்ஷாயினி, அர்சிதாயினி, கலட்டியில் இருக்கும் அய்யா, அம்மம்மா, திருநெல்வேலி பஞ்சு பெரியப்பா-பெரியம்மா, சடோ பெரியப்பா-விஜயா பெரியம்மா, துரைசிங்கம் மாமா பெரியத்தை சந்திரசேகரன் மாமா-பவானிஅத்தை நல்லூரில் இருக்கும் சிறி பெரியப்பா-சித்தி, பெரியம்மா, கலட்டி சிறிபெரியப்பா கருணா பெரியம்மா,மோகன் பெரியப்பா- ராதா பெரியம்மா, ஆறுகால்மடம் குமார் சித்தப்பா-கிருஷா சித்தி, கிறி மாமா, பிரபா சித்தி, லண்டன் பெரிய மாமா, ஜெர்மனி பொன்னி மாமா பாமினி அத்தை, இந்தியாவிலிருக்கும் பரஞ்சோதி பெரியப்பா-உமா பெரியம்மா, அக்காமார், அண்ணன்மார், தங்கைமார், மச்சாள்மார், மச்சான்மார், இவர்களுடன் பாரிஸ்ஸில் இருக்கும் மாணிக்கம் மாமா-ராணி அத்தை, அம்பி மாமா-பாமினி அத்தை மச்சாள்மார்- சிந்து, பைரவி, பாரதி, வேதிகா, ஆர்த்திகா, மச்சான்-விவேக் மற்றும் உற்றார், உறவினர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

புவனரூபன்,
(ராஜன்)
கொழும்பு.

V. PAKIYANATHAN
44,RUE GE CREVECOEUR
93300 AVBER.
VILLIERS,
FRANCE.



[3425]

# EXPOAIR

*your friend in the skies*



எக்ஸ்போ எயார்

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்- 021-2223891, 074 512666
01-360290, 0712-349999, 0712-348888

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 11 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.